டிசம்பர் 31, 2000

அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



அரசு—புலிகள் பேச்சு விரைவில் நடக்கட்டும்

—அடைக்கலநாதன்



பேச்சு என்று பிரபாகரன் இன்று எங்கள் வழியில்

—டக்ளஸ்

## ஈழப் போரை கைவிட்டு நிற்கும் தமிழ்க் கட்சிகள் கூறுவது என்ன ?

இரு தரப்பு பேச்சு நடந்தே ஆக வேண்டும்

—சித்தார்த்தன்





புலிகளுடன் அரசு இப்போது ஏன் பேச்சு?

—பெருமாள்

உள்ளே கண்ணைக் கவரும் வண்ணக் கலண்டர்

# ராஜ்குமாரின் யோகசக்தி வீரப்பனை வென்றுவிட்டது!

## கோபால், நெடுமாறன், மணி முயற்சிகள் மழுங்கடிப்பு

**க**ன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்திக் கொண்டு போய் சந்தன வீரப்பன் காட்டில் சிறைவைத்தது பழைய கதை. 108 நாட்களின் பின் வீரப்பன் தனது கைதியை விடுதலை செய்ததும் பழைய கதைதான்.

ஆனால் வீரப்பன் ஏதோ நிர்ப்பந்தம் காரணமாக ராஜ்குமாரை விடுதலை செய்யாமல் விட்டிருந்தாலும் ராஜ்குமார் எப்படியாவது உயிர் தப்பி வந்திருப்பார் என்பது புதிய கதை.

யோகக்கலை, கூடு விட்டுக்கூடு பாய்தல் போன்ற வித்தைகளைக் கற்றறிந்தவர் ராஜ்குமார். அவரை வீரப்பனால் ஒன்றும் செய்திருக்க முடியாது என்று கூறுகிறார்கள் ஆத்மீகவாதிகள்.

வீரப்பன் பிடியிலிருந்து ராஜ்குமாரை மீட்டு வருவதற்காக


ராஜ்குமார்

நக்கீரன் கோபால், தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், கொளத்தூர் மணி ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகள் இந்த அறிவிப்பின் மூலம் மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றன.

ராஜ்குமாருக்கு யோகக்கலையைப் போதித்த குரு ஹொன்னப்ப பக்கீரப்ப நாயக்கர். இவர் வீரப்பன் பிடியில் ராஜ்குமார் சிக்கி 100 நாட்களைக் கடந்த போது இது பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ராஜ்குமார், வீரப்பனை எப்படியும் மடக்கி விடுவார் என்று அன்றைய தினம் அறிவித்தார் நாயக்கர்.

"டெலிப்பதி எனப்படும் மானசீக சக்தி மூலம் ராஜ்குமாருடன் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன்" எனவும் நாயக்கர் கூறினார்.


வீரப்பன்

சில தினங்களின் பின், அதாவது 108ஆவது நாள் ராஜ்குமார் நலமாக வீடு வந்து சேர்ந்து விட்டார்.

நாயக்கர் ஒரு இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி. வயது 65. ராஜ்குமாரின் யோகாசன குருவாக இருந்தாலும் அவரை விட ஏழு வயது இளையவர். சிஷ்யனை அண்ணா என்று அழைக்கிறார். தனது தந்தைக்கு சமமானவர் என்கிறார். ஆயினும் யோகக்கலையைக் கடந்த 21 வருடங்களாக ராஜ்குமாருக்குப் போதிக்கும் குருவாக இருந்து வருகிறார்.

ராஜ்குமார் ஒரு யோகி. எத்தகைய பயங்கர சூழ்நிலையையும் அவரால் சமாளிக்க முடியும். காட்டிலும், மலை முகட்டிலும் நீரின்றி உணவுஇன்றி, தூக்கம் இன்றி எத்தனை நாள் வேண்டுமானாலும் அவரால் வாழ முடியும். தன்னம்பிக்கையே அவருக்கு மூலபலம். வீரப்பனே அவருக்குக் காவல் காரனாய் இருப்பான் என்று நாயக்கர் கூறினார்.

ராஜ்குமாருக்கு 1979ஆம் ஆண்டு முதல் யோகக்கலையைப் போதித்து வந்திருக்கிறார் நாயக்கர். ஆயினும் 1961ஆம் ஆண்டுக்கு முன்னரே அவருடன் தொடர்பு இருந்திருக்கிறது.

அப்போது நாயக்கர் பொலிஸ் அதிகாரியாகச் சேர்ந்து பயிற்சி பெற்று வந்தார்.

அவ்வேளையில் கடும் வெள்ள அபாயம் ஏற்பட்டது. வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார் நடிகர் ராஜ்குமார்.

புகழ்பெற்ற நடிகர் வீதியில் இறங்கி வெள்ள நிவாரண நிதி திரட்டிய போது பெருமளவு பணம் சேர்ந்தது.

"அந்தச் சந்தர்ப்பத்தில் ராஜ்குமாரின் கரங்களைப் பற்றிப்பிடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரைத் தொட்டதுமே மின்சார சக்தி என் உடலில் பாய்ந்தது போல இருந்தது எனக்கு" என்று தெரிவித்தார் நாயக்கர்.

அதன் பின் ராஜ்குமாரின் யோகாசன குருவானார் நாயக்கர்.. இரு வருட காலம் நாயக்கர் வீட்டுக்கு வந்தே யோகக் கலை பயின்றார் ராஜ்குமார். பின்னர் ராஜ்குமாருக்கு நேரம் கிடைக்கும் போது அவருக்கு வசதியான இடத்தில் யோகாசனப் பயிற்சி அளித்தார் நாயக்கர்.

இவ் வேளையில் நடிகர் ரஜினிகாந்தை நாயக்கருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார் ராஜ்குமார். "ரஜினிகாந்தும் எனது மதிப்பு வாய்ந்த சிஷ்யர்" என்று கூறினார் நாயக்கர்.


ரஜினி

ராஜ்குமாரின் யோகாசன சக்தி மிகவும் அளவு கடந்த ஆற்றலைக் கொண்டது என்று நாயக்கர் தெரிவித்தார். அவர் எங்கே எப்போது யாருடைய மகனாகப் பிறக்க வேண்டும் என்று விரும்பினாலும் தனது உடலை விட்டுப் பிரிந்து தனது உயிரைப் புதிய இடத்திற்கு மாற்றிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார் என்று நாயக்கர் கூறினார்.

"வீரப்பனால் கடத்திச் செல்லப்படுவதற்கு முன் சில மாத காலம் ராஜ்குமார் மிகவும் உச்சக்கட்ட யோகக்கலையை என்னிடம் பயின்றார். பரகயபிரவேஷ எனப்படும் இந்த யோகக்கலை மூலம் ஒருவர் தனது உடலை விட்டு வேறொருவர் உடலில் புகுந்து கொள்ள முடியும். இந்த வித்தையை ஒரு புனிதமான இடத்தில் இருந்துதான் செய்ய முடியும். எனவும் நாயக்கர் கூறினார்.

நாயக்கர் கூறிய அந்த


ஹொன்னப்ப பக்கீரப்ப நாயக்கர்

யோகக்கலை 'கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை போன்றது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அந்த வித்தை தெரிந்த ராஜ்குமார் வீரப்பன் பிடியில் இருந்து மீண்டு வருவது சஷ்டம் அல்ல. ஆனால் அந்த வித்தையைச் செய்யக்கூடிய இடத்தில் அவர் கைதியாக வைக்கப்பட்டிருக்க வில்லையே எனவும் கூறப்பட்டது.

ஆயினும் நாயக்கர் இந்தக் கருத்தை தெரிவித்த சில தினங்களில் ராஜ்குமார் விடுதலை பெற்று வந்து விட்டார். எனவே மேற்கொண்டும் ராஜ்குமாருடைய யோகக்கலை வல்லமையை பரீட்சித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

## பித்தன் பதில்கள்

ஜெ.சதீஸ்குமார், கொழும்பு-06.
கே : அன்புள்ள பித்தன், கொஞ்ச நேரமும் ஒரே இடத்தில் இருக்க மாட்டீர்களாமே?
ப : கொஞ்சம் விட்டால் மூல வியாதிக்காரன் என்று முத்திரையே குத்தி விடுவீர்கள் போலிருக்கிறதே!

ஆர்.ரி.காந்தன், தெகிவளை.
கே : நம்நாட்டில் சமாதானத்தை நிலைபெற வைப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
ப : கண்டிப்பாகச் சண்டை பிடிக்கக் கூடாது, சண்டை ஒரு போதும் சமாதானத்தைக் கொண்டு வராது, சம்பந்தப் பட்டவர்களுடன் மனம் திறந்து சாவகாசமாகப் பேசினால்தான் பிரச்சினைதீரும், பகைமை ஒழியும், சமாதானம் மலர்ந்து நிலை பெறும்.

கனகேஸ்வரி, கொழும்பு-12.
கே : கல்லூரி வாசலில் பெண்கள், கல்யாண வீட்டில் பெண்கள் - எதில் குளிர்ச்சி அதிகம்?
ப : அது பார்ப்பவர்களின் வயதைப் பொறுத்தது. முன்னையதில் ஒரே இளசுகள் என்பதால் இளவட்டங்களுக்குக் குளிர்ச்சி அதிகம். மற்றதில் எல்லாம் கலந்திருக்கும் என்பதால் சற்று வயது ஏறியவர்களுக்குக் குளிர்ச்சி.

பிரணவன், தெகிவளை.
கே : காதலிப்பது ஒருவனை, கல்யாணம் செய்வது இன்னுமொருவனை. இப்படியான பெண்களைப் பற்றி?
ப : அவர்கள் இன்றைய தமிழ் சினிமாப் படங்களை அதிகம் பார்ப்பவர்களாக இருப்பார்கள்.

கே.இராசதுரை, வத்தளை.
கே : தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த ஒருமாத கால யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் நிராகரித்து விட்டதே ஏன்?
ப : யுத்தம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதால் தான்! ஏன் யுத்தம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்ற கேள்விக்கு பிரதமர் ஏற்கெனவே பதிலளித்து விட்டார். "சண்டை... சண்டை புலிகள் சாகும் வரை அல்லது சரணாகதி அடையும் வரை" என்று பிரதமர் திருவாய் மலர்ந்து அருளியிருக்கிறார் அல்லவா?

பா.பிரசாந்தனன், கொழும்பு-05.
கே : திரைமறைவில் பரவலான மத மாற்றங்கள் இடம் பெற்றுவருவதாக அறியப்படுகிறது. இதுபற்றி பித்தனே உமது கருத்து என்ன?
ப : தொற்றுநோய்...
உலகில் உள்ள அனைத்து வறிய நாடுகளிலும் சமூக ஒதுக்கலுக்கும் அடக்குமுறைக்கும் இலக்கான பலரைப் பீடித்துள்ள தொற்றுநோய் இது.

கு.தேவி, மன்னார்.
கே : அடம் பிடிக்கும் மனைவியை எப்படி வழிக்குக் கொண்டு வர முடியும்? ஏதாவது ஒரு உபாயம் சொல்லுங்களேன்.
ப : எந்தப் பெரிய தேராயினும் 'வடம்' பிடித்தால் நிலைக்கு வந்துவிடும். பொறுமையும் அன்புமே இவ்வடத்தின் கயிறுகள்.

ஐ.அருளானந்தன், யாழ்ப்பாணம்.
கே : இக்கால இளைஞர்கள் அதிகம் கெட்டுப் போவது எதனால்?
ப : பெரும்பாலும் "இன்டர் நெட்"டினால் என்று சொல்லலாம்.

யாழ்ப்பாணம்

# தமிழ்க் கட்சிகள் கூறும் மாறுபட்ட கருத்துக்கள்

### அடைக்கலநாதன் எம்.பி.

புலிகளைப் போல அரசாங்கமும் யுத்த நிறுத்த அறிவிப்புச் செய்ய வேண்டும்.

பல அவலங்களுக்கு அவசர காலச் சட்டமே காரணமாக இருக்கிறது. அதனால் அந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம். நாடாளுமன்றத்தில் தொடர்ந்து அதை எதிர்த்து வாக்களிப்போம்.

யுத்த நிறுத்தம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் அவருடைய அமைச்சர்களுக்குமிடையே முரண்பாடு இருக்கிறது. ஜனாதிபதி சமாதானம் என்கிறார். பிரதமர் யுத்தம் என்கிறார்.

யுத்த நிறுத்தம் செய்ததைக் கொண்டு புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டதாகக் கூறமுடியாது.

பிரதமரின் யுத்த முழக்கம் பேச்சுவார்த்தைக்குக் குழி பறிக்கும் முயற்சியாக இருந்தாலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை.



இன்றுள்ள சூழ்நிலையில் புலிகளுடன் அரசாங்கம் பேசினால் தான் யுத்தம் நிரந்தரமாக நின்று சமாதானம் ஏற்படும். அரசும் புலிகளும் பேசி எடுக்கும் எந்த முடிவையும் நாம் ஏற்றுக் கொள்வோம். எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுக்கே புலிகள் இயக்கம் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

புதிய அரசியலமைப்பை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். புலிகளும் அதை ஏற்கனவே நிராகரித்து விட்டார்கள்.

அரசு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கும் வேளையில் அரசின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் பட்டால் அதை நாம் எதிர்த்து வாக்களிப்போம்.

பிரதமர் கூறுவதுபோல் யுத்தத்தால் பிரச்சினையைத் தீர்க்க முடியுமானால் 18 வருடங்களாகியும் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது ஏன்? யுத்தத்தால் அழிவுதான் ஏற்படும். எமது இனத்தை அழிக்கும் முயற்சியிலேயே பிரதமர் போர் நடவடிக்கையை வலியுறுத்துகிறார்.

நோர்வே புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதாகக் கூறப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அப்படிக் கூறுபவர்கள் விஷயம் புரியாதவர்கள்.

புலிகள் இயக்கத்துக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. நமது இயக்கம் ஒரு ஜனநாயக இயக்கம். என்றாலும் எமது கொள்கைகள் புலிகள் இயக்கக் கொள்கைகளோடு ஒத்துப்போவதால் பலரும் அப்படித் தப்பாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி வழங்குவதும் படையினருக்குப் பயிற்சி அளிப்பதும் இந்தியா மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது. நோர்வேயின் சமாதான முயற்சிக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்தியப் பங்களிப்பு இல்லாமல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

ஜனவரி முடிவுக்குள் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடப்பது நிச்சயமாகிவிடும் என்று நம்புகிறோம். தவறினால் மக்களைத் திரட்டிப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு அழுத்தம் கொடுக்க இருக்கிறோம். இதற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

முன்னாள் போராளிக் குழுக்களாகிய நாங்கள் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு, பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்காக ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்திருக்கிறோம். நோர்வே அரசின் கருத்துப்படி பிரபாகரனும் அந்த வழியைத்தான் இப்போது தேர்ந்தெடுத்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை, சமாதானம், அபிவிருத்தி என்றெல்லாம் பிரபாகரன் இப்போது கூறுகிறார்.



நாங்கள் புத்திசாலித்தனமாக எடுத்த சரியான முடிவுக்கு எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் பிரபாகரன் வந்திருக்கிறார். அதுவும் மக்களுக்குப் பெரும் நஷ்டங்கள் ஏற்பட்ட பின்னர்.

தமிழீழ விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுப்பதும் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுப்பதும் வெவ்வேறு விஷயங்கள்.

எங்களைத் தனது கட்சியைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று பிரபாகரன் கூறலாம். ஆனால் நாங்கள் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்தோம் என்று அவரால் சொல்ல முடியாது. அதனால்தான் பிரபாகரன் குழம்பிப் போய் இருக்கிறார் என்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் யார் குற்றியும் அரிசியாக வேண்டும். பிரபாகரன் குற்றுவதைப் பார்த்தால் அரிசி, மாவாகி விடும் போல் இருக்கிறது. அப்படி நடப்பதை நாம் விரும்பவில்லை.

உண்மையாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பிரபாகரன் முன்வருவாரேயானால் நாம் அவருக்குப் போட்டியாக அரசியல் நடத்த மாட்டோம். உடனடியாக எதையும் செய்து முடித்து விட இயலாது. கட்டம் கட்டமாகத்தான் காரியங்களை நடைபெறச் செய்ய வேண்டும்.

எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு நல்ல அரங்கு. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை விடச் சிறந்தவை.

இறுதிப் பெறுபேற்றை அடைவதற்கு நாம் கிடைக்கும் ஓர் அமைப்புக்குள் இருந்து செயற்பட வேண்டும்.

நான் முடிசூடிக் கொள்வதற்கோ அல்லது வரலாற்றில் இடம் பெறுவதற்கோ அமைச்சர் பதவியை ஏற்கவில்லை. வசதியான எல்லா வழிகளிலும் மக்களுக்குச் சேவை செய்வதற்கே பதவியை ஏற்றேன். எதிர்க்கட்சியை விட அரசாங்கத்துடன் இருந்தால் மக்களுக்குச் சேவை செய்வது இலகு.

அமைச்சராக இருப்பதால் பொதுவாக ஒவ்வொரு வாரமும் ஜனாதிபதியைச் சந்திக்கிறேன். இந்த வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

கிடைக்கக் கூடியதாக உள்ள அமைப்புக்குள் இருந்தே நாம் செயற்பட வேண்டும். மக்களுக்கு இனிமேல் சேவை செய்ய முடியாது என்று எப்போதாவது தோன்றினால் அந்தக் கணமே அமைச்சர் பதவியைத் தூக்கி எறிய நான் தயங்க மாட்டேன்.

பிரபாகரனுக்குத் தேர்தல் போன்ற

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

**தமிழீழப் போராளிகளாக ஆரம்பித்து இடையில் ஈழத்தையும் போரையும் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்துள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நால்வருடைய (வித்தியாசமான) கருத்துக்கள் இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ரெலோ எம்.பி செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவரும் முன்னாள் எம்.பி. யுமான த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரனர் அணி) தலைவரும் வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான ஏ.வரதராஜப்பெருமாள் ஆகியோருடன் சுடர் ஒளி நிருபர் பேசியபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கமே இங்கே இடம் பெற்றுள்ளது.**

### [illegible]தார்த்தன்

புலிகளுடன் அரசாங்கம் பேசித்தான் ஆக வேண்டும். பேச்சுவார்த்தையை மனதார வரவேற்கிறோம். இனப்பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினை. யுத்தத்தில் புலிகளைத் தோற்கடித்தாலும் அல்லது முற்றாக அழித்தாலும் இனப்பிரச்சினை இருக்கவே செய்யும். அதைப் பேசித்தான் அரசியல் தீர்வு காண வேண்டும்.

புலிகள் கேட்டது போல யுத்த நிறுத்தத்துக்குப் பின்பு பேச்சுவார்த்தையா அல்லது அரசு கூறுவது போல யுத்தத்தின் மத்தியில் பேச்சுவார்த்தையா என்பதெல்லாம் பிரச்சினையல்ல. இருதரப்புக்கும் பரஸ்பரம் அவநம்பிக்கை இருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்தால்தான் அது தீர்ந்து நன்மை ஏற்படும்.



பேச்சுவார்த்தைக்கு இரு சாராரும் நிபந்தனை விதிக்கக்கூடாது. சாதகமான சூழ்நிலை வேண்டும் என்கின்றனர் புலிகள். ஈழம் இல்லை. பிரிவினை இல்லை இரண்டையும் விட்டுவிட்டுப் பேச வாருங்கள் என்று புலிகளை அழைக்கிறது அரசு.

எல்லாத் தமிழ்க்கட்சிகளுடனும் கலந்து பேசி நிலைப்பாடுகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற நிலை இன்று இல்லை. அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை விட வேறு எதையும் நாம் கோரப்போவதில்லை. யாருடன் பேசுவது என்பதல்ல, தீர்வுதான் முக்கியம்.

இன்றைய நிலையில் புலிகள் இல்லாமல் சமாதானம் வர முடியாது.

அரசு, ஐ.தே.கவுடன் கலந்து பேசி ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தேவையும் இருக்கிறது.

பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எப்பொழுதும் வலியுறுத்தி வருகிறோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் யுத்தமும் இருக்காது, பொருளாதாரத் தடையும் இருக்காது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கத்துக்குள் பல குழப்பங்கள் இருக்கின்றன. எனினும் சந்திரிகா தனது நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை என்றே நம்புகிறேன்.

வடக்குக்கிழக்கைப் பொறுத்தவரையில் முஸ்லிம்கள் ஒரு முக்கியமான சக்தியாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை உள்ளடக்காமல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாது.

வடக்கு முஸ்லிம்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப் பட்ட விவகாரம் வேறு இருக்கிறது.

வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு எப்படி அமைய வேண்டும் என்பதை முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளே தீர்மானித்துக் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

நாம் அரச படைகளுடன் இணைந்திருக்கவும் அரசு தந்த ஆயுதங்களை வைத்திருக்கவும் வேண்டிய நிர்ப்பந்தத்தைப் புலிகளே எமக்கு ஏற்படுத்தினர். நாம் எங்களையும் எங்கள் அலுவலகங்களையும் பாதுகாத்து மக்களுக்குச் சேவை செய்ய அந்த ஏற்பாடு தேவைப்பட்டது. இன்றும் புலிகளினால் ஆபத்து இருக்கவே செய்கிறது.

எனவே எங்கள் நிலைப்பாட்டில் மாற்றமில்லை. என்றாலும் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கு அரசை வலியுறுத்துகிறோம்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ளப் போவதில்லை என்று இந்தியா அறிவித்திருக்கிறது. எனினும் அங்குள்ள சூழ்நிலைகளே அதைத் தீர்மானிக்கும். எந்த நாட்டுக்கும் அதன் சொந்தப் பிரச்சினைகளே மிக முக்கியமானவை.

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

### வரதராஜப்பெருமாள்

எதையும் உரியவர்களுடன் பேச வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் ஓர் அரசியல் விவகாரம். அதை அரசியல் தலைவர்களுடன்தான் பேச வேண்டும். வன்னிக் காட்டில் புலிகளுடன் அல்ல.

அரசியல் தலைவர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்த பின்னர் அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

பின்னர் அதை நடைமுறைப்படுத்தும் போது புலிகளுடன் சிக்கல் ஏற்படலாம். அப்போது அவர்களுடன் பேசுவது பற்றிச் சிந்திக்கலாம். இப்போது அவர்களுடன் என்ன பேச்ச வேண்டிக் கிடக்கிறது?

மொத்தத்தில் எமக்குப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இல்லை என்பதல்ல இப்போது அடிபடும் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை இல்லை. அவ்வளவுதான்.

இப்போது பேச்சுவார்த்தை பற்றிப் பேசப்படும் அளவுக்குப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற நம்பிக்கையும் எமக்கு இல்லை. புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தித்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நிலை இல்லை. புலிகள் கையில் ஆயுதம் இருப்பதால்தான் இன்று எல்லோரும் புலிகளைப் பற்றிப் பேசுகிறார்கள்.

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அரசாங்கம் தொடர்ந்து சொல்லி வருகிறது. புலிகள் இப்போது அதைச் சொல்லியிருப்பதுதான் புதிது.

பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைக் கடத்த வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

யுத்த நிறுத்தம் பற்றியும் பேசப்படுகிறது. யுத்த நிறுத்தத்தை இரு தரப்பும் மேற்கொள்ள வேண்டும். கொலைகளை இருதரப்பும் நிறுத்த வேண்டும். துப்பாக்கிகளை அத்தனை பேரும் கீழே போட வேண்டும். சட்டபூர்வமான நிறுவனம் (அரச படைகள்) அப்போது துப்பாக்கிகளுடன் முகாம்களுக்குள் செல்லும். சட்டபூர்வமற்ற நிறுவனங்கள் (புலிகள்) சட்டபூர்வமாகவே ஆயுதங்களை ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும். அப்போதுதான் யுத்த நிறுத்தம் சாத்தியமாகும்.

ஜனாதிபதி புலிகளுக்கு எதிராக யுத்தம் நடத்துவதால் அவருக்கு நாம் ஆதரவு வழங்கவில்லை. அவர் ஒரு வித்தியாசமான தலைவராகக் காணப்பட்டதாலும் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை அவர் எடுத்ததனாலுமே அவரை ஆதரித்தோம். முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று வலியுறுத்துவோம். முன்னெடுப்பார் என்று நம்புகிறோம்.

ஜனாதிபதியை நாம் ஆதரித்தாலும் அரசாங்கம் மீது எங்களுக்கு அதிருப்தி உண்டு. போக்குவரத்து மற்றும் வதிவிடப் பாஸ் நெருக்கடிகள், பொலிஸ் பதிவு, போக்குவரத்து முதலான பல விஷயங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் நாளாந்தம் அல்லல்படுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அரசியல் தீர்வு விஷயத்தில் அரசியல் கட்சிகளுடன் பேசுவதிலும் அரசாங்கம் போதியளவு அக்கறையும் ஈடுபாடும் காட்டவில்லை.



தமிழீழம், தமிழீழ விடுதலை இயக்கம் என்பன போன்ற சொற்றொடர்களை உருவாக்குவதில் முன்னணியில் நின்றவர்களில் நானும் ஒருவன். இன்று இருப்பவர்களில் மூத்தவனாக உள்ளேன்.

1986இல் டெலோ இயக்கத்தைப் புலிகள் தாக்கியவரைக்கும் புலிகள் இயக்கம் மீது எனக்குப் பூரண நம்பிக்கை இருந்தது. அதில் மண்ணை அள்ளிப் போட்டவர்கள் புலிகள் தான்.

அதே 1986 கால கட்டத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது என்று இந்திய அரசிடம் நாங்கள் தெரிவித்த போது புலிகள்தான் தமிழ் இயக்கங்களில் முதன்முதலாக இலங்கை அரசாங்கத்தோடு

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

சுடர் ஒளி

31 டிசம்பர், 2000

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

# போர் அவலமும் விலை உயர்வுகளும்

மீண்டும் எரிபொருள் விலையேற்றம். ஒரு லீட்டர் டீசலின் புதிய விலை 29 ரூபா 80 சதம். மண்ணெண்ணெய் 18 ரூபா 40 சதம். காஸ் அதாவது எரிவாயு 509 ரூபா.

ஏற்கனவே அரிசி, மரக்கறி வகைகள், மீன் முதற்கொண்டு அனைத்துப் பொருட்களுக்கும் அதிக விலை.

அதைக் கொடுக்க முடியாமல், வாழ்க்கைச் செலவுச் சுமையைத் தாங்க இயலாது மக்கள் தவிக்கிறார்கள்.

அப்படி இருக்க மேலும் விலை உயர்வுகளா?

எரிபொருள் விலை ஏற்றத்தின் விளைவாகப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும்.

மின்சாரம், தண்ணீர், பஸ், ஆட்டோ, லொறி, ரயில் கட்டணங்கள் உயரும்.

இன்றைய நிலையில் இவற்றிற்கெல்லாம் மக்களால் ஈடுகொடுக்க முடியுமா?

எரிபொருள் விலை உயர்வால் பொருட்களின் உற்பத்தி, விவசாயம், மீன்பிடித் தொழில் முதலானவையும் வெகுவாகப் பாதிக்கப்படும்.

ஆக மக்களின் வயிற்றில் அடிப்பதோடு முக்கிய தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு வேட்டு வைப்பதாகவும் இந்த எரிபொருள் விலை உயர்வு அமைகிறது.

இது இவ்வளவோடு நிற்காது. மேலும் தொடர்வதற்கான சூழ்நிலையே நிலவுகிறது.

வயிற்றுப் பசிக்குப் பிச்சை கேட்டவன், பிச்சை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வான்?

தட்டிப் பறிக்கக் கூடிய இடத்தில் பழி பாவத்திற்கு அஞ்சாமல் தட்டிப் பறிப்பான். அதைத்தான் அரசாங்கம் செய்கிறது.

அபிவிருத்திக் கடன் என்ற பெயரில் உலக வங்கியின் வழிநடத்தலில் உதவி வழங்கும் நாடுகள் தரும் பிச்சையை நம்பிக் காலட்சேபம் நடத்துவது இந்த நாட்டு அரசாங்கங்களின் பழக்கம் ஆகிவிட்டது.

கடந்த வருடம் அந்தக் கடன் பிச்சை ஏமாற்றமாகிவிட்டது.

இந்த வருடமும் ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய ஒரு பெரிய பட்டாளமே நேர காலத்தோடு பாரிஸ் நகருக்குச் சென்று எவ்வளவோ சொல்லிக் கையேந்தியும் இன்னும் பிச்சை கிடைக்கவில்லை.

இப்போதைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை.

அதனால்தான் பிச்சைக்காரனின் மனப்பாங்கில் அப்பாவிப் பொது மக்கள் மீது அரசாங்கம் கைவைக்கத் துணிந்து விட்டது.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமானவையாக விளங்கும் எரிபொருள்களின் விலையை உயர்த்தி, மக்களிடமிருந்து வேண்டிய பணத்தைக் கறக்கத் தொடங்கியிருக்கிறது அரசாங்கம்.

நாட்டு நிர்வாகத்தை நடத்தவும் மக்களுக்கு வேண்டிய சேவைகளை வழங்கவும் தேவைப்படும் பணத்தை விடக் கூடுதலான தொகை வடக்கு கிழக்கில் நடத்தும் யுத்தத்துக்குத் தேவைப்படுகிறது. அதனால்தான் சிக்கல்.

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு, அதன் விளைவாக யுத்தம் நின்று நிரந்தர சமாதானம் மலர்ந்து நிலை பெறுமானால் அரசுக்குப் பெரிய பணக்கஷ்டம் வராது. மக்களுக்கு அவலங்கள் நேரா. நாடு அபிவிருத்தி அடையும்.

இந்தக் கொடிய யுத்தத்தால் தான் வெளிநாட்டு உதவிகூடத் தடைப்பட்டு நிற்கிறது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய சமாதானப் பேச்சுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேசக்கரம் நீட்டி ஒரு தலைப்பட்சமாக ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தையும் அறிவித்து அதைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

அவற்றை எல்லாம் நல்லெண்ண நடவடிக்கைகள் என்று பெரும்பாலான மக்கள் நம்புகிறார்கள். வடக்கு கிழக்கு ஆயர்கள் நம்புகிறார்கள். அரசுக்கும் புலிகளுக்குமிடையே அனுசரணையாளராகப் பங்கேற்றிருக்கும் நோர்வே நாடு நம்புகிறது. சர்வதேச சமூகம் நம்புகிறது. ஆனால் இலங்கை அரசு மட்டும் நம்பவில்லை.

• போர்வெறி கொண்டிருக்கும் பேரினவாத சக்திகளின் அழுத்தத்திலிருந்தும்-

சமய உயர்மட்ட மேலாதிக்கத்திலிருந்தும்-

கூட இருந்து குழி பறிக்கும் தோழர்களின் சதித் திட்டங்களிலிருந்தும் அரசுத் தலைமை மீண்டு துணிவுடன் செயலில் இறங்க வேண்டும். அது நடக்காதவரை அரசுக்குப் பணக்கஷ்டம்- அரசுத் தலைமைக்கு மனக்கஷ்டம்- நாட்டு மக்களுக்கு எல்லா வகைகளிலும் கஷ்டம் தொடர்வதைத் தவிர்க்க முடியாது.

புதிய அரசமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு

# ஜனாதிபதி சொல்வது சாத்தியப்படுமோ?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் நடைமுறையை மேற்கொள்ள இருக்கிறது.

சரியோ, பிழையோ - ஏற்றுக்கொள்ளக் கூடியவையோ இல்லையோ, அதிகாரப்பரவலாக்கல் விதிகளை உள்ளடக்கிய புதிய அரசமைப்புச் சட்ட வரைவை அரசாங்கம் தயாரித்து வைத்திருக்கிறது.

அதைச் சட்டமாக்குவதற்கு மூன்று காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

ஒன்று - சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்ற வேண்டும்.

இரண்டு - நாடாளுமன்றம் நிறைவேற்றிய அரசமைப்புச் சட்டவரைவைச் சர்வஜன வாக்கெடுப்புக்கு அதாவது மக்கள் தீர்ப்புக்கு விட வேண்டும்.

மூன்று- மக்கள் சட்டவரையை அங்கீகரித்தால், மக்கள் அங்கீகரித்து விட்டார்கள் என்று ஜனாதிபதி சான்றிதழ் வழங்க வேண்டும்.

இந்த மூன்றும் நடைபெற்றால்தான் சட்ட வரைவு சட்டமாகும். அப்போதுதான் அதைச் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தலாம்.

இங்கே முதல் கட்டத்திலேயே சிக்கல். நாடாளுமன்றத்தில் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலம் கிடையாது. ஐ.தே.க ஆதரவளித்தால் தான் மூன்றில் இரண்டு வாக்குகள் கிடைக்கும். ஐ.தே.க ஆதரவு அளிக்க மறுக்கிறது.

அதனால்தான் ஜனாதிபதி புதிய அரசமைப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றம் கொண்டு செல் லாமல் மக்கள் தீர்ப்புக்கு விட்டுச் சட்டமாக்கப் போவ தாகக் கூறுகிறார்.

இது தற்போதைய அரசமைப்புக்கு முரண் என்றாலும் சட்ட பூர்வமான செயல்தான் என்றும் ஜனாதிபதி சொல்கிறார்.

கடைசியாக இந்த விஷயத்தை பாரிஸில் கடந்த மாதம் 18ஆம் 19ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அப்படிச் சொன்னபடி செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி.

அரசமைப்புச் சட்டத்தில் எந்த விதத்திலும் கைவைக்காத, அதே வேளையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஜனாதிபதி கருதும் சட்ட வரைவு எதையும் மக்கள் தீர்ப்புக்கு விட்டுக் கருத்து அறியும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஆனால் அதற்கு உயர்நீதி மன்றத்தின் சம்மதத்தை ஜனாதிபதி பெற்றாக வேண்டும்.

புதிய அரசமைப்புச் சட்ட வரைவை ஜனாதிபதி மக்கள் தீர்ப்புக்கு விட நீதி மன்றம் அனுமதிக்குமா என்பது கேள்விக்குறி.

நீதி மன்றத்தின் அனுமதி கிடைத்தாலும் சட்ட வரைவை மக்கள் தீர்ப்புக்கு விடும்போது சட்ட வரைவில் உள்ள சரத்துக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் காட்டி மக்களின் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். இது இலகுவான காரியமா?

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டம் 1978 இல் கொண்டு வரப்பட்டது. இதில்தான் புதிதாக சர்வஜனவாக்கெடுப்பு சம்பந்தமான விதி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் கடந்த 21 வருடங்களில் அரசு ஒரு முறைதான் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியிருக்கிறது. அதுவும் 1982 இல் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை ஆறு வருடங்கள் நீடிப்பதற்கு ஆகும்.

மற்றப்படி எந்த ஒரு ஜனாதிபதியாலும் எந்த ஒரு சட்டவரைவும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை.

சட்டவரைவை சரத்துச் சரத்தாக சர்வஜன வாக்கெடுப்புக்கு விட்டு மக்களின் அங்கீகாரம் பெறுவது இலகுவான காரியமா?

மக்கள் ஏதாவது ஒரு சரத்துக்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தால் அதில் வேறு சட்டச் சிக்கல் ஏற்படும்.

சரி எல்லா சரத்துக்களுக்கும் மக்களின் அங்கிகாரம் கிடைத்தாலும் பிரச்சினை இருக்கிறது.

யாராவது ஒருவர் சர்வஜன வாக்கெடுப்பு சரிவர நடைபெறவில்லை என்றோ அல்லது அது சம்பந்தமான வேறு விடயங்களில் குறை கண்டோ நீதிமன்றம் செல்லலாம்.

நீதிமன்றம் சென்றால் இப்படியான வழக்குகளில் தீர்ப்புக் கிடைக்க நீண்டகாலம் பிடிக்கும்.

தீர்ப்பு எப்படி வரும் என்று சொல்லமுடியாது.

தீர்ப்பு எப்படி இருந்த போதிலும் தீர்ப்பு வருவதற்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சிகாலம் முடிவடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதியின் திட்டம் நிறைவேறும் சாத்தியம் உண்டா?

(இடநெருக்கடி காரணமாக இந்தக்கட்டுரையில் சட்ட நுணுக்கங்கள் எடுத்துக்காட்டப்படவில்லை.)

# யுத்த நிறுத்தத்துக்கு அரசு இணக்கம்?

## 2ஆம் திகதி ஜனாதிபதி ஆராய்கிறார்

*தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யுத்த நிறுத்தத்துக்கு இணையாக அரசாங்கமும் யுத்த நிறுத்த அறிவிப்பை மேற்கொள்ளும் என நம்பகமாகத் தெரியவருகிறது.*

*இந்த யுத்த நிறுத்த அறிவிப்பு பற்றியும் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஜனவரி இரண்டாம் திகதி அல்லது அதற்குப் பின்பு நாட்டுமக்களுக்கு விளக்கம் அளிப்பார் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.*

*2ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இறுதி முடிவு ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவாகவே அமையும் என்று அரசாங்க சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.*

*"யுத்த நிறுத்தமொன்றுக்கு அரசாங்கத் தரப்பில் ஒரு சாதகமான சூழலே நிலவுகிறது. ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் இறுதி முடிவு எடுக்கப்படும்" என்று பிரதம மந்திரியுடன் நெருக்கமான பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்கள் பிரதம மந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக்காவுடன் தொடர்பு கொண்டு அரச நிலைப்பாடு குறித்து விளக்கம் கோரியுள்ளன. இதற்கு பிரதம மந்திரி எதனையும் தெரிவிக்க மறுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியே இதற்கு பூரண விளக்கம் அளிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.*

*புலிகள் இயக்கத்துடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான புறச் சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. சமாதான முயற்சிகள் குறித்து அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கும் அமைச்சர்களுக்கும் விளக்கம் அளித்து, அவர்களின் கருத்துக்களை அறிய ஜனாதிபதி ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*அதேவேளை, அண்மையில் புயலினால் பாதிக்கப்பட்ட வடக்கு– கிழக்கு பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.*

*தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.*

*அப்பகுதிகளுக்கு சென்று நிலைமைகளை அவதானிக்க செஞ்சிலுவை சங்கத்தினூடாக புலிகளின் அனுமதியைப் பெற்று செயற்படுமாறும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.*

*பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா இதற்கான பணிப்புரைகளை சமூக சேவைகள் அமைச்சருக்கு விடுத்திருக்கிறார்.*

*இதற்கிடையில் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளை உக்கிரம் குறைந்த அளவிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்புத் தரப்பினருக்கு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.*

சூறாவளி–சோணாவாரி மழை அனர்த்தங்கள்

# துரித கதியில் கூடுதல் நிவாரண உதவிகள்

*சூறாவளி – கடும் மழை காரணமாக வடக்கு – கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றில் சுமார் 86,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. சுமார் 10 ஆயிரம் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. முல்லைத்தீவுப் பகுதிகளில் நேர்ந்த சேத விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.*

*பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.*

**துரித நடவடிக்கை**

*சமூக சேவைகள் அமைச்சில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் அவசரமாகக் கூட்டப்பட்ட மாநாட்டில் நிவாரண உதவிகளை அதிகரிக்கும்படி பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.*

*கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ பாதிக்கப்பட்ட மீனவர்களின் விவரங்களை மதிப்பீடு செய்து தகுந்த நிவாரணம் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.*

*வங்காள விரிகுடாவில் 110 மைல் வேகத்தில் மையம் கொண்டிருந்த சூறாவளி வடக்கு கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பாரிய சேதங்களை ஏற்படுத்திவிட்டு அரபுக் கடல் நோக்கிச் சென்றுவிட்டது.*

*உயிர்கள், உடைமைகள், விவசாயக் காணிகள், கால் நடைகள் எனப் பல கோடி ரூபாக்குமேல் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது இந்த மினி சூறாவளி. மின்சாரவினியோகம் மற்றும் வீதிப்போக்குவரத்து ஆகியன துண்டிக்கப்பட்டுள்ளன.*

**திருகோணமலை**

*திருகோணமலையில் 10,000 குடும்பங்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளன. நூற்றுக்கும் அதிகமான மீன்பிடி வள்ளங்கள் கடல் அலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. திருக்கடலூரில் இருந்து நான்கு வள்ளங்களில் கடலுக்குச் சென்ற எட்டுத் தமிழ் மீனவர்களுக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை.*

**மன்னார்**

*மன்னாரில் வெள்ளம் காரணமாக 1052 குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 638 குடும்பங்களுக்கு உலருணவும் ஏனையோருக்கு 3 நாட்கள் சமைத்த உணவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.*

**புத்தளம்**

*புத்தளம் மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்ததோடு பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. 50 படகுகள் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.*

**மட்டக்களப்பு**

*மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரைப் பிரதேசங்களில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முறையான நீர்வடிகாலமைப்பு இல்லாத காரணத்தினால் வாழைச்சேனை, ஓட்டமாவடியில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.*

**அம்பாறை**

*அம்பாறையில் வெள்ளத்தின் காரணமாக 19 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பொத்துவில், திருக்கோவில், ஆலையடி வேம்பு, அட்டாளைச்சேனை, நாவிதன்வெளி பிரதேசங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.*

*யாழ்ப்பாணத்தில் கடும் மழை, காற்று காரணமாக மரங்கள் வீதிகளில் முறிந்து வீழ்ந்தன. கூரைத்தகடுகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. கடல் கொந்தளிப்பின் காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருட்கள் இறக்குவதும் பாதிக்கப்பட்டது.*

நல்லூர் ... யாழ்ப்பாணம்




சமாதானம் சுதந்திரம் வேண்டி மட்டக்களப்பில் சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தினர் அமைதிப் பேரணி நடத்தினர், ஆயிரத்துக்கு அதிகமானோர் பேரணியில் கலந்து கொண்டனர். போரை நிறுத்து, சமாதானத்தை நிலை பெறச் செய், அப்பாவிகளைக் கைது செய்யாதே, சிறையில் அடைத்து வதைக்காதே, மனிதப் படுகொலைகள் அடியோடு ஒழியட்டும் என்று எழுதப்பட்ட பதாகைகளைப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தாங்கிச் சென்றனர்.

# மட்டக்களப்பு பாஸ் முறை விவசாயத்துக்கு வேட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளிடையே படையினர் மேற் கொள்ளும் பாஸ் நடைமுறையினால் விவசாயச் செய்கை பெரும் பாதிப்புக்கு உட்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

படுவான்கரை முதல் வாகரை வரை 99 சதவீத விவசாயக் காணிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இக்காணிகளின் விதைப்பில் இருந்து அறுவடை முடிந்து நெல்லைக் கொண்டு வரும்வரைக்கும் படையினரின் பாஸ் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

வயலை உழவு செய்வதற்குத் தேவையான டீசல், விதைநெல், அடிக்கட்டுப் பசளை, ஏனைய அமோனியா கலவை உரவகைகள், வயல் வேலிக்குத் தேவையான முட்கம்பிகள், கிடுகு, டோச் பற்றரி போன்ற பொருட்களைப் படையினரின் அனுமதியுடன் அவர்கள் குறிப்பிடும் அளவிலேயே கொண்டு செல்ல முடியும்.

இவற்றிற்கெல்லாம் படையினரின் பாஸ் பெறுவதில் பல்வேறு சிரமங்களையும் தடங்கல்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 17 கமநல கேந்திர நிலையங்கள் உள்ளன. விவசாய அனுமதிப் பத்திரம் பெற வேண்டுமானால் அந்த நெற்காணி சம்பந்தப்பட்ட கமநல கேந்திர நிலையத்தில் நெற்காணி இடாப்பில் பதிவு செய்யப்பட்ட காணியாக இருக்க வேண்டும்.

இக்காணிகள் நெற்காணி இடாப்பில் பதிவு செய்யப் படுவதற்கு இந்தக் காணிகளுக்கு உறுதி அல்லது பேர்மிட் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இவை இரண்டும் இல்லாது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகளை விவசாயிகள் செய்கை பண்ணி வருகின்றனர்.

இவ்வாறான காணி உரிமையாளர்கள் அனுமதிப் பத்திரம் பெற முடியாது. நெற்காணி இடாப்பில் பெயர் உடையவர்கள் மாத்திரம் தமது பிரதேச கமநல கேந்திர நிலையத்தில் பெரும்பாக உத்தியோகஸ்தரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து பின்னர் அவரது உறுதிப் படுத்தலுடன் மாவட்ட இணைப்பதிகாரி அலுவலகத்திற்குக் கொண்டு வந்து சமர்ப்பிக்க வேண்டும்.

இரண்டு மூன்று தினங்களின் பின்னர் பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்ட பின்பு இணைப்பு அதிகாரியால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விவசாயச் செய்கையில் ஈடுபடுவோர் அனைவரும் பெரிய கல்விமான்களா? படிப்பறிவில்லாத பாமரமக்களும் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அனைவரும் அனுமதிப்பத்திரம் பெற அலைவது பரிதாபகரமாகவே இருக்கும்.

இது தொடர்பாக விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில், ஒவ்வொரு விவசாய போக ஆரம்பக் கட்டங்களிலும் இந்த நடைமுறையைத் தளர்த்துமாறு வலியுறுத்துகிறோம். இவை தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும் என வாய்ப் பேச்சளவில் தெரிவிக்கின்றார்களே தவிர செயலில் எதுவும் இடம் பெறவில்லை என்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய நல்லிணக்கப் பிரதி அமைச்சருமான சோ.கணேசமூர்த்தி விவசாயிகள் பாஸ் நடைமுறை தளர்த்தப்படும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் பாஸ் நடைமுறையில் எந்தவித மாற்றமும் இல்லை என மட்டக்களப்பு மாவட்ட இராணுவ அதிகாரி அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

— சத்துருக்கன்

# படகுச்சேவை தடையால் படையினருக்கு அதிக பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுவிக்கப்படாத பகுதியான கொக்கட்டிச் சோலைக்கு இலகுவாகச் செல்லும் மண்முனைத்துறை வாவியின் படகுச் சேவையில் பூட்டப்பட்டிருந்த இயந்திரம் விடுதலைப்புலிகளினால் எடுத்துச் செல்லப் பட்டன. அதை அடுத்து படகுச் சேவை நின்றுவிட்டது. இதனால் பொதுமக்களை விடப் படையினரே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

படகின் இயந்திரத்தை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதன் காரணம் என்ன?பலரும் விதம் விதமாய் கதைக்கின்றனர்.

- கொக்கட்டிச் சோலையில் விடுதலைப்புலிகள் தமது நடமாட்டத்தை எளிதாக்குவதற்கும், விரைவாக்குவதற்குமா?
- மண்முனைத்துறையடி விசேட அதிரடிப்படை முகாமைத் தாக்குவதற்காகவா?
- விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பை விரிவுபடுத்துவதற்காகவா?
- மட்டக்களப்பில் ஏதோ ஒரு இராணுவ முகாமைத் தாக்குவதற்காகவா?
- மண்முனைத்துறை இராணுவமுகாமைச் சுலபமாக முற்றுகையில் வைத்திருப்பதற்காகவா?

இப்படியெல்லாம் பலரும் கேள்விகளை எழுப்பி விடை காணும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

இயந்திரத்தை புலிகள் எடுத்துச் சென்றதும் மண்முனைத்துறையடி விஷேட அதிரடிப்படையினர் பெரிய படகை இழுத்துக் கட்டிவிட்டார்கள். எடுத்துச் சென்ற இயந்திரத்தைப் புலிகள் திருப்பித் தந்தால் தான் பிரயாணிகளைத் துறையால் செல்ல அனுமதிப்போம் எனப் படையினர் தெரிவித்து விட்டார்கள்.

எனினும் பொதுமக்கள் சிலரைத் தோணியில் பிரயாணம் செய்ய விட்டனர். போன தோணிகளும் திரும்பவில்லை. விடுதலைப்புலிகள் மறுகரையில் இருந்து தோணிகளும் வாவியால் செல்லக் கூடாது எனத் தடைவிதித்து விட்டார்கள். இந்தச் செய்தி மண்முனைத்துறையடியில் இருக்கும் இராணுவத்தினருக்குத் தெரியவந்தது.

இதனால் அவர்கள் ஒவ்வொரு இரவும் மகிழடித்தீவு கண்ணாக்காடுகளை நோக்கி வேட்டு களைத் தீர்த்தவண்ணம் இருக்கின்றனர். மண்முனைத் துறையடி இராணுவ முகாமைச்சுற்றிய பகுதிகளும், புதுக்குடியிருப்பு இராணுவ முகாமைச் சுற்றிய பகுதிகளும் அடிக்கடி சுற்றி வளைக்கப்படுகின்றன.

மண்முனைத்துறை படகுச் சேவை தற்போது முற்றாக மூடப்பட்டமையால் அம்பிளாந்துறை வாவி, பட்டிருப்புப் பாலம் ஊடாகவே படுவான்கரைப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர்.

மண்முனைத்துறை படகுச் சேவை போக்குவரத்து இடம்பெறாமையினால் பொதுமக்களை விட அங்குள்ள இராணுவத் தினரும், விஷேட அதிரடிப் படையினருமே மிகவும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்

— நேரன்

# அக்கரைப்பற்றில் 5 பாடசாலைகள் அபிவிருத்தி

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள 05 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. எதிர்வரும் 2001 ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் 03 முஸ்லிம் பாடசாலைகளும், 02 தமிழ்ப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒரு பாடசாலையை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதியின் விசேட திட்டத்தின் கீழ் இவ்வருடம் அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள எந்தவொரு பாடசாலையும் அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்படவில்லை.

அண்மையில் கல்வி உயர்கல்வி அமைச்சில், அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தலைமையில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டத்தில், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. தௌபீக் இவ்விடயம் குறித்து செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதையடுத்தே பிரஸ்தாப அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய ஐந்து கோட்டங்களை உள்ளடக்கிய, அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் தலா ஒரு பாடசாலை இதற்காகத் தெரிவு செய்யப்படவுள்ளது.

ஐ. எம். ரிஸான்

# மேலதிக ஆசிரியர்கள் இடமாற்றம்

*வடக்கு – கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ள அலுவலகங்களிலும், பாடசாலை களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக அலுவலர்கள் அல்லது ஆசிரியர்கள் கடமையில் இருப்பின் அவர்கள் உடனடியாகப் பொருத்தமான ஆளணி வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும். இப்படி மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் சுற்று நிருபம் மூலம் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.*

*2001.01.01 திகதிக்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக அலுவலர் யாராவது கடமையில் இருப்பின் அவருக்கு வழங்கப்பட்ட சம்பளம் அல்லது கொடுப்பனவு சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# வேளாண்மை சேதம்

பெருமழை வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள நெற் செய்கைக் காணிகள் [illegible] பாதிக்கப்பட்டுள்ளன.

இதைவிட இப்பகுதியின் போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் உடைந்து போயுள்ளன. குறிப்பாக வலையிறவுப் பாலத்தினூடாகச் செல்லும் ஆயித்தியமலை, கரவெட்டிப்பாதை, கொக்கட்டிச் சோலைவீதி, மண்முனைத்துறை வீதி, அம்பிளாந்துறை வீதி, பட்டிருப்புப் பாலத்தினூடாகச் செல்லும் பழுகாமம் வெல்லாவெளி வீதி என்பன பெருமளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வீதிகளைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லையே என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளம் ஏற்பட்ட போது நிவாரணம் வழங்கப் போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் நிவாரணங்களைக் கண்ணால் கூடக் காணமுடியவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

# மாணவனின் கல்வி வெறி!



*பல்கலைக்கழகத்திற்குத் தாம் அனுமதி பெறக் கூடியளவு திருப்திகரமாக சித்தியடையவில்லை என்பதால் விரக்தியுற்ற ஒரு மட்டக்களப்பு மாணவன் மகாதேவா துஷ்யந்தன் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.*

*இருபது வயதான இந்த மாணவன் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்று வந்தார். இவர் தாமரைக்கேணி வாசியாவார்.*



# செல்ல அரவணைப்பு தேடுகிறார் லைலா!

ராசியில்லாத நடிகை என்ற தன் மீதான முத்திரையை 'பார்த்தேன் ரசித்தேன்' மூலம் தூக்கியெறிந்து விட்ட லைலா இப்போது 'நோ கால்ஷீட்' என்று சொல்லுமளவுக்கு முன்னேறி விட்டார்.

பல லகரங்கள் சம்பளத்துடன் லைலாவுக்காகப்பலரும் வரிசையில் காத்து நிற்க, விக்ரமனின் இயக்கத்தில் உருவாகும் விஜய்யின் படத்திற்காக 100 நாட்களுக்கு மேல் கால்ஷீட் வழங்கியிருக்கின்றார்.

இன்னும் சில விஷயங்களை லைலாவிடம் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் லைலாவைத்தேடிய போது 'தீனா' பட ஷூட்டிங்கில் அகப்பட்டார்.

''ஹலோ'' அறிமுகத்துடன் ஆரம்பித்தேன்.

''ஹாய்''பதிலுக்கு விசாரித்தார். சில நிமிடங்களை எமக்காக ஒதுக்கவேண்டும். என்றதும் கண்களை படபடவெனப் பட்டாம் பூச்சியாக சிறகடித்தபடி சம்மதித்தார்.

கே:சினிமா வாழ்க்கைஎப்படியிருக்கின்றது?

ப:புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் வெற்றி கிடைக்கும்போது சந்தோஷமாக இருக்கின்றது.

கே:பார்ப்பதற்கு இனிமையானவராகத்தெரிந்தாலும் சமயத்தில் பயங்கரமாகக் கோபப்படுவீர்களாமே!

ப:உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கின்றது.சமயத்தில் பயங்கரமாகக் கோபப்படுவேன் என்பது உண்மைதான்.இது எனக்கு மட்டுமல்ல மனிதராகப்பிறந்த அனைவருக்கும் உள்ள பொதுவான குணம்.நான் ஃபிரன்ட்லியாகப் பழகுவேன். யாராவது வம்புக்கு வந்தால் தேள் மாதிரிக்கொட்டி விடுவேன். ஏனென்றால் நான் விருச்சிக ராசிக் காரியாக்கும்.

கே:'கள்ளழகர்'படத்தில் புரட்சிக்கலைஞர் விஜயகாந்துடன் நடித்த போது உங்கள் மீது இருந்த எதிர்பார்ப்பு படம் வெளிவந்தபின்னர் இருக்கவில்லையே ?

ப:அது உண்மை. ஆனால் அதற்கு எனது ராசி மட்டுமே காரணம் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

கே:தொடர்ந்து வந்த ரோஜா வனமும் சேர்ந்து உங்களை ராசியில்லாத நடிகை ஆக்கி விட்டது இல்லையா?

ப:ஆமாம் அவை மறக்கப்பட வேண்டியவை. இப்போது என் மனதில் நிறைந்திருப்பது 'பார்த்தேன் ரசித்தேன்' பட வெற்றி மாத்திரமே!

கே:'ரோஜா வனத்திற்கு'ப்பிறகு முதல் வனில் ஒரு சிறிய வேடத்தில் நடித்தீர்கள். பின்னர் சில காலங்களுக்கு ஆளையே காணவில்லை. எங்கே சென்றிருந்தீர்கள்?

ப:'முதல்வன்'படத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்குப்பின்னர் நான் மும்பையிலேயே தங்கி விட்டேன். ஆனாலும் நம்பிக்கையை விடவில்லை. அப்பொழுது தான் சரண் ஸாரின் 'பார்த்தேன் ரசித்தேன்' பட வாய்ப்பு கிடைத்தது. இந்தப்படத்தின் மூலம் என் மீதிருந்த ராசியில்லாத நடிகை என்ற முத்திரை அகற்றப்பட்டது.



கே:நீங்கள் ராசி,நேரம் இவற்றை நம்புகின்றீர்களா?

ப:எனக்கு இவற்றில் நம்பிக்கையில்லை. என்னைப் பொறுத்தவரைக்கும் ஒருவருக்கு கிடைக்கவேண்டியது எந்தக்காலத்திலாவது, எப்படியாவது அவருக்குகிடைத்தே தீரும். அதை யாராலும் தட்டிப்பறிக்க முடியாது.

கே:இடைவெளிக்குப்பின்னர் வெற்றி கிடைத்திருக்கின்றது. இப்போது உங்கள் நிலைப்பாடு என்ன?

ப:மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துப் பார்த்து நடித்துக்கொண்டிருக்கிறேன். இன்னொரு முறை ஓரங்கட்டப்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்கின்றேன்.

கே:இப்போது கதாநாயகிகளிடையே கவர்ச்சிப்போட்டிதானே அதிகமாக நிலவு கின்றது. கவர்ச்சியாக நடித்தால் நின்று பிடிக்கலாம் என்ற கருத்தைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப:என்னால் இந்தக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.எந்தக்கவர்ச்சியும் ரசிகர்களுக்குப் பிடிக்கவேண்டும்.அத்துடன் நடிப்புத் திறமையும் இருக்க வேண்டும். அதிர்ஷ்டமும் சேர்ந்திருந்தால்தான் பீல்டில் நிலைத்து நிற்க முடியும்.

கே:கவர்ச்சியாக நடிப்பதில் தவறில்லை. என்கின்றீர்களா?

ப:எக்ஸ்போஸ் செய்வது எமக்குப் பிடிக்கவில்லை யென்றால்கூட டைரக்டரின் விருப்பப்படி நாங்கள் கவர்ச்சியாக நடித்துத்தான் ஆக வேண்டும்.

ஏனென்றால் படம் பார்ப்பவர்கள் அதைத்தான் விரும்புகின்றனர். ரசிகர்களுக்காகத்தானே நாங்கள் நடிக்கின்றோம்.

நாளாந்த வாழ்க்கையிலேயே கவர்ச்சியாக உடை அணியும்போது நாங்கள் கவர்ச்சியாக நடிக்க மாட்டோம் என்று ஸ்டிரைக் செய்தால் எப்படி?

அந்தக் கரெக்டரில் நான் நடிக்க மறுத்தாலும் அந்தக் கரெக்டரில் வேறு ஆர்ட்டிஸ்ட் நடிப்பார் தானே.

கவர்ச்சி காட்டினால்தான் ரசிகர் நெஞ்சில் நிலைத்து நிற்க முடியும்.இல்லையென்றால் லைலாவை மறந்து வேறொரு நடிகையை நினைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

கே:அது சரி லைலா உங்கள் மஜ்னு (வருங்கால கணவர்) எப்படியிருக்க வேண்டும். என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

ப:என்னை சமமாக நடத்தும் கணவராக இருக்கவேண்டும்.நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டும். மிஸ்டர் ரொமான்டிக்கா இருந்து என்னை செல்லமாக அரவணைப்பவராக இருக்க வேண்டும். என்னைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

— ஷாம்

யாழ்ப்பாணம்

சூப்பர் ஸ்டாரின் அடுத்த படம் எப்போது எப்படிப் பட்டதாக அமையும் படவுலகினரும் பத்திரிகையாளர்களும் ரசிகர்களும் ஏகப்பட்ட விசனத்தில் இருந்து கொண்டிருக்கின்றனர்.

'படையப்பா' பட ஸ்டைலில் அமையும் என்று ஒருசிலர் கருத்து தெரிவிக்க, இல்லை 'பாட்சா' படம் போன்று அமையும் என்று மற்றொரு சாரார் கருத்து தெரிவிக்கின்றனர்.

"இதில் எந்த வகை டைட்டிலாக இருந்தாலும் நிச்சயம் மத ஒற்றுமை வலியுறுத்தப்படும். அத்துடன் பெருகி வரும் ஜாதிக் கலகங்கள் பற்றிய விஷயங்களும் இடம் பெறும். அதற்கு அரசியல் கட்சிகள் ஆதரவு தந்து ஊக்குவிப்பதற்குச் சாட்டையடியாக வசனங்களும் காட்சியமைப்பும் இருக்கும். என் ரசிகர்கள் ஜாதி, மதம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள். அவர்கள் தடம்மாறாமல் இருப்பதற்கே என் அடுத்த படம்" என்று கூறுகின்றார் சூப்பர் ஸ்டார்.



# ரஜினி அடுத்த படம் எப்படி என்று அறிவிப்பு

# திரை மறைவில்

ரயில் நடிகையின் பெயருடன் தன் பெயரையும் சேர்த்து வைத்துக்கொண்டுள்ள 'குரோத'நாயகி சான்ஸ் பிடிக்கும் வேகத்தைப்பார்த்து சக நடிகைகளே வியந்து போகின்றார்கள். நட்சத்திர ஹொட்டலில் வாசம் செய்கிறார் நடிகை. அந்தி சாய்ந்ததும் ஹீரோக்களுக்கு செல்ஃபோன் மூலம் வலை வீசுவாராம். வருகை தந்த நடிகருக்கு அமோக விருந்துதானாம். உபசரிப்பில் உளங்கனிந்து போகும் நடிகர்கள். அம்மணிக்கு சிபாரிசு செய்கின்றார்களாம்.

****

ஒல்லியான 'கவுஸ்' நடிகையும் தேவலோக ஆடலரசியில் முதன்மையானவரின் பெயர் கொண்ட நடிகையும் திலகக்கவுண்டர் படத்தில் இணைந்து நடித்து வருகின்றனர். இந்திரனின் மகளின் பெயர் கொண்ட நடிகையுடன் நடிக்கும்போது ஏற்பட்ட தகராறு 'ஆனந்தம்' படம் வரை நீடித்ததை ஏற்கனவே கவுஸ் அறிந்து வைத்திருந்ததாலோ என்னவோ ஆடலரசியிடம் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டாராம் 'கவுஸ்'.

****

கலைநிகழ்ச்சி நடத்துவதற்காக கனடாவுக்குச்சென்றிருந்த விசித்திரமான மடிப்பு அம்சாவும் ரசித்த பெயரை சங்கீதமாக மாற்றிய நடிகையும் கலைச்சேவை செய்து வசூலில் இறங்கி விட்டார்களாம். இதே சேவையை டுபாயிலும் செய்து கொண்டு நாடு திரும்பியிருக்கின்றார்கள்.

****

ப்ரெண்ட்லியான படத்தின் போஸ்டர்களில் இளைய தளபதியின் படங்கள் தான் பிரமாண்டமாகப் போடப்பட்டுள்ளது. திரையுலக மார்க்கண்டேயரின் வாரிசின் படங்களை பூதக்கண்ணாடி வைத்து தேட வேண்டியுள்ளதாம். ஏற்கனவே இருவரும் இணைந்து நடித்த முகத்துக்கு முகம் காட்டிய படத்திலும் இதே நிலைதான். அட அதுதான் அறிமுகப்படம் என்றால் வாரிசு நடிகர் ஹீரோ அந்தஸ்து பெற்ற இந்த நேரத்திலுமா?

****

அழைப்பு இல்லாமலேயே திரையுலக விழாக்களுக்கு ஆஜராகி விடும் பிரகாசமான அமெரிக்க ரிட்டர்ன் 'அம்பி'நடிகை வயது வித்தியாசம் பார்க்காமல் சோசியலாகப்பழகி வருகின்றாராம். அம்மணி அன்பு செலுத்துவது பட வாய்ப்புக்காக என்று தெரியாமல் பழகி விட்டு சங்கடப்படுவோர் தொகை அதிகரித்து விட்டதாம்.



ராதிகா சௌத்ரி




பிரதிக்ஷா- முரளி
படம்-'மனுநீதி'

# பிரதிக்ஷாவின் கண்மூடிக் காதல்

'கடல்பூக்களில்' முரளியுடன் நடித்தார் பிரதிக்ஷா. படம் வெளிவரு முன்னரே அடுத்த படத்திலும் முரளி ஜோடியாக ஒப்பந்தமானார். படமும் விரைவில் வெளிவரப் போகின்றது. இந்நேரத்தில் பிரதிக்ஷாவைப் பற்றி வெளியான செய்தி திடுக்கிட வைக்கிறது.

அவர் ஒரு நடிகரை தீவிரமாகக்காதலித்து வருகின்றாராம். அந்த நடிகர் ஏற்கனவே திருமணமாகி குழந்தை குட்டியுடன் வாழ்ந்து வருகின்றவர். 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்பது பிரதிக்ஷாவுக்கு இப்போது புரியாது. கண்கெட்டபிறகுதான் சூரிய நமஸ்காரத்தை ஆரம்பிப்பார் என்று முணு முணுக்கின்றனர் விஷயம் தெரிந்தவர்கள்.



திவ்யா உன்னி

# தப்பினார் திவ்யா உன்னி

திவ்யா உன்னியை 'பாளையத்தம்மன் படம் தூக்கி நிறுத்தியுள்ளது. நாலைந்து படங்களில் நடித்துக்கொண்டிருக்கின்றார் கூடவே சம்பளத்தை அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்கின்றேன், உதவியாளர்களுக்கு நானே சம்பளம் கொடுக்கின்றேன் போன்ற அதிரடி ஐடியாக்களை வெளியிட்டிருக்கின்றார். தயாரிப்பாளர்கள் யோசிக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்.

# ருசிதா இளவட்டங்கள் கனவில்!

ஒரு வேலையாக பெசன்ட் நகர்ப்பக்கம் போனபோது, ஒரு இடத்தைச்சுற்றி வளைத்து இளவட்டங்கள் நின்றனர். ஏதும் கொலிஜ் ஸ்டிரைக்கா என்று எட்டிப்பார்த்தால், அங்கே ஜாகிங் டிரஸ்ஸில் ருசிதா பிரசாத் நின்று கொண்டிருந்தார்.

'நேற்று வரை நீ யாரோ' படப்பிடிப்பாம். அன்று ருசிதா பிரசாத் ஜாகிங் டிரஸ்ஸோடு அதிகாலை நேரத்தில் பெசன்ட் நகர் சாலைகளில் ஓடும் காட்சியைப் படமாக்கினார்கள்.

இரண்டு மணி நேரமாக டேக்– ரீடேக் என ருசிதா பிரசாத் ஓட, அவர் பின்னால் இளவட்டங்கள் ஓட, என்று படப்பிடிப்பு முடிந்து இத்தனை நாட்களாகியும் பெசன்ட் நகர் இளவட்டங்கள் கனவில் மிதந்து கொண்டிருக்கின்றனராம்.




ருசிதா பிரசாத்



# அம்மா ஊர்வசி அசத்துவாரா?

முந்தானை முடிச்சில் ஆரம்பித்து தமிழ், மலையாளம், இரண்டு மொழிகளிலும் நடித்தவர் ஊர்வசி. கமலின் மைக்கேல் மதன காம ராஜனில் கமலுடன் சேர்ந்து இவர் நடித்த பாடல் காட்சியான 'சுந்தரி நீயும் சுந்தரன் ஞானும்' என்ற பாடல் இப்பொழுதும் ரசிகர் வாயில் உச்சரிக்கப்படுகின்றது. கடந்த வருடம் திருமணமாகி குழந்தையும் பெற்றுக் கொண்டவர் இப்போது மீண்டும் நடிக்க வருகின்றார். எஸ்.வி.சேகருடன் இங்கு அவர் தோன்றுவது 'ரமாமணி சிகாமணி' படத்திற்காக.

# தொழில்நுட்ப வளர்ச்சியில் தொலைபேசிக்கு இடமில்லை



தகவல் தொழில் நுட்பம் பல சேவைகளை இன்று ஆற்றிக் கொண்டு வருகிறது. இது நிர்வாகம், வியாபாரம், பாதுகாப்பு போன்ற மிக முக்கியமான விடயங்களுக்கு அவசியமானதாக இருக்கிறது.

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும், வளர்ச்சியடைந்துள்ள நாடுகளுக்குமிடையே வேறுபாடான நிலையில் உள்ளது.

அதாவது வளர்ச்சியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் இதன் சேவைகள் பாரிய அளவில் வளர்ச்சி பெறவில்லை.

எமது நாட்டில் இன்னமும் சில பிரதேசங்களுக்கு உரையாடும் தொலைபேசி வசதி போன்ற ஆரம்பத் தகவல் தொழில்நுட்பத் தேவை கூடப் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஆனால் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இந்நிலை முற்றாக மாறியுள்ளது. அமெரிக்காவில் தகவல் தொழில் நுட்பம் நன்கு வளர்ச்சி யடைந்துள்ளது. பல மாற்றங் களையும் அது ஏற்படுத்தியுள்ளது.

வாய் மூலம் உரையாடும் தொலைபேசிகளின் பாவனை வீதம் அங்கு குறைவதற்கு மாற்றீடாக ஈ–மெயில், இன்டர்நெட் போன்ற நவீன தகவல் தொடர்பு முறைகளின் பாவனை வீதம் அதிகரித்துள்ளது. புள்ளி விவரங்கள் இதனை விளக்குகின்றன.

1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்காவில் 231 மில்லியன் தொலைபேசிகள் இருந்தன. இதேவேளை ஈ–மெயில் முகவரிகள் 238 மில்லியன் வரை உயர்ந்திருக்கின்றன.

வாய் மூலம் உரையாடும் தொலைபேசிகளின் பங்கு 46 சதவீதம் வெளியான தகவல் வருமாறு:–

தொலைபேசி ஒரு பாரம்பரிய வழித் தொடர்பு முறை என்ற தரத்தைப் பெற்று விட்டது.

ஆனால் புதிய நிறுவனங்களில் அனேகமானவை இன்டர்நெட் வலையமைப்பில் இணைந்து கொண்டாலே துரிதமாக முன்னுக்கு வரலாம் என்று கருதுகின்றன.

இன்டர்நெட்டில் தொடர்புகள் இடம்பெறும் போது சேவையைப் பெறுபவரே பெரும்பாலும் செலவுகளை ஏற்க வேண்டியுள்ளது. நிறுவனத்தின் செலவு இங்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சில நிறுவனங்கள் இன்டர்நெற் மூலம் அதிக வருவாயையும் ஈட்டி வருகின்றன.

நிறுவனங்கள் மாத்திரமன்றி தனி நபர்களும் வருமானங்களை ஈட்டி வருகின்றனர். இவ்வாறானவர்கள் தங்களை இன்டர்நெட் வலையமைப்பின் வழங்குநர்கள் என்று இனங்காட்டிக் கொள்வதில் பெருமிதமடைகின்றனர். இவை போன்ற விளம்பரங்கள், வருமானமீட்டல் போன்றவைகளைத் தொலைபேசியில் மிகக் குறைவான அளவே மேற்கொள்ள முடிகின்றது.

மற்றொரு காரணமாக தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு அழைப்புக்கும், ஒவ்வொரு விநாடி நிமிட அளவு மானிக் கணக்கில் கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. கட்டணங்கள் இவ்வகையாக அறவிடப் படுவதால் பாரிய நிறுவனங்கள் இதற்கு வேறாக முதலீடுகளைச் செய்ய வேண்டியுள்ளது.

ஆனால் ஈ–மெயில், இன்டர்நெட் ஆகியவற்றைப் பயன் படுத்தும் போது, தகவல்கள் மிக விரைவாகக் கிட்டுகின்றன. அத்துடன் குறிப்பிட்ட, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மாத்திரம் செலுத்தக்கூடியதாய் உள்ளது. இன்னும் இன்டர்நெட்டில் சில சேவைகள், விளம்பரங்களை இலவசமாகவும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இருக்க ஈ–மெயில், இன்டர்நெட், பெக்ஸ் போன்றவைகளின் பாவனை 52 சதவீதமாக அதிகரித்தது.

அமெரிக்காவில் தொலைபேசிப் பாவனை, ஏனைய தகவல் தொழில்நுட்பங்களை விடக் குறைவாக இருப்பது ஏன்?

அமி முல்வர், மைக்கோர்னல் ஆகியோர் ஆய்வுகளை மேற்கொண்டனர். அமி முல்வர் அமெரிக்காவின் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனம் AT &T இன் முன்னாள் பணிப்பாளர். மைக்கோர்னல் சிலிக்கன் பள்ளத்தாக்கிலுள்ள யுத்த தந்திரங்களை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரி. இருவரும் மேற்கொண்ட ஆய்வுகளில்

இவை போன்ற காரணங்களினாலேயே வளர்ச்சியடைந்த நாடுகளில் உரையாடும் தொலைபேசிகளின் பாவனை குறைந்து வருகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். இந்த நிலை இன்னமும் சில காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

–முஸ்தாக் லத்தீப்

## கண்மணி....

-ஏ.தாரிக்

உன் நாமத்தை
நாவு உச்சரிக்கையில்
மின்மினிகள்
கண்சிமிட்டும்!

நிலா
உன் நகத்தில்
முகம் பார்க்கும்!

பூக்கள்
உன் கூந்தலில் சூடிட
அவாக் கொள்ளும்!

மின்னல்
உன் எழிலை
அடிக்கடி
படம் பிடிக்கும்

ஆனால்
இவன் இதயம் மட்டும்
கண்மணி உன்
புன்னகைக்காய்
ஏங்கித் தவிக்கும்!

## எதுவரை?

இளமை என்பது எதுவரை
முதுமை எம்மை தொடும்வரை!
இன்பம் என்பது எதுவரை
துன்பச் சுமைகள் வரும்வரை!
அன்பின் மகிமை எதுவரை
பாசப் பிணைப்பை தூண்டும்வரை!
அழகின் பெருமை எதுவரை
ஆசையின் மோகம் தீரும்வரை!
உறவு என்பது எதுவரை
பிரிவு எம்மை நாடும்வரை!
உயிரின் அர்த்தம் எதுவரை
உடலை விட்டு நீங்கும் வரை!
கவிதை என்பது எதுவரை
கற்பனை எம்மில் வளரும்வரை!
காலம் என்பது எதுவரை
கலியுகம் ஒன்று தோன்றும் வரை!

-ரா.சிவனேசன்

## சுமை

S. ஜெகன்

மழை...
மேகத்திற்குச் சுமை...!
மௌனம்...
உள்ளத்திற்குச் சுமை...
கனவு...
கண்களுக்குச் சுமை!
காதல்...
இதயத்திற்குச் சுமை!
கவிதை...
கற்பனைக்குச் சுமை...!
உன் உருவம்...
என் உயிருக்குச் சுமை...!

## நிஜங்கள்!

–அ. அரசரெத்தினம்

நாணமில்லாத
மங்கையும்,
நாதமில்லாத
வீணையும்,
நாணய மற்ற
மனிதரும்,
நாடில்லாத
மக்களும்,
பிரணவமில்லாத
மந்திரமும்,
பிரச்சினை தீர்க்காத
பேச்சுவார்த்தையும்
பிரியமில்லாத
உறவும்,
பெற்றோர் வளர்க்காத
பிள்ளையும்
நிறைவான பயனை
தராத,
நிதர்சனங்கள்!

## புத்தாண்டே...!

- கவித் தென்றல்

இது இரண்டாயிரத்தி
ஓராம் ஆண்டின்
இனிய பிரசவம்!
மனித மனங்கள்
மகிழ்ச்சி மலர்கள் தூவி
வாழ்த்துச் சொல்லும்
வசந்த உற்சவம்!
பூகம்பத்திற்குள்
புதைந்து தவிக்கும்
மனிதத்தை மீட்க
புதிய ஆண்டின்
பூங்கரங்கள்
நீளட்டும்!
ஓ...
புதிய வருடமே - நீ
பணிவுக்குப்
பாய்போட வேண்டும்!
நேர்மைக்கே
நெஞ்சை
நிமிர்த்த வேண்டும்!
உன் ஆட்சிக்குள்
அடங்கப் போகும்
காலங்களை
பாசம் பொங்கும் கடலாய்,
அன்பும் ஓடும் நதியாய்
சுதந்திரம் சுமந்த புத்தகமாய்
மாற்று...!

கவிதைப் பூங்கா

## இதயராகம்

- எம். சுயர்சன்

பாடும் தந்தியை அறுத்து-எந்தன்
இதயத்தில் இறுக இணைத்து
தேடுமென் உறவை நினைத்து
நானிருந்து பாடுகின்றேன்
வாடும் என் நிலையறிந்து-என்னிதய
வாசலின் வேதனைக் கோடறிந்து
ஓடுமோ தென்றல் காற்று-என்
செய்தி சுமந்தவளைத் தேடுமோ?

மலர் சூடும் கூந்தலில்-எந்தன்
மனதைச் சூட்டிச் சென்றவளை
புலர்ந்திடும் புதுப் பொழுதுகளில்
பூப்போன்ற புன்னகையைத் தந்தவளை
தலைவலிக்கும் பாதக் கொலுசாலே-என்
காதை வெட்டிப் போனவளை
பலமிழந்து நான் தவிக்கையில்
தென்றலே நீ தேடாயோ?

இதயத்துள் எழுகின்ற - தெய்வீக
ஒலிகளில் எல்லாம்
உதயமாவது அவளினிய
நாமங்கள் சுமந்த இசையே!
சுவாசிக்கின்ற என் சுவாசக்
காற்றெல்லாம் அவள்
உறவாலே ஒட்டுகின்ற
பாசப் பசையே!

குழிவிழும் கன்னத்தில் - அவள்
விழி சொல்லும் வண்ணத்தை
எழில் கொஞ்சும் மேனியை
தென்றலது தொடுமோ?
பூப்போன்ற அவள் நெஞ்சுக்கு
என் நிலை சொல்லுமோ
தப்பாமல் அவள் விடைதாங்கி - மீண்டும்
எனை நாடிச் செப்புமோ?

# வடக்கில் இந்தக் கொடுமை!
# கைது-சித்திரவதை-படுகொலை!!

## புதை குழிச் சம்பவங்கள் தொடர்கின்றன

குடா நாட்டில் மிருசுவில் பகுதியில் விறகு ஏற்றி வரச் சென்ற பொதுமக்கள் எட்டுப் பேர் படையினரால் கொன்று புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் உருவாக்கி விட்டிருக்கிறது.



நத்தார் தினத்தன்று இப்படி ஒரு செய்தியை யாழ் மக்கள் எதிர்பார்க்கவே இல்லை.

தென்மராட்சியில் மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத்திட்டப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் கடந்த 18ஆம் திகதி இடம் பெயர்ந்து தங்கியிருந்த வடமராட்சிப் பகுதியில் இருந்து மிருசுவிலுக்குச் சென்று அங்கு ஒருநாள் தங்கி இருந்தவேளை இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கிறது.

மிருசுவில் வடக்கில் மாணிக்கத்தார் வளவு எனப்படும் தென்னங்காணியில் காணப்பட்ட ஒரு புதைகுழிக்குள் இருந்து—காணாமற்போய் ஆறு தினங்களுக்குப் பின்பு—நத்தார் தினத்தன்று மாலை இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

எட்டுப் பேருடைய விவரம் வருமாறு:

தேவகுலசிங்கம் (31 வயது), வில்வராஜா (41வயது), அவருடைய இரண்டு பிள்ளைகளான பிரதீபன் (15 வயது), பிரசாந்த் (5 வயது), ஞானபாஸ்கரன் பாஸ்கர் (19 வயது), நடேசு ஜெயச்சந்திரன் (21 வயது), கதிரன் ஞானச்சந்திரன் (35 வயது), அவருடைய மகனாகிய சாந்தன் (15 வயது).

இந்த எட்டுப்பேருடன் கூடச் சென்று,



படையினரின் பிடியில் இருந்து தப்பி வந்ததாகக் கூறப்படும் பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் வெளியிட்டுள்ள தகவல்களே இந்த மனிதப் புதைகுழியை உடனடியாகக் கண்டுபிடிக்க உதவியிருக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அதிகாரி தரத்திலான ஒருவர் உட்பட ஒன்பது படையினர் கைதுசெய்யப்பட்டு இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் அறிவித்திருக்கிறது.

சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் புதைகுழி தோண்டி சடலங்கள் வெளியே எடுக்கப்படுவதற்கு முன்னரே படைத் தரப்பிலிருந்து இது தொடர்பான அறிக்கைகள் விடுக்கப்பட்டு விட்டன.

யாழ்ப்பாண மக்களுக்குப் படையினர் வழமையாக விடுக்கும் நத்தார் வாழ்த்துச் செய்தி இம்முறை வெளியிடப்படவில்லை. அதற்குப் பதிலாக இந்த மனிதப் படுகொலைகள் தொடர்பான செய்தியே படையினர் விடுத்த நத்தார் செய்தியாக வந்திருக்கிறது.

இந்தக் கொடூரக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வரும் அதே வேளை மிருசுவில் பிரதேச மக்களின் மத்தியில் இச்சம்பவம் தொடர்பாகப் பேசப்பட்டு வரும் தகவல்கள் பெரும் பீதி ஊட்டுவனவாக உள்ளன பல்வேறு சந்தேகங்களையும்

**காணாமல் போன 8 பேரின் சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டன.**

*****

**படையினர் சிலர் விசாரணையில்**

ஊகங்களையும் கூட அவை உருவாக்கி விட்டிருக்கின்றன.

கொலையுண்ட எட்டுப் பேரையும் அப் பகுதியில் காணப்பட்ட படையினர் பிடித்துக் கண்களைக் கட்டித் தாக்கியதை கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் ஒருவாறு தன்னால் பார்க்க முடிந்ததாகத் தப்பிவந்த நபர் கூறியுள்ளதாகத் தகவல்.

அங்குள்ள மலசலகூடம் ஒன்றுக்குள் வைத்து ஒவ்வொருவராகக் கொல்லப்பட்ட பின் சடலங்கள் ஒரே குழியில் புதைக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் நால்வரின் சடலங்கள் நாக்கு வெட்டப்பட்டுக் காணப்படுவதும் பலியான ஐந்து வயதுச் சிறுவனின் வலது கால் திருகி முறித்து எடுக்கப்பட்டுக் கிடப்பதும் இவர்கள் அனைவரும் கொல்லப்படுவதற்கு முன் கொடூர சித்திரவதைக்கு ஆளாகியிருக்கலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

முன்னரும் பல தடவைகள் இந்தப் பகுதிக்கு அனுமதி பெற்று விறகு ஏற்றச் சென்றுவந்த இவர்களை அன்று மட்டும் படையினர் தடுத்து வைத்தது ஏன் என்ற கேள்வியை மிருசுவில் வாசிகள் எழுப்புகின்றனர்.

இதைவிடப் பீதியூட்டும் வேறு பல கதைகளும் மக்கள் மத்தியில் அடிபடுகின்றன.



அந்தப் பிரதேசத்துக்கு விறகு வெட்டுவதற்கு முன்னர் ஒரு தடவை சென்றிருந்த சமயம் இவர்கள் அங்கு புதைகுழியை ஒத்த ஓர் இடத்தைக் கண்டதாகவும்—

மனிதக் கையொன்று அப் பகுதியில் தரைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்ததாகவும் பெண்கள் அணியும் செருப்பு மற்றும் சில ஆடைகள் அங்கு காணப்பட்டன என்றும்

இந்தச் சம்பவத்தில் பலியான ஒருவர் அவரது இளம் மனைவியிடம் ஏற்கனவே கூறியிருந்தார் என்ற பரபரப்பான கதையும் இப்போது கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான தெய்வகுலசிங்கம் (வயது 21) அவரது மனைவியான ஜெயசுதாவுக்குத் தெரிவித்ததாகக் கூறப்படும் மேலும் அதிர்ச்சி ஊட்டும் பல தகவல்களும் வெளியாகி உள்ளன.

மஞ்சள் நிற 'சுடிதார்' அணிந்த இளம் பெண் ஒருவரின் சடலம் அப்பகுதியில் புதையுண்ட நிலையில் கிடப்பதை விறகு வெட்டச் சென்றோர் கண்டு கொண்டதாகவும்—

அது குறித்து அப்பகுதிப் படையினருக்கு அவர்கள் முறை



யிட்டு இருந்ததாகவும் ஒரு தகவல்.

இந்தத் தகவல் போர்முனைப் பிரதேசமான அப்பகுதியில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

நீண்ட – பீதியூட்டும் சரித்திரங்களைக் கொண்ட மனிதப் புதைகுழிகள் பற்றிய கதைகள் யாழ்ப்பாண மக்களுக்கு ஒன்றும் ஆச்சரியமான விடயங்கள் அல்லவே.

—ஆதர்ஷாதாஸ்

# இராணுவ மேலாதிக்கத்தை தக்கவைக்க முழு முயற்சி

## கள நிலைமை எப்படி?

பி.ரமணன்

கடந்த டிசம்பர் 21ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் விடுதலைப் புலிகளின் வன்னி நடவடிக்கைத் தலைமைச் செயலகம், லண்டனில் அமைந்துள்ள சர்வதேச தலைமைச் செயலகத்தினூடாக டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவில் இருந்து ஒருதலைப்பட்சமான 1மாத கால யுத்த நிறுத்தம் செய்யவிருப்பதாக அறிவித்தது.

விடுதலைப் புலிகள் மீது சர்வதேச அழுத்தத்தை வலுப்படுத்தும் முயற்சியில் சந்திரிகா அரசு முழுமூச்சாக ஈடுபட்டுவருகின்றது.

இந்நிலையில் அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது போல் பிரபாகரன் மேற்கொண்ட இந்த திடீர் அறிவிப்பு அமைந்தது. நிபந்தனையற்ற பேச்சிற்கு புலிகள் தயார் என்று முன்னர் அறிவித்ததைத் தொடர்ந்து ஆடிப் போயிருந்த அரசை இந்தப் புதிய அறிவிப்பு பெருமளவில் அசௌகரியத்திற்கு உள்ளாக்கியிருக்கும் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை.

ஏற்கனவே 7க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் வெளிநாட்டில் தங்கியிருக்க இங்குள்ள அமைச்சர்கள் தத்தமது இச்சைப்படி கருத்துக்களை முன்னிற்குப்பின் முரணாக வெளியிடத் தொடங்கினர்.

அரசின் உண்மையான நிலைப்பாடு என்னவென்று தெரியாத ஒரு நிலையில் நாட்டு மக்கள் திணறிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் அவற்றிற்கெல்லாம் ஆணி அறையுமாப்போல் படை நகர்வொன்று திடுதிப்பென யாழ் நகருக்கண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற சில இராணுவ நடவடிக்கைகளால் சற்றுப் பின்னடைவைச் சந்தித்த புலிகள் மேன் மேலும் இழப்புக்களையும், தோல்விகளையும் தவிர்க்கும் ஒரு தந்திரோபாய நடவடிக்கையாக, பலவீனமானதோர் நிலையிலேயே ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தத்தை அறிவித்திருக்கிறார்கள். -இவ்வாறு தப்பாக எடைபோட்ட இராணுவ அரசியல் தலைமைகள் அடுத்த 12 மணிநேரத்தில் தென்மராட்சிப் பகுதியில் இருந்து யாழ். நகரை நோக்கிப் பாரிய படைநகர்வொன்றை மேற்கொண்டன.

வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் ஆட்டிலறி, மற்றும் மல்டிபரல் எறிகணை மழைக்கு மத்தியில் T -55 ரக யுத்த தாங்கிகள் சகிதம் படையினர் மூன்று முனைகளில் முன்னேற முயன்றனர். அண்மையில் இலங்கை வந்து சேர்ந்த மிக் -27 கிபிர் மீயொலித் தாரை குண்டு வீச்சு விமானங்களும் எம்.ஐ -24 ரக உலங்கு வானூர்திகளும் முன்னேறும் படையினருக்கு உதவியாகத் தாக்குதல்களில் ஈடுபட்டன.

இப்படை நடவடிக்கைக்கு "கினிஹிர -7" என்று பெயரிடப்பட்டது. இலங்கை இராணுவத்தின் 51ஆவது டிவிஷன் தனது பிரதான கட்டளையிடும் அதிகாரியான (General officer commanding) மேஜர். ஜெனரல் காமினி ஜெயசுந்தரவின் தலைமையிலும் 53ஆவது டிவிஷன் தனது பிரதான கட்டளையிடும் அதிகாரியான மேஜர் ஜெனரல் சீவலி வணிக சேகரவின் தலைமையிலும் மும்முனைகளில் முன்னேறின.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமானபோது இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவும், விமானப்படைத்தளபதி எயர்மார்ஷல் ஜயலத் வீரக்கொடியும், கூட்டுப்படைத் தலைமை தளபதி ஜெனரல் ரொஹான் தலுவத்தையும் பலாலியில் தங்கிநின்று தாக்குதலை நேரடியாக வழிநடத்தினர்.

நுணாவில் பகுதியில் இருந்து கைதடியை நோக்கி ஒரு தொகுதி துருப்பினரும், கோப்பாய் நிலைகளில் இருந்து கைதடியை நோக்கி இரண்டாவது தொகுதியினரும், முன்னேறினர்.

யாழ். நகரின் கிழக்கு வாயிலான அரியாலைப் பகுதியில் இருந்து மூன்றாவது தொகுதியினர் நாவற்குழியை நோக்கி பிரதான யாழ் - கண்டி - A 9 வழங்கல் பாதையை நோக்காகக் கொண்டு நகர்ந்தனர்.

முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதற் படையணிகளும், மோட்டார் பீரங்கிப் படையணிகளும் மூர்க்கத்தனமான எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டன.

ஆரம்பத்தில் படையினர் மீது புலிகள் தமது ஆக்ரோஷமான எதிர்ப்பைக் காட்டினர்.

பாரிய ஆளணி, ஆகாயத் தாக்குதல்கள் சகிதம் முன்னேறும் இராணுவத்தினால் தமது தரப்பில் ஏற்படக்கூடிய இழப்புக்களை தவிர்த்துக்கொள்ளும் நோக்குடன் சற்று பின்நோக்கி தமது நிலைகளை மாற்றி அமைத்தனர்.

முன்னேறும் படையினருக்கு புலிகளின் தரைக் கண்ணிவெடிகள் பெரும் தலையிடியைக் கொடுத்து இலகு நகர்வைத் தாமதப்படுத்தின.

எனினும் நுணாவில் பகுதியில் இருந்து முன்னேறிய தொகுதியினர் சுமார் மூன்று மணிநேரத்தில் கோப்பாய் பாலத்தை வந்ததடைந்ததாக இராணுவத்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் "கினிஹிர -7" இராணுவம் தனது முதலாவது நோக்கத்தை அடைந்தது.

ஆனாலும் மற்றைய இருமுனைகளிலும் இராணுவத்தினர் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

நாவற்குழி பாலத்தையும் படையினர் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர எடுத்த முயற்சிகள் புலிகளின் மூர்க்கத்தனமான மோட்டார் மற்றும் சினைப்பர் தாக்குதல்களினால் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டன.

மதியத்திற்கு சற்றுப்பின்னர் "கினிஹிர -7" இன் முதலாவது நாள் தாக்குதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தன.

இராணுவத் தரப்புத் தகவல்களின் படி அதிகாலை மோதல்களின் போது படையினர் தரப்பில் இருவர் கொல்லப்பட்டு 30 பேர் காயமடைந்தனர். ஆனால் படைநடவடிக்கை மதியம் முடிவடைந்தபோது மொத்தமாக ஒரு அதிகாரி உட்பட 25 படையினர் கொல்லப்பட, மேலும் 47 பேர் காயமடைந்தனர். இவர்களில் 6 படைவீரர்கள் கடுங்காயங்களிற்கு உள்ளாகினர்.

புலிகள் தரப்பில் 51 பேர் கொல்லப்பட்டதாகக் கூறும் இராணுவம் இவர்களில் 30 புலிகளின் சடலங்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் வெள்ளிக்கிழமை தாக்குதலின் போது பிரதான, யாழ் - கண்டி A 9 பாதையில் 3-1/2 கி.மீ. உட்பட 34 சதுர கி.மீ. படையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 1 ஆம் திகதி வன்னியில் பிரபாகரன் நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மை சந்தித்த பின் புலிகள் தமது தாக்குதல்களை விசேடமாக யாழ்மாவட்டத்தில் குறைத்துவிட்டனர்.

ஆனால் அதற்கு நேர்மாறாக இராணுவமோ நான்கிற்கும் மேற்பட்ட இராணுவ நடவடிக்கைகளை "ஒபரேஷன் கினிஹிர" என்னும் பெயரின் கீழ் பல்வேறு கட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் இராணுவம் இதுவரை காலமும் தான் ஈடுபட்டு வந்த "தற்காப்பு யுத்தம்" என்ற நிலையில் இருந்து விடுபட்டு "தேடியழிக்கும் யுத்தம்" என்ற நிலைக்குத் தன்னை மாற்றப்பார்க்கிறது போல் தெரிகிறது.

இதன் மூலம் புலிகள் பலவீனமான நிலையில் தான் இருக்கிறார்கள் என்று உறுதி செய்யப்பார்க்கிறது.

சாவகச்சேரியில் இருந்து யாழ் - கண்டி பிரதான வீதியூடாக யாழ். நகரத்திற்கான இழந்த தொடர்பை இணைக்க இராணுவம் முயல்கிறது.

ஆனால் புலிகளோ, படையினரது எண்ணத்தை நிறைவேற விடாத வகையில் மிகவும் சாணக்கியமாக தமது போரிடும் ஆற்றலை வெளிப்படுத்தித் தொடர்ந்து கைதடி, நாவற்குழி பகுதிகளில் நிலை கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில், புலனாய்வுத் துறை அறிக்கைகளின்படி, சுமார் இரண்டு வாரங்களிற்கு முன்னர் புலிகளின் தலைவர் பிரபாகரன் யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த தனது இயக்க மூத்த தாக்குதல் தளபதிகளான லோறன்ஸ், மன்மதன் மற்றும் பரணி போன்றோரை வன்னிக்கு அழைத்திருக்கிறார்.

சுமார் மூன்று நாட்கள் வரை கலந்துரையாடிவிட்டு, மீண்டும் யாழ். மாவட்டத்துக்கு அவர்களை அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. இவர்கள் தற்போது புலிகளின் ஆட்டிலறிப் பிரிவுத் தளபதி கேர்ணல் பானு தலைமையில் செயற்படுவதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் என்ன கலந்துரையாடினார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

எப்படியிருப்பினும், இராணுவம் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பின் பின் தாக்குதலில் ஈடுபட்டு இராணுவ மேலாதிக்கத்தை தக்கவைக்க முனைந்தது ஏதோ உண்மைதான்.

அதாவது யுத்த நிறுத்த அறிவிப்பினால்தான் யாழ். யுத்தகளம் கடந்த வாரம் சூடுபிடித்தது என்று கூறினால் அது மிகையாகாது.

ஆனாலும், புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அரசு அடியோடு நிராகரித்ததன் மூலம் புலிகளின் கோபத்தைத் தேடிக்கொண்டது மட்டுமல்ல சர்வதேச சமூகங்களின் கண்டனப் பார்வைக்கும் உள்ளாகியிருக்கிறது.

இவை இனிவரும் வாரங்களில் யுத்தகளம் மேலும் சூடாக இருக்கப்போவதையே கோடிட்டுக் காட்டுகின்றன.


இதேவேளை, படையினரால் கைது செய்யப்படுவோர் சடலங்களாக புதை குழிகளில் இருந்து கண்டெடுக்கப்படும் நிகழ்வுகள் தொடர்கதையாகவே இருக்கின்றன.

1995இல் ரிவிரெச இராணுவ நடவடிக்கைகள் மூலம் குடாநாட்டைக் கைப்பற்றிய படையினர் அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல் என்ற போர்வையில் சந்தேகத்தின் பேரில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைதுசெய்து காவலில் விசாரணை என்னும் பேரில் தடுத்துவைத்தனர்.

இவ்வாறு கைதானோரில் 600க்கு மேற்பட்டோர் இன்னும் வீடு திரும்பவில்லை. இவர்களுக்கான விசாரணை பின்னர் செம்மணிப் புதைகுழிகளிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இதற்குப் பொறுப்பானவர்கள் எனக் கூறிச் சில படையினர் கைது செய்யப்பட்டபோதும் கட்டளையிடும் அதிகாரிகள் இன்னும் சேவையிலேயே இருக்கின்றனர்.

இந்நிலையில் தான், கடந்த 19ஆம் திகதி படையினரின் அனுமதியுடன் நெல்லியடியிலிருந்து தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 9 பேர் காணாமல் போயிருந்தனர். இவர்களில் ஒருவர் காயங்களுடன் தப்பி வந்து விட்டார்.



ஆனால் மற்றைய 8 பேரினதும் சடலங்கள் புனித கிறிஸ்மஸ் தினமான திங்கட்கிழமை மாலை மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் 8 அடி நீளமும், 4 அடி அகலமும், 2 அடி ஆழமும் கொண்ட புதைகுழி ஒன்றில் இருந்து கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சில சடலங்களில் தலைகள் துண்டிக்கப்பட்டும் காணப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 5 வயது சிறுவனும் அடக்கம்.

இக்கொடூரக் கொலைச் சம்பவம் தொடர்பாக அதிகாரி தரத்தில் உள்ள ஒருவர் உட்பட ஒன்பது இராணுவ வீரர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவின் விசேட பணிப்புரையின் பேரில் விசேட இராணுவப் பொலிஸ் அணியொன்று பொலிஸாரின் விசாரணைக்கு உதவிசெய்யும் பொருட்டு நியமிக்கப்பட்டு அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்

# அமெரிக்காவில் இந்து தெய்வங்கள் அவமதிப்பு

இந்து தெய்வங்களை அவமதிக்கும் கொடுமை அமெரிக்காவில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மலசலகூடத்திற்கும் பிள்ளையார், காளி உருவங்களை கொண்டு வந்து விட்டார்கள்.

கடந்த ஜூலை மாதம் கலிபோர்ணியாவில் உள்ள (Fortune Dynamics) என்ற நிறுவனம் பெண்கள் அணியும் குதிக்கால் சப்பாத்துகளில் விதம் விதமான கலர்களில் அம்மன், பிள்ளையார், விஷ்ணு உருவங்களைப் பொறித்து விற்பனை செய்தது. இவற்றை வாங்குவதற்கு அமெரிக்கப் பெண்களிடையே போட்டா போட்டி ஏற்பட்டது.

இதை அறிந்த விஷ்வ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் போன்ற இந்துமத அமைப்புக்கள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தன. அதையடுத்து சப்பாத்து விற்பனையை வெளிப்படையாக இல்லாமல் ரகசியமாகச் செய்தனர்.

அமெரிக்காவில் தற்போது கடவுள் உருவம் பதிக்கப்பட்ட டொய்லெட் ஸீட் (மலசலகூட இருக்கை) விற்பனைக்கு வந்திருக்கிறது.

சியாட்டில் நகரிலுள்ள (Sitting Pretty) என்ற நிறுவனம் பிள்ளையார், காளிபடம் போட்ட டொய்லட் ஸீட்களைத் தயாரித்துவிற்பனைக்கு அனுப்பியது. ஒரு டொய்லட் ஸீட்டின் விலை 130 டாலர் (சுமார் 9000 ரூபா) கம்பியூட்டர் மூலம் e.commerce முறையில் விற்கும் யுக்தியைக் கையாண்டது இந் நிறுவனம்.



மலம் கழிக்கும் கொமோட் மூடியில் பிள்ளையார் உருவம்

டொய்லட் ஸீட் வாங்க விரும்பு கிறவர்கள் தங்களுக்குப் பிடித்த மான டிஸைனை 'இன்டர்நெட்'டில் க்ளிக் செய்து, வீட்டு விலாசத்தை ஈ–மெயில் வழியாகக் கொடுத்து விடுவதோடு, கிரெடிட் கார்ட் அல்லது செக் மூலம் பணம் செலுத்தினால் டொய்லெட் ஸீட் வீடு தேடி வரும்.

Sacred Seats என்ற பெயருடன் அறிமுகமாகியுள்ள இந்த டொய்லெட் ஸீட் மூடியில் பிள்ளையார், காளி படங்களை வரைந்து கடவுள்களைப் பற்றி சிறுகுறிப்பும் எழுதியிருந்தது அந்த நிறுவனம்.

"யானை வடிவ கடவுளைக் காலையில் பார்த்தால் காரியம் ஜெயமாகும்". "காளியைப் பார்த்தால் நினைத்த காரியம் கைகூடும், தைரியம் உண்டாகும்" என்றெல்லாம் அந்த நிறுவனம் வெப்தள விளம்பரத்தில் பிரசாரம் செய்தது. விற்பனை எக்கச்சக்கமாக உயர்ந்தது.

இந்து நிறுவனங்கள் டொய்லெட் ஸீட் தயாரிக்கும் அந்த நிறுவனத்துக்கு கடுமையான கண்டனம் தெரிவித்தன. மறியல் போராட்டம் என்று ஏகப்பட்ட அறிவிப்புகள் வந்ததும் Sitting Pretty நிறுவனம் மெல்ல அந்த வெப் தளத்தையே எடுத்துவிட்டது.

இதன் உரிமையாளர் லாமர் வான் டைக் ஒரு பெண், மனித உடம்பில் பச்சை குத்தும் கலைஞர், அவருக்கு இந்து மதத்தைப் பற்றியும் அதன் புனிதத்துவம் பற்றியும் நன்றாகத் தெரியும். தன்னினச் சேர்க்கைக் குழுவின் முக்கிய பிரமுகரான இந்தப் பெண், 'விற்பனைக்காகக் கடவுளின் உருவங்களை வரைந்தேன்' என்று கூறியிருக்கிறார்.

"அமெரிக்கர்களிடையே இந்து மதத்தின் பால் ஒரு ஈடுபாடு வரத் தொடங்கியிருப்பதால் விஷ்ணு, சிவன், பிள்ளையார் உருவங்களைப் பெரிதும் விரும்புகிறார்கள். அநேக அமெரிக்கர்களின் வீட்டில், நடராஜர் சிலை இருக்கும். அப்படியிருக்க, ஒரு தரப்பினர் மதச்சின்னங் களைக் கேவலப்படுத்துவது தவறு. அதற்காகத்தான் போராடுகிறோம்..." என்கிறார் இந்து மதப் பிரமுகர் விஜய் பல்லோக்.

சிகாகோவில் 'கர்மா' என்னும் நைட் கிளப்–பார் மிகவும் பிரபலம். இந்தப் பார்



காளி அம்மனையும் விட்டு வைக்கவில்லை

உள்ளே நடுநாயகமாக நடராஜர், விஷ்ணு, உருவச் சிலைகளுடன் நடன மண்டபத்தில் நடராஜர் சிலையும் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கிளப்பை நடத்துகிறவர் சீனிவாச ரெட்டி என்னும் இந்தியர். இந்த விவகாரத்தையும் கையிலெடுத்தன அமெரிக்காவில் உள்ள இந்து அமைப்புக்கள். மறியல் போராட்டம் நடத்தப்போவதாகக் கூறியவுடன் ரெட்டி அந்தச் சிலைகளை அகற்றிவிட்டார்.

—பிரகாஷ் எம்.ஸ்வாமி

# இமாலயத்தில் பனி மனிதன் தேடலில் தலாய்லாமா ஆர்வம்

இமயமலையில் "யெட்டி" எனப்படும் பனிமனிதன் வாழுகிறானா?

பனிமனிதனைக் கண்ட ஒரே மலையேறி என்ற பெருமையைப் பெற்றவர் ரெயின் ஹோல்ட் மெஸ்னர். அவர் அண்மையில் திபெத்திய மதகுரு தலாய்லாமாவைச் சந்தித்து தமது ஆய்வுகள் பற்றி விளக்கினார்.

பனி மனிதனைக் கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகளின் முயற்சிக்கு மெஸ்னர் உதவ வேண்டும் என்று தலாய்லாமா கேட்டுக் கொண்டார்.


உண்மை உலகத்தில் வாழ்பவர் மெஸ்னர். இவர் பிராண வாயுவை மேலதிகமாக எடுத்துச் செல்லாமல் 8000 மீற்றர்கள் உயரத்தைக் கடந்து 14 மலை உச்சிகளையும் எவரெஸ்ட் சிகரத்தையும் அடைந்தவர். இன்று உயிர்வாழும் மிகவும் வெற்றிகரமான மலையேறி.

மெஸ்னர் ஒரு மலையேறியும், ஆய்வாளரும் மட்டுமல்லர், சிறந்த சிறுகதை எழுத்தாளரும் கூட. இதுவரை இவர் 12 நூல்களை எழுதியுள்ளார். இவர் "யெட்டி" எனப்படும் பனிமனிதனைத் தேடும் பணியில் பல மர்மங்களைச் சந்தித்ததுடன் பல வீரசாதனைகளையும் புரிந்துள்ளார்.

அதாவது, தனது காலடிகளைப் பதித்து பலரையும் பார்க்கும்படி செய்தாலும், இந்த "யெட்டி" நேரில் எவராலும் காணப்பட முடியாததாயும் இருக்கின்றது.

இதனால் மெஸ்னர் இவ்விலங்குபற்றி நிறையவே ஆராய்ந்து கொண்டிருந்தாலும் நடைமுறையில் அவ்வாறான ஒன்றைக் கண்டுபிடிக்க முடியாதவராயுமிருக்கின்றார். யெட்டி என்னும் ஒரு விலங்கு உண்மையில் இருக்கிறதா என்று பலரும் கேட்கும் கேள்விகளுக்கு விடை காணவே அவர் முயல்கிறார்.

யெட்டியை மெஸ்னர் கிழக்குத் திபெத்திய காடுகளில் மீக்கொங் ஆற்றுப் பகுதிகளில் 1986இன் நடுப்பகுதியில் முதன்முறையாகக் கண்டிருக்கின்றார். முதன்முதலில் அதனைக் கண்டபோது திகைப்படைந்தார். ஏற்பட்ட திகைப்பின் மத்தியில் அதனை நிழற்படமெடுக்க வேண்டுமென அவர் நினைக்கவில்லை.



பனி மனிதனைக் கண்ட மெஸ்னருடன் தலாய்லாமா

ஆனால் அது விட்டுச் சென்ற பாதச்சுவடு ஒரு விடயத்தை அவருக்கு உணர்த்தியது. அதாவது, 1951இல் எரிக் ஷிப்ரன் என்பவர் இமாலய ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார். அவர் நிழற்படமெடுத்து வைத்திருந்த யெட்டியொன்றின் பாதச்சுவடு போன்றேயிருந்தது மெஸ்னர் கண்ட பாதச்சுவடும். அவர் தொடர்ந்து அதனைத் தேடுவதில் முயற்சிகளை மேற்கொண்டார். வெற்றியும் கண்டார்.

பனிமனிதனின் உயரம் சுமார் ஏழு அடி இருக்கும். மெஸ்னர் அதனை உற்றுப் பார்த்தவேளை அது தனது வடிவத்தை மாற்றிக் கொண்டதையும் அவதானித்தார். ஒரு மனிதனை விட வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் அது ஓடி மறைந்தது.

அன்றிலிருந்து மெஸ்னரின் ஆர்வம் பலமடங்காகி விட்டது. இதுவரை அவர் 21தடவைகள் அதே திபெத்தின் பகுதிகளை ஆய்வுக்குட்படுத்தி விட்டார். இந்த யெட்டி தேடல் ஆய்வுகளை இவர் 1998இல் வேர்ல்ட் ஒப் சயன்ஸ் நிறுவனத்திற்கு கையளித்துள்ளார்.

இதேவேளை கரக்கோரம் தொடக்கம் பூட்டான் வரையிலும், நேபாளம் தொடக்கம் கிழக்கு திபெத் வரையிலும் இவர் பலரிடம் இதுபற்றி கேட்டறிந்து விளக்கங்களைப் பெற்றுள்ளார்.

அவர்கள் கூறுவதன்படி இவ்விலங்கு இருகால்களால் நடக்கிறது. மனிதனைவிட உயரமானதாகவும், மயிர்கள் நிறைந்ததாகவும் இருக்கிறது. மிகவும் வேகமாக ஓடவும், மலைத்துடன் செயற்படவும் அதனால் முடியும்.

சில அரசபாளிகைகளில் உள்ள சில ஞாபகச்சின்னங்கள் மெஸ்னரிடம் காண்பிக்கப்பட்டன. அவை யெட்டியினது எனவும் கூறப்பட்டது. மெஸ்னர் இது தொடர்பாக ஜேர்மனிய ஆய்வாளர் ஒருவருடன் தொடர்பு கொண்டார்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் யெட்டியைத் தேடும் பணியில் திபெத்தில் வாழ்ந்த அவரின் அனுபவங்களும் பெறப்பட்டன. இறுதியில் 1997இல் கோடைப்பருவத்தில் கரக்கோரம் மலைப்பகுதியில் மெஸ்னரால் யெட்டி போன்ற ஒரு விலங்கைப் படம்பிடிக்க முடிந்துள்ளது.

அத்துடன் அவர்தான் இதுவரை செய்த ஆய்வுகள் யாவற்றையும் திரட்டி நூலுருவமாக்குவதில் ஈடுபட்டுள்ளார். அவருடைய முயற்சிகளுக்கு தலாய்லாமாவின் ஆசியும் கிடைத்திருக்கிறது.

—தர்மலிங்கம்

# சுடர்

# THE SUDAR OLI

# 20

## விடுமுறைத் தினங்கள் –2001

| | | | |
|---|---|---|---|
| ஜன. | 9 | துருது போய தினம் | ✱ +# |
| ஜன. | 14 | தைப்பொங்கல் தினம் | ✱ +# |
| பெப். | 4 | சுதந்திர தினம் | ✱ +# |
| பெப். | 7 | நவம் போயதினம் | ✱ +# |
| பெப். | 21 | மஹாசிவராத்திரி | ✱ + |
| மார்ச் | 6 | ஹஜ்ஜுப் பெருநாள் | ✱ + |
| மார்ச் | 9 | மெதின் போய தினம் | ✱ +# |
| ஏப். | 7 | பக் போய தினம் | ✱ +# |
| ஏப். | 13 | பெரியவெள்ளி | |
| ஏப். | 13 | சிங்கள, தமிழ் புது வருடப்பிறப்புக்கு முதல் நாள். | ✱ +# |
| ஏப். | 14 | சிங்கள, தமிழ், புதுவருடப் பிறப்பு | ✱ +# |
| மே | 1 | மே தினம் | ✱ +# |
| மே | 7 | வெசாக் போய தினம் | ✱ +# |
| மே | 8 | வெசாக்கிற்கு மறுதினம் | ✱ +# |
| ஜூன் | 5 | பொசன் போய தினம் | |
| | | முஹமது நபி பிறந்த தினம் | ✱ +# |
| ஜூலை | 5 | எசல போய தினம் | ✱ +# |
| ஆக. | 3 | நிக்கினி போய தினம் | ✱ +# |
| செப். | 2 | பினார போய தினம் | ✱ +# |
| ஒக். | 2 | அதிவப் போய தினம் | ✱ +# |
| ஒக். | 31 | வப் போய தினம் | ✱ +# |
| நவ. | 14 | தீபாவளி | ✱ + |
| நவ. | 30 | இல் போய தினம் | ✱ +# |
| டிச. | 17 | ரம்ழான் பெருநாள் | ✱ + |
| டிச. | 25 | நத்தார் | ✱ +# |
| டிச. | 30 | உந்துவப் போய தினம் | ✱ +# |

✱ பொது விடுமுறை + வங்கி விடுமுறை # வர்த்தக விடுமுறை

## இந்துக்களின் விஷேட தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜன. | 14 | தைப்பொங்கல் |
| பெப். | 7 | தைப்பூசம் |
| பெப். | 21 | மஹா சிவராத்திரி |
| மார்ச் | 8 | மாசி மகம் |
| ஏப். | 14 | விஷு வருடப்பிறப்பு |
| மே | 7 | சந்திரா பூரணை |
| ஜூன் | 4 | வைகாசி விசாகம் |
| ஜூன் | 28 | ஆனி உத்தர தரிசனம் |
| ஜூலை | 20 | ஆடி அமாவாசை |
| ஜூலை | 24 | ஆடிப்பூரம் |
| ஆக. | 28 | ஆவணி மூலம் |
| அக். | 17 | நவராத்திரி விரத ஆரம்பம் |
| அக். | 25 | மஹா நவமி சரஸ்வதிபூஜை |
| நவ. | 14 | தீபாவளி, கேதார கௌரி விரதம் |
| நவ. | 16 | கந்த சஷ்டி விரத ஆரம்பம் |
| நவ. | 30 | திருக்கார்த்திகை குமராலய தீபம் |
| டிச. | 1 | விநாயகர் விரத ஆரம்பம் |

## முஸ்லிம்களின் விஷேட தினங்கள்

| | | |
|---|---|---|
| மார்ச் | 6 | ஹஜ்ஜுப் பெருநாள் |
| மார்ச் | 27 | இஸ்லாமிய வருடப் பிறப்பு— ஹிஜ்ரி 1422 |
| ஏப்ரல் | 5 | ஆசூரா தினம் |
| மே | 23 | ஒடுக்கத்துப் புதன் |
| ஜூன் | 5 | முஹம்மது நபி பிறந்த தினம் — மீலாதுன் நபி |
| ஒக். | 14 | மிஃராஜ் பயணம் |
| நவ. | 1 | பராஅத் இரவு |
| டிச. | 3 | பத்ர் யுத்தம் |
| டிச. | 13 | புனித லைலத்துல் — கத்ர் — இரவு |
| டிச. | 17 | ரம்ழான் பண்டிகை — ஈதுல் — பித்ர் |


## கிறிஸ்தவர்களின் விஷேட தினங்கள்

| | | |
|---|---|---|
| பெப். | 11 | புனித லூர்து அன்னை திருவிழா |
| பெப். | 28 | விபூதி திருநாள் |
| ஏப். | 8 | குருத்தோலை ஞாயிறு |
| ஏப். | 13 | பெரிய வெள்ளி |
| ஏப். | 15 | உயிர்ப்பு ஞாயிறு |
| ஜூன் | 13 | கொழும்பு— கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா |
| ஜூலை | 2 | மடுமாதா திருவிழா |
| நவ. | 1 | அனைத்துப் புனிதர்கள் பெருவிழா |
| நவ. | 2 | அனைத்து ஆத்மாக்கள் நினைவு தினம் |
| டிச. | 8 | புனித கன்னிமரியாள் அமலோற்பவப் பெருவிழா |
| டிச. | 25 | நத்தார் பெருநாள் |

## அவசரகால தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலிஸ் | 433333 |
| தீயணைப்புப்படை, அம்பியூலன்ஸ் | 422222 |
| அம்பியூலன்ஸ் (பிரைவேட்) | 323157 |
| பெரியாஸ்பத்திரி (கொழும்பு) | 691111 |
| ரயில் நிலையம் (கோட்டை) | 4358838, 4342215 |
| மத்திய பஸ் நிலையம் — புறக்கோட்டை | 3280811, 3207055, 329604 |
| கட்டுநாயக்க விமான நிலையம் | 03726577—9, 0372680—1 |
| இரத்மலானை விமான நிலையம் | 716261 |
| விபத்துச் சேவை | 691111 |
| குண்டு செயலிழப்பு இராணுவ அலகு, | 434251, 440527 |
| குண்டு செயலிழப்பு பொலிஸ் அலகு | 433333 |
| லஞ்ச ஆணையாளர் திணைக்களம் | 586041, 5862557, 5851701 |
| பாவனையாளர் பாதுகாப்பு | |
| பிரதம பாதுகாப்பு அலுவலகம் | 691191 (Ext. 350), 691922 |
| மின் தடங்கல் | 431139, 431140, 431141 |
| மோசடித் தடுப்பு | 583521 |
| குற்றப் பிரிவு | 691500 |










### JANUARY

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### FEBRUARY

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

### MAY

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### JUNE

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### SEPTEMBER

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


### OCTOBER

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |













வாசிக்கும் நெஞ்சங்களை யோச

# ஒளி

සුඩර් ඔළි

0 1

## MARCH

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## APRIL

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## JULY

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## AUGUST

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## DECEMBER

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
























## அரச மருத்துவ மனைகள்

| | |
|---|---|
| விபத்துப் பிரிவு | 691111 |
| தீக்காயங்கள் அலகு | 693019 |
| இருதய நோய்கள் அலகு | 693039 |
| கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி | 691111 |
| பொது வைத்தியசாலை – கொழும்பு வடக்கு ராகம | 959261 |
| பொது வைத்தியசாலை – கொழும்பு தெற்கு களுபோவில | 822291 |
| கண் வைத்தியசாலை கொழும்பு | 693911 |
| பல் வைத்தியசாலை | 691111 |
| டிசொய்ஸா, பெண்கள் வைத்தியசாலை | 696224 |
| காஸல் வீதி, பெண்கள் வைத்தியசாலை | 696231 |
| புற்று நோய் வைத்தியசாலை – மகரகம | 550252 |
| மார்பு வைத்தியசாலை – வெலிசர | 538271 |
| காய்ச்சல் வைத்தியசாலை – அங்கொடை | 578784 |
| மனநோய் வைத்தியசாலை – அங்கொடை | 578234 |
| அரச ஆயுள்வேத வைத்தியசாலை | 695855 |
| முல்லேரியாவ வைத்தியசாலை | 578226 |
| லேடி றிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை | 693711 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை | 863610 |

## வெளிநாட்டுத் தூதரகங்கள்

| முகவரி | தொலைபேசி |
|---|---|
| அவுஸ்திரேலியத் தூதரகம்<br>03, கேம்பிரிட்ஜ் பிளேஸ், கொழும்பு 07. | 698767–9 |
| பிரிட்டிஷ் தூதரகம்<br>190, காலி வீதி, கொழும்பு 03. | 437336 |
| கனேடியத் தூதரகம்<br>6, கிரகரிஸ் ரோட், கொழும்பு –07. | 695841–3 |
| பிரான்ஸ் தூதரகம்<br>89, ரொஸ்மிட் பிளேஸ், கொழும்பு –07. | 698815 |
| ஜெர்மன் தூதரகம்<br>40, அல்பிரட் ஹவுஸ் அவெனியு, கொழும்பு –03. | 580431 |
| இந்தியத் தூதரகம்<br>36–38, காலி வீதி, கொழும்பு –03. | 421605 |
| ஈரான் தூதரகம்<br>17, புல்லர்ஸ் ரோட், கொழும்பு –07. | 501137 |
| ஈராக் தூதரகம்<br>19, பான்ஸ் பிளேஸ், கொழும்பு –07. | 696600, 698602 |
| குவைட் தூதரகம்<br>3வது மாடி, ஹில்டன் ஹோட்டல், கொழும்பு –01. | 544644 |
| நெதர்லாந்து தூதரகம் (ஹொலண்ட்)<br>25, டொரிங்டன் அவெனியு, கொழும்பு –07. | 589626 |
| நோர்வே தூதரகம்<br>34, வாட் பிளேஸ், கொழும்பு –07. | 698936, 692263 |
| பாகிஸ்தான் தூதரகம்<br>211, டி.சேரம் பிளேஸ், கொழும்பு –10. | 696301–2 |
| சவூதி அரேபியத் தூதரகம்<br>39, சேர். ஏர்னஸ்ட் டி.சில்வா மாவத்தை, கொழும்பு –07. | 682087 |
| சுவிட்சர்லாந்து தூதரகம்<br>63, கிரகரிஸ் ரோட், கொழும்பு –07. | 695117 |
| அமெரிக்கத் தூதரகம்<br>210, காலி வீதி, கொழும்பு –03. | 448007 |
| மலேசியத் தூதரகம்<br>92, கின்ஸி ரோட், கொழும்பு –07. | 686090 |

## பஸ் பாதை இலக்கங்கள்

| இலக்கம் | ஓடும்பாதை |
|---|---|
| 100. | கொழும்பு – பாணந்துறை |
| 101. | புறக்கோட்டை – மொரட்டுவ |
| 103. | கோட்டை – நாராஹென்பிட்டி |
| 107. | புறக்கோட்டை – எலக்கந்த |
| 112. | கொட்டாஞ்சேனை – மஹரகமை |
| 115. | புறக்கோட்டை – நுகேகொடை |
| 116. | மட்டக்குளி – பிலியந்தலை |
| 120. | புறக்கோட்டை – ஹொரணை |
| 138. | கொழும்பு – ஹோமாகம |
| 143. | புறக்கோட்டை – ஹங்வெல்ல |
| 144. | புறக்கோட்டை – ராஜகிரிய |
| 145. | புறக்கோட்டை – மட்டக்குளி |
| 152. | புறக்கோட்டை – ஐ.டி.எச். , கொஸ்வத்தை |
| 154. | கல்கிஸ்ஸை – கிரிபத்கொடை |
| 155. | மட்டக்குளி – ரத்மலானை/ மொரட்டுவை |
| 167. | தெஹிவளை – பாலத்துறை |
| 171. | கோட்டை – கொஸ்வத்தை (பத்தரமுல்லை |
| 173. | நாராஹென்பிட்டி – கோட்டை |
| 01. | கொழும்பு– கண்டி. |
| 02. | கொழும்பு – காலி – மாத்தறை |
| 03. | கொழும்பு – கதிர்காமம் (இரத்தினபுரி ஊடாக) |
| 08. | கொழும்பு – மாத்தளை |
| 32. | கொழும்பு – கதிர்காமம் |
| 48. | கொழும்பு – மட்டக்களப்பு |
| 49. | கொழும்பு – திருகோணமலை |
| 99. | கொழும்பு – பதுளை |
| 122. | கொழும்பு – அவிசாவலை |

சிக்க வைக்கும் ஒரே பத்திரிகை!

# அம்மாவுக்குத் தாலி

அழகான சிறிய பெட்டிக்குள் ஒரு தாலிக்கொடி அதை வெளியில் எடுத்து கையில் பிடித்தபடி "என்ரை பிள்ளை எனக்கெண்டு அனுப்பியிருக்கு" என்று சொல்லியவாறு மகிழ்ச்சியில் பூரித்துவிட்டாள் என் மனைவி.

அவளுக்கு மட்டுமல்ல எனக்கும் கூடத்தான் பூரிப்பு.

நல்ல தங்கப்பவுணப்பா என்ன மாதிரி இது மினுங்குதென்று பாருங்கோ " தாலிக்கொடி என் கைக்கு மாறியது. 22 கரட்" என்று சொன்னதோடு எனது வியாபார தொழில் புத்தி உடனே தலை தூக்கவே அதைக் கைகளில் தூக்கிப் பிடித்தபடி கொடியின் நீளம் பார்த்தேன். அடுத்து அப்படியே அந்த மின்னல்கொடியைக் கைக்குள் அடக்க அது சுருண்டு விட்டதும் இரண்டு மூன்று முறை கொஞ்சம் உயரத் தூக்கிப் போட்டுப் பார்த்து எடையும் பார்த்தேன்.

"எட்டு ஒன்பது பவுண் நிறையிருக்கும் போல" என்றேன்.

" இல்லை! கூட ஒன்பதரைப் பவுண் என்று தான் கொண்டு வந்த தம்பி சொன்னவன்" மனைவி கூறினாள்.

பின்பு நகையை நான் அவளிடம் கொடுக்க அதை டிரெசிங்டேபிள் லாச்சியில் வைத்து பூட்டினாள். பிற்பாடு இருவரும் முன் அறைக்குப் போய் இருந்து கொண்டோம். அங்கே எங்கள் மகனின் நோர்வே நிலைவரம் குறித்துக் கதைக்க ஆரம்பித்தோம்.

நோர்வேயில் எனது மகனுடன் ஒரே அறையில் குடியிருக்கும் அந்த இளைஞன் இங்கே எனது வீட்டிற்கு வந்திருந்த போது நான் ஒரு அலுவலாக வெளியே போய் இருந்தேன் மனைவியுடன் கதைத்த பின் நகைப் பெட்டியை கொடுத்துவிட்டு அவன் போய் விட்டானாம்.

மகன் என்ன மாதிரி இருக்கிறான் என்று அறிய எனக்கும் ஆவல் மேலிட்டது. "தங்கம்" என்று மனைவியைப் பெயர் சொல்லி அழைத்தவாறே" என்ன மாதிரி இருக்கிறானாம் ஜெகன் ? என்று மகனுடைய நிலைவரத்தை கேட்டேன்.

மகனுடைய பேச்சை ஆரம்பித்ததும் தாயினுடைய தவிப்போடு அவளும் சொன்னாள்.

"எல்லாருக்கும் அங்க ஒரு மாதிரித்தானாம் சீவியம், இயந்திரம் போலத்தானாம் வாழ்க்கை. எங்கள் மகன் நோர்வேக்குப் போய் கொஞ்சக்காலம்தான் என்றபடியால் சீசன் மாறேக்க உடம்புக்குத் தாக்குப்பிடிக்க ஏலாம வருத்தம் வந்து கஷ்டப்பட்டவனாம் இப்ப சுகமாய் இருக்கிறானாம்"

இதைச் சொல்லும் போது நன்றாக கண்கலங்கி விட்டது தங்கத்துக்கு. குரல் தழுதழுக்க மேலும் அவள் சொன்னாள்.

"என்னுடைய செல்வத்துக்கு சுகமில்லாம வந்திட்டுதாம் இங்க எங்களோட பிள்ளை இருந்திருந்தா இப்படியெல்லாம் வந்திருக்குமே நான் பெத்த ஒரே பிள்ளை கூட என்ரை பக்கத்தில் இல்லையே சன்னதி முருகா என்ரை பிள்ளை சுகமாயிருக்க வேணும்.

எனக்கும் கண்களில் கண்ணீர் முட்டிவிட்டது. எங்களுக்கு ஒரே ஒரு பிள்ளை ஜெகன் வருத்தம் என்று கடிதம் போட்டால் நாங்கள் இருவரும் பதறித்துடித்துப் போய் விடுவோமென்றுதான் அது பற்றி அவன் எங்களுக்கு அறிவிக்கவில்லை. இப்படித்தான் எனக்கு விளங்கியது.

அவனைப் பிடித்து ஆளாக்கி நல்லதொரு உத்தியோகத்தில் இருத்திவிட வேண்டும் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் நடந்தது வேறொன்றாகி விட்டது. குடும்பமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து கொழும்புக்கு வந்த பிறகு எல்லாக் குடும்பங்களிலும் அனேகமாக நடப்பது போல் பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பி விடவே நானும் முயன்றேன்.


யாழ்ப்பாணத்தில் நான் செய்த தொழில் பலசரக்கு கடை வியாபாரம். ஏதோ சூழ்நிலைக்கேற்ப வியாபாரம் பண்ணிக் கொண்டு பணம் முழுவதையும் வியாபாரத்தில் முடக்கிவிடாது கைகளிலும் கவனமாக கொஞ்சம் வைத்திருந்ததால் கொழும்புக்கு வந்ததும் மனைவியின் நகைகளையும் விற்று ஜெகனையும் வெளிநாட்டுக்கு அனுப்பினேன். என்றாலும் எங்களுக்கு சொந்த இடத்தில் இருந்தது போல் வாழ்க்கை இப்போ சீராக இல்லை. பிள்ளை எங்களோடு இல்லாத ஏக்கத்தோடு வருமானமும் இல்லாததால் சீவியம் கஷ்டமாகவே இருக்கிறது.

சிந்தனை இப்படி எங்கெல்லாமோ அலைந்துபோய் திரும்பவும் உணர்வு வந்ததுமே மேலும் மனைவியிடம் தொடர்ந்து விளக்கம் கேட்டேன்.

"இப்போது மகனுடைய நிலைவரம் எப்படியாம்? எங்காவது நல்ல வேலையில் சேர்ந்திட்டானா?.

எல்லாத் தகப்பன்மாரும் கேட்கின்ற கேள்வியை ஆர்வத்தோடு நானும் கேட்டேன்.

– நீ.பி. அருளானந்தம்



"இப்போதைக்கு அவ்வளவு பெரிய வேலையாக ஜெகனுக்குக் கிடைக்கவில்லையாம். நோர்வே பாஷையை ஒரு வருஷம் மட்டும்தானாம் படிச்சவன். அதனாலை சரளமாகக் கதைக்கிறதுக்கு இன்னமும் இரண்டு வருடங்களாவது போகுமாம் தாங்களும் போன புதிதில் கண்ட வேலையும் செய்துதான் கஷ்டப்பட்டனாங்கள் " என்று அந்தத்தம்பியும் சொன்னான்". இவ்வாறு வாடிய முகத்துடன் தங்கம் சொன்னாள். எனக்கு மனதுக்குள் வலித்தது. தாயினுடைய காலைச் சுற்றியபடி திரிந்த பிள்ளை துன்பங்களை அனுபவிக்கிறான் என்று கேள்விப்பட உள்ளமும் உடலும் எனக்கு சோர்ந்து விட்டது. தளர்ந்து போய் அப்படியே காலை நீட்டி சாய்ந்த என்னை மனைவி மேற்கொண்டு சொன்ன சொற்கள் மீண்டும் நிமிர்ந்து இருக்குமாறு செய்தது.

" அம்மாவை வெறுங்கழுத்தோடு திரிய வேண்டாம் நாலு இடம் போய் வரேக்க இதையும் மறக்காம போட்டுக் கொண்டு போகச் சொல்லு என்று வந்த தம்பியிட்ட தாலிக்கொடியையும் கொடுத்துச் சொல்லி அனுப்பியிருக்கிறான் மகன்" என்று உற்சாகமாகக் கூறினாள் தங்கம்.

எனக்கும் அது மகிழ்ச்சிதான், சபை சந்திக்குப் போய் வருகிறபோது கல்யாணமான பெண்கள் தாலிக்கொடி போட்டிருக்க வேண்டும் என்ற சாஸ்திரத்தைக் கடைப்பிடித்து நடப்பவர்கள் நாங்கள். அந்த இடங்களில் இருக்கும் போது தாலிக்கொடி கழுத்தில் இல்லையானால் அது பெண்களுக்கு பெரிய குறை மாதிரித்தான்.

என்ன செய்யிறது கொஞ்சக்காலம் அது எனக்கும் பெரிய குறை போலத்தான் இருந்தது . ஆனால் இனிநான் நாலுபேருக்கு முன் தலை நிமிர்ந்து இருக்கலாம். அந்த நிம்மதியும் ஏற்பட்டது. இவை எல்லாவற்றையும் விட மகனுக்கு பொறுப்பு வந்து விட்டது அவன் இனி சிறு பிள்ளையல்ல என்ற எண்ணமும் மனதுக்கு சுகம் கொடுத்தது. ஆனால் இப்போதைக்கு மனைவி தாலிக்கொடியோடு எங்காவது போய் வருவது நடக்காது என்று என் மனதுக்குப் பட்டது.

ஜெகனை வெளியில் அனுப்புவதற்கு கொழும்பில் என்னுடைய நெருங்கிய உறவினர்களிடம் இரண்டு இலட்சம் ரூபா பணம் வட்டிக்கு வாங்கியிருந்தேன். மாதாமாதம் வட்டிப் பணத்தைக் கூட காலம் தாழ்த்திக் கொடுத்துவரும் நிலை.

வெறும் கழுத்துடன் திரிந்த மனைவி தங்கப்பவுண் தாலிக்கொடியுடன் திடீரெனத் தோன்றினால் கடன் தந்தவரெல்லாம் அதையிட்டு முணு முணுக்கவே செய்வார்கள்.

"தங்கம் ஒன்று சொல்ல வேண்டும் உமக்கு மகன் கொடி வாங்கித்தந்து எனக்கும் பெரிய குறை தீர்த்தது போலத்தான் இருக்கு. ஆனால் இப்போதைக்கு நீர் அந்தத் தாலிக்கொடியை கழுத்தில் போட வேண்டாம்" என்றேன்.

முதன் முதல் உழைச்சுப் பிள்ளை வாங்கி அனுப்பியதை ஏன் போட வேண்டாம் என்னுறியள். கட்டின தாலியைக் கொடியோடு சேர்த்து வித்தியள். வெறும் கழுத்தோட இருக்கிறன் என்று பிள்ளை கஷ்டப்பட்டு செய்து அனுப்பிய தாலியைப் போட வேண்டாமென்று தடுக்கிறியளே என்று இரைந்து கத்தினாள் தங்கம்.

"கொஞ்சம் ஆறும் தங்கம், நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளும். இங்க எனக்கிருக்கிற பிரச்சினை உமக்குத் தெரியேல்ல. அதை உமக்கு நான் ஒன்றும் இத்தனை காலமும் சொல்லேல்ல ஜெகனை அனுப்பியதில எனக்கு கொஞ்சம் கடன் இருக்குதப்பா...!" என்றேன்.

நான் சொன்னது தங்கத்துக்கு இப்போது கலக்க மூட்டியது. இத்தனை காலமும் இதை அவளிடம் கூறவில்லை.

என்ன கடன் இருக்கோ? எவ்வளவப்பா கடன் பட்டனீங்கள்?

மூன்று இலட்சம் ரூபா கடன் பட்டிருக்கும் விடயத்தைக் கூறினேன்.

செலவுக்கு அனுப்பிற காசில கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடிச்சு வட்டிப்பணம் ஓரளவு கொடுத்திருக்கிறன். ஆனால், முதலோடு மொத்தமாக வட்டியையும் சேர்த்து தாறதாகத்தான் பணத்தை வாங்கேக்க சொல்லியிருக்கிறேன். ஜெகனுக்கு இப்ப இருக்கிற சூழ்நிலையில் இதைச் சொல்ல விருப்பமில்லை. சொன்னாலும் மனவருத்தப்படுவான்.

என்றதால் தான் நல்ல வேலை கிடைச்ச பிறகு சொல்லலாமென்று இருக்கிறேன் என்றேன்.

தங்கத்துக்கு இதைக் கேட்க தலை சுற்றியது. மூன்று இலட்சம் கடன் இருப்பதை கேள்விப்பட்டதுமே அவளுக்கு மூச்சு முட்டியது.

"இதை ஏன் நீங்கள் இவ்வளவு காலமும் எனக்குச் சொல்லேல்ல ?கடன்வட்டியோட கூடிப் போனா குடி முழுகிப் போகுமே, தாலிக்கொடி இப்ப எனக்கு வேண்டாம் அதைவிற்று வட்டியையாவது கட்டி விடுங்கள்.

முகமெல்லாம் வியர்த்துப் போக பயத்தோடு சொன்னாள் தங்கம்.

"வேண்டாமப்பா தாலிக் கொடியை விற்க வேண்டாம். அது பிள்ளை உனக்கு செய்து தந்தது. மகனின் முதல் உழைப்பு அதை வைத்துக்கொள். நாங்கள் இப்போ எங்களுடைய யாழ்ப்பாணத்துக் காணியை விற்று கடன் முழுவதையும் அடைப்போம். ஆனால், ஒன்று கடனைக் கொடுக்குமட்டும் நீர் அந்த தாலிக்கொடியை கழுத்தில் போட வேண்டாம். கடனைக் கொடுத்ததும் பிறகு போட்டுக்கொள்ளும்.

இதைச் சொல்ல எனக்கும் வேதனையாக இருந்தது. கேட்க அவளுக்கும் துன்பமாக இருந்திருக்கும்.

நான் கட்டின தாலியை அன்றைக்கு வாங்கி விற்று விட்டேன். அந்த உரிமை எனக்கு இருந்தபடியால். ஆனால் வெறுங் கழுத்துடன் தாய் இருக்கக்கூடாது என்று மகன் வாங்கி அனுப்பியிருக்கிறான் ஒரு புதுத் தாலியை. அதை விற்கிற உரிமை எனக்கு இல்லை.

# ரொமாரியோவின் பதிலடி

1994 உலகக் கிண்ணக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியனாகிய பிரேஸில் அணிக்குத் தலைமை தாங்கியவர் ரொமாரியோ.

1998இல் பிரான்ஸில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து இறுதி நேரத்தில் அவர்காயம் காரணமாக வெளியேற நேர்ந்ததால் கண்ணீர் விட்டு அழுதனர் பிரேஸில் ரசிகர்கள்.


ரொமாரியோ

தற்போது 35 வயதாகும் ரொமாரியோ தனது திறமை மங்கிவிடவில்லை என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

கொபாமேர்ஸர் கிண்ணத்திற்காக நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஹெட்ரிக் அடித்தார் ரொமாரியோ.

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் இவ்வருடத்தின் சிறந்த வீரர்கள் மூவரின் விபரங்களை அண்மையில் அறிவித்திருந்தது.

இதில் தனது பெயர் சேர்க்கப்படாததற்கு ரொமாரியோ கொடுத்த பதிலடி இது வென விமர்சிக்கப்படுகிறது.

ரொமாரியோவின் ஹெட்ரிக் மூலம் அவரது தலைமையிலான வாஸ்கொடகாமா கழகம் பல்மைரா கழகத்தை 4-3 கோல்களால் வென்று சாம்பியனானது.

இவ்வருடத்தில் ரொமாரியோ அடித்த 71வது கோல் இதுவாகும். இதில் 64 கோல்கள் வாஸ்கொடகாமா கழகத்திற்காக அடித்தவை. ஏனைய 7 கோல்களையும் பிரேஸில் அணி சார்பாக இரு போட்டிகளில் மட்டுமே பங்குபற்றி அடித்தார்.

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தென் அமெரிக்க நாடுகளின் தகுதிகாண் சுற்றில் வெனிசுலா அணிக்கெதிராக 4 கோல்களை அடித்ததோடு பொலிவியா அணிக்கெதிராக ஹெட்ரிக் அடித்தார்.

இந்த ஏழு கோல்களால் இம்முறை தகுதிகாண் சுற்றில் அதிக கோல்களை அடித்த தென்னமெரிக்க வீரராகவும் விளங்குகிறார் ரொமாரியோ.

இதனையடுத்து 2002ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான பிரேஸில் அணியில் ரொமாரியோ சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

# டென்னிஸ் வீரரின் மணவாழ்வில் முறிவு

டென்னிஸ் உலகில் மிகவும் புகழ்பெற்ற வீரர்களில் ஒருவரான பொரிஸ் பெக்கரின் திருமண வாழ்வு முறிவடைந்துள்ளது.

விளையாட்டு நட்சத்திரங்களின் திருமணம் விவாகரத்தில் முடிவடைவது சாதாரணமானதே. ஆனாலும் பொரிஸ் பெக்கரின் திருமணமும் விவாகரத்தும் சற்றே நெகிழ்ச்சியானது.

காரணம் பெக்கர் ஜேர்மன் இனத்தவர். அவரது மனைவி பார்பரா பெல்டஸ் கறுப்பினத்தவர். 1993இல் இவர்களது திருமணம் நடைபெற்றபோது அது விளையாட்டுலகில் பிரசித்தி பெற்ற கலப்புநிறத் திருமணமாக விளங்கியது.


பொரிஸ் பெக்கர், பார்பரா

மிகச் சிறந்த டென்னிஸ் வீரரான பெக்கர் நிறவெறிக்கு எதிரான வீரராகவும் போற்றப்பட்டார்.

பொரி பெக்கர் தனது 17 ஆவது வயதிலேயே விம்பிள்டன் சாம்பியனாகி உலகை வியப்பிலாழ்த்தினார். அதன் பின்னரும் இருதடவைகள் விம்பிள்டன்பட்டத்தை வென்றவர்.

தற்போது விளையாட்டுத் துறையுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகங்களை மேற்கொண்டு வரும் பெக்கர் சுமார் 400 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துடையவர். தற்போது இவருக்கு 33 வயதாகிறது.

அவரது மனைவி பார்பரா பாடகியாகவும் 'மொடலாக'வும் தொழில் புரிந்தவர்.

இவர்களுக்கு 6 வயதிலும் 1 வயதிலும் இரு மகன்கள் உள்ளனர். இவ்விருவரும் கறுப்பர்கள்.

கறுப்பின மங்கையைத் திருமணம் செய்து கறுப்புக் குழந்தைகளையுடைய பெக்கர் ஜேர்மனின் நவ நாஸிகளின் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தார். இதனால் எந்நேரமும் 10க்கு மேற்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் இவர்களைச் சுற்றி இருக்க வேண்டியிருந்தது.

முதன்முதல் இவர்களது காதல் விவகாரம் வெளிவந்தபோது "ஏன் பொரிஸ்? எம்மில் ஒருவர் கிடைக்கவில்லையா?" என்ற பாணியில் தலைப்பிட்டு கட்டுரைகள் எழுதின சில ஜேர்மன் பத்திரிகைகள்.

"டென்னிஸ் என்பது ஆடுகளத்தில் பந்தைத் துரத்தும் ஒரு விளையாட்டு மட்டுமே. எனது குடும்பம் தான் எனது வாழ்க்கை. எனது மனைவி ஒரு தேவதை போன்றவள்" என்றெல்லாம் முன்பு கூறியவர் பெக்கர்.

ஆனால் தமக்கிடையிலான அபிப்பிராய பேதங்கள் காரணமாகத் தாம் பிரிய வேண்டியிருக்கிறது" என்று இப் போது கூறுகிறார்.

இனிமேல் பார்பராவினாலேயே பிள்ளைகள் இருவரும் பராமரிக்கப்படவுள்ளனர்.


இதற்காக பெக்கரிடம் பணம் கோரி அமெரிக்க நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார் பார்பரா. திருமணத்தின் பின் தனது தொழிலைக் கைவிட்ட அவர் மீண்டும் அதைத் தொடரப் போகிறாராம்.

சட்டரீதியான விவாகரத்துக் கோரி பொரிஸ் பெக்கரும் இன்னொரு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இதேவேளை, ஷப்ரினா ஷெல்டர் எனும் மற்றொரு பொப் பாடகியைத் திருமணம் செய்யும் நோக்குடனேயே பெக்கர் பார்பராவை விவாகரத்துச் செய்கிறார் என்றும் கூறப்படுகிறது. 26 வயதான இப்பாடகி இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

அண்மையில் ஜேர்மனிலுள்ள பிளக் ஃபொரஸ்ட் எனும் ஹோட்டலில் - 1993இல் பொரிஸ் பார்பரா திருமணம் நடைபெற்ற ஹோட்டல்- பெக்கரும்ஷப்ரினாவும் ஒன்றாகத் தங்கியிருந்ததாகச் செய்தி வெளியானது.

ஆனால் தனக்கு ஷப்ரினாவைத் திருமணம் செய்யும் எண்ணமெதுவுமில்லை என்று கூறியுள்ளார் பெக்கர். உண்மை என்னவோ?


ஷேன் பொல்லொக்

கடந்த வாரம் "சவால் மிக்க தொடரில் இலங்கை" எனும் கட்டுரையில் ஷேன் பொல்லொக்கின் படத்துக்குப் பதிலாக இன்னொருவரின் படம் பிரசுரமாகி விட்டது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நடந்த இத் தவறுக்கு வருந்துகிறோம்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ஆண்கள் மினி சாம்பியன் பெண்கள் மகா சாம்பியன்

நியூஸிலாந்தில் நடைபெற்ற ஏழாவது உலகக்கிண்ண மகளிர் கிரிக்கட் சுற்றுப்போட்டியில் நியூஸிலாந்து அணி சாம்பியனாகியுள்ளது.

கிறிக்இன்ஃபோ கிண்ணத்திற்கான இத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 23ஆம் திகதி கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்றது.

1993,1997 இல் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடர்களிலும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தது நியூஸிலாந்து அணி. ஆனால் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளிடம் தோல்வியுற்றது.

இம்முறையும் அவுஸ்திரேலிய அணியே சாம்பியனாகும் எனக் கருதப்பட்டது. ஆரம்பச் சுற்றில் ஒருபோட்டியில் தானும் தோல்வியடையாமல் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது அவுஸ்திரேலியா.


வெற்றிக் கிண்ணத்துடன் நியூஸிலாந்து வீராங்கனைகள்

நியூஸிலாந்து அணி முதல் சுற்றில் ஆஸி அணியிடம் 6 விக்கட்டுக்களால் தோல்வியடைந்தது.

ஏற்கனவே 3 தடவை சாம்பியனான அணி அவுஸ்திரேலியா. எனினும் முதன் முறையாகத் தனது தாயக மண்ணில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் தம் கனவை நனவாக்கக் காத்திருந்தனர் நியூஸிலாந்து மகளிர் அணியினர்.

ஆனாலும் அவ்வணி முதலில் துடுப்பெடுத்தாடி முடிந்த போது ஏமாற்றமே. 48.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்கள் மட்டுமே அவர்களால் பெறமுடிந்தது.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரை இது சாதாரண ஒரு இலக்கு. அவ்வணியின் தலைவி பிலிண்டா கிளார்க் ஒருநாள் போட்டியொன்றில் ஆட்டமிழக்காமல் 229 ஓட்டங்களைக் குவித்த சாதனையாளர்.

ஆனால் எதிர்பாராதவிதமாக ஆஸி அணியின் முதலிரு விக்கட்டுகள் இரண்டு ஓட்டங்களுக்குள் வீழ்ந்தன. இத் தொடரில் 375 ஓட்டங்களைப் பெற்ற லிசா கீக்டலி இறுதிப் போட்டியில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்ட மிழந்தார்.

இத்தொடரில் 190.00 ஓட்ட சராசரியைக் கொண்டிருந்த கெரன் ரோல்ட்ன் அடுத்ததாக 1 ஓட்டத்துடன் ரன் அவுட்டானார்.

இதன்பின்னர் நியூஸிலாந்து அணியினர் உற்சாகமானார்கள். ஆஸி விக்கட்டுக்கள் படிப்படியாகச் சரியத் தொடங்கின.

ஆஸி. அணித் தலைவியும் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையுமான பிலிண்டா கிளார்க் மாத்திரம் உறுதியாக நின்று 102 பந்து வீச்சுக்களில் 91 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீராங்கனைகள் சோபிக்க வில்லை.

இறுதியில் 49.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை மட்டுமே அவுஸ்திரேலியா பெற்றது. நியூஸிலாந்து அணிக்கு 4 ஓட்டங்களால் வெற்றி கிடைத்தது.

நியூஸிலாந்து அணி வீராங்கனைகளில் நால்வர் இத்தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தனர். ஓய்வுக்கு முன் அவர்களது கனவு நனவாகியுள்ளது.

கடந்த ஒக்டோபரில் கென்யாவில் நடந்த மினி உலகக் கிண்ணத் தொடரில் நியூஸிலாந்து ஆண்கள் அணியினர் சாம்பியனாகினர். பல்கோணச் சுற்றுப்போட்டியொன்றில் நியூஸிலாந்து வென்ற முதலாவது கிண்ணம் அதுவே.

ஆனால் நியூஸிலாந்துப் பெண்கள் தமது நாட்டுக்கு உலகக் கிண்ணத்தையே வென்று கொடுத்துள்ளனர்.

# 'ஆனந்த்தை எவராலும் வெல்ல முடியாது'

தமிழகத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் செஸ் போட்டியில் உலகச் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஃபிடே (FIDE) எனும் உலக செஸ் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிச் சுற்றில் ஆனந்துடன் லத்வியாவைப்பிறப்பிடமாகக் கொண்ட ஸ்பெயின் வீரர் அலக்ஸ் ஷிரோவ் மோதினார்.

கடந்த ஞாயிறன்று ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இவ்விறுதிப் போட்டி நடந்தது.

ஆறு சுற்றுகள் கொண்ட இப்போட்டியின் நான்காவது சுற்றில் ஆனந்திற்கு வெற்றி கிடைத்தது. ஆனந்துக்கு 3.5 புள்ளிகளும் ஷிரோவ்வுக்கு 0.5 புள்ளிகளும் கிடைத்தன.

உலகின் உயர் செஸ் விருதுக்காக இறுதிப் போட்டியில் ஆனந்த் போட்டியிட்டது இது மூன்றாவது தடவையாகும்.

1985 முதல் 1990 வரை சோவியத் யூனியனைச் சேர்ந்த கெரி கஸ்பரோவ் இப்பட்டத்தைத் தொடர்ந்து வென்றார். அதன் பின் பி.ஸி.ஏ. எனும் போட்டி அமைப்பொன்றை உருவாக்கினார் கஸ்பரோவ். பி.ஸி.ஏ சாம்பியன் பட்டத்திற்காக 1995 இல் கஸ்பரோவுடனும் 1997இல் அனடோலி கார்போவுடனும் ஆனந்த் இறுதிச் சுற்றில் மோதியபோதிலும் வெற்றிபெற முடியாமல் போனது.

கடந்த 18 ஆண்டுகளில் சோவியத் யூனியனைச் சேராத ஒரு வீரர் இப்பட்டத்தை வெல்வது இதுவே முதல்தடவை.


ஆனந்த்

"ஆனந்த் செஸ் ஆட்டநுணுக்கத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளார். உலகின் எந்தவொரு வீரரையும் தோற்கடிக்கத் தயாராகவிருக்கிறார் என்று கூறியுள்ளார் ஆனந்தின் தாயார் சுசீலா விஸ்வநாதன். ஆனந்திற்கு ஆறு வயதான போது முதன்முதலில் செஸ் ஆட்டத்தைக் கற்பித்தவர் அவரது தாயாரே.

1987இல் உலக கனிஷ்ட நிலை சாம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் இப்பட்டத்தை வென்ற முதலாவது ஆசிய வீரராகப் புகழ் பெற்றவர் ஆனந்த்.

புதிய உலக சாம்பியனான ஆனந்திற்கு இந்தியாவின் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல பிரமுகர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் குவிந்தவண்ணமுள்ளன.

# குடாநாட்டில் இப்படியும் 'கருணை' உள்ள ஒரு தமிழன்!

தேரடியில் முதல் ஆளாக வந்து அமரும் பழக்கம் உள்ள விநாசியர் அன்று, மற்றவர்கள் வந்த பின்னரே விறு விறு என்று வேகமாக வந்து மணலில் குந்தினார். உடனேயே பேசவும் ஆரம்பித்தார்.

"நாட்டுப் பிரச்சினை ஒருபக்கம். மகளின் காதல் பிரச்சினை மற்றப் பக்கம். இரண்டையும் சமாளிக்கிறது கஷ்டம் தான்" என்றார்.

"என்ன விநாசியர், கலியாண வயதிலை உமக்கு மகள் இருக்கிறாளோ?" விநாசியரின் குடும்பத்தை நன்கு அறிந்த மாஸ்டர் கேட்டார்.

"அந்தக் கஷ்டம் எனக்கில்லை. அதி உத்தம குடும்பத்திலை தான் சிக்கல் இருக்குதாம். இப்ப அதைப்பற்றித் தான் லண்டனிலை கதையாம். பெண்வாரிசு லண்டனிலை மருத்துவம் படிக்கிறாவாம். அவ அங்கை பெரிய இடத்து தமிழ்ப் பெடியனை விரும்புறாவாம்.

இந்த நேரம், அந்தக் கலியாணம் நடந்தால் இங்கே உறுமுறலைக்கு வாய்ப்பாகி விடும் என்று, அந்தக் காதல் விஷயத்தைத் தடுக்கத்தான், லண்டனிலை அதி உத்தமமானவை கனநாள் நிற்கவேண்டி வந்திட்டுதாம்" விநாசியர் அடுக்கிக் கொண்டே போனார்.

"போனகாரியம் முடிஞ்சுதாமோ?" டானியல் கேட்டான்.

"இவ்வளவு தான் அங்கே வெளிவாற பேப்பரிலை போட்டிருக்கு. இது உண்மையோ இல்லை வெறும் வதந்தியோ தெரியாது" —சொல்லி முடித்தார் விநாசியர்.

"அப்ப நான் கண்ணாலை பார்த்ததைச் சொல்கிறேன்" என்று ஆரம்பித்த லோகன் "யாழ்ப்பாணத்திலை பல இடங்களிலையும் விடுதலைப் புலிகள் இயக்கச் சின்னத்துடன் சுவரொட்டி ஒட்டியிருக்கு.

அதில் சரணடைவதற்கு விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா கூலிப் படைகள் அல்ல என்று போட்டு கீழே தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டம் என்றும் எழுதியிருக்கு" என்று முடித்தான்.

"யாழ்ப்பாணத்திலை மீனவர்கள் படும் கஷ்டம் அளவில்லையாம்" என்ற மாஸ்டர் தொடர்ந்தார்.

"யாழ். கடல் நீர் ஏரியில் உள்ளாடை மட்டும் அணிந்தே மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்களாம். அதோடை அவர்கள் அரை இறாத்தல் பாண் கூடக் கொண்டு போக முடியாதாம்.

எவ்வளவு சாப்பிட்டுவிட்டுக் கடலுக்குப் போனாலும் கடல் காத்துக்கு பசியெடுக்குமாம். அப்படியிருக்க சாப்பாடு கொண்டுபோக விடாததால் மீனவர்கள் பெரும் கஷ்டப்படுகினமாம். இப்ப கடைசியா ஒரு இடத்திலை முறையிட்டிருக்கினம். இனியாவது மீனவர்களுக்கு புனர்வாழ்வு கிடைக்குதா பார்ப்பம்".

"இந்தத் துக்கத்தையாவது தீர்க்கலாம். மிருசுவிலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதை எங்கே சொல்லி என்ன பிரயோசனம், போன உயிர்கள் திரும்பப்போகுதோ?" கேட்டாள் சின்னாச்சி.

"திரும்பி வராதுதான். ஆனாலும் இந்த விஷயம் வெளியிலை பகிரங்கமானதுக்கு ஈ.பி.டி.பியின் குலேந்திரன் எம்.பி. முழுவேகத்திலை எடுத்த நடவடிக்கை முக்கியகாரணம். அதை மறுக்கேலாது" மாஸ்டர் கூறினார்.

"பார்ப்பம், தப்புச் செய்தவை தண்டனை பெறுகினமோ? அல்லது செம்மணி மாதிரி இந்தப் புதைகுழியையும் வெளிவரச் செய்தது நாங்கள் தான் என்று கூறமட்டும் பிரயோசனப் படுகுதோ?" என்று சலித்துக் கொண்டாள் சின்னாச்சி.

"மிருசுவிலில் இருந்து சடலங்களை எடுத்து வந்து மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்து விட்டு அதிகாரிகள் வெளியிலை நின்று கதைத்துக் கொண்டு நின்றவையாம்."

"அப்ப அங்கே வந்த ஒருவர், ஒரு அதிகாரியிடம் போய் கொல்லப்பட்டவர்களில் ஒருவர், தன்னிடம் தேங்காய் வாங்கினதுக்காகத் தனக்கு 500 ரூபா தரவேணும். அதை அவரின் குடும்பத்தினரிடம் இருந்து வாங்கித்தர முடியுமா? என்று கேட்டாராம்.

அங்கு நின்றவர்களுக்கு இதைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லையாம்" கூறி முடித்தான் லோகன்.

"காவியிலை இருக்கிறவன் கண்ணைக் குத்த கரவெட்டியிலே இருந்து கையை நீட்டிக் கொண்டு போனானாம். இந்த மாதிரி இரக்கமில்லாததுகள் இருக்கேக்கை எங்களுக்கு எப்படி விடிவு வரும்?" சீறினாள் சின்னாச்சி.

"இதுக்கே கோபப்பட்டால் எப்படி சின்னாச்சி?" என்று கேட்ட விநாசியர், "நயினாதீவிலை ஏராளமாக கடலட்டை கிடைக்குதாம். அதைப் பிடிக்கிறவையிட்டை கொஞ்சக் காசுக்கு வாங்கிற 4 பேர், லாபம் வைச்சு கடலட்டைகளை நீலச்சட்டைக்காரரிட்டை விக்கினமாம். அதை அவை கொழும்புக்கு அனுப்பி நல்ல காசு சம்பாதிக்கினமாம்" என்றார்.

"நண்டைச் சுட்டு நரியைக் காவலுக்கு வைத்தமாதிரி, காவல் காக்கிற வேலையை நல்லாத்தான் பார்க்கினம்" இப்படிக் கூறினாள் சின்னாச்சி.

"மட்டக்களப்பு எல்லையிலை வாழுற தமிழர்களின் நன்மைக்காகபுது முறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்கினமாம் தெரியுமோ?" கேட்ட டானியலை எல்லோரும் கேள்விக்குறியுடன் பார்த்தனர். "அங்கே உள்ள தமிழர்களில் ஆண்கள் எல்லோரும் ஞாயிற்றுக் கிழமைகளில், அரசடிச் சந்திக்கு வந்து அங்குள்ள இடாப்பில் கையெழுத்துப் போடவேண்டுமாம்.



## தேரடி அரட்டை

கொக்குவில், பிள்ளையாரடி, பனிச்சையடி ஆகிய பகுதிகளில் வாழும் ஆண்கள் ஒரு அப்பியாசக்கொப்பி கொண்டு போய், இடாப்பிலை கையெழுத்துபோட்டு விட்டு, கொப்பியிலை வரவை பதிந்து கொள்ள வேண்டுமாம். வழிதெருவிலே மறிச்சு சோதிக்கும் போது கொப்பியைக்காட்ட வேண்டுமாம்".

"புலிகளிடம் இவர்கள் அகப்படாமல் காப்பாற்றவே" என்று இதற்குக் காரணம் சொல்லப்படுகுதாம்.

கேள்விக்குறிகளை ஆச்சரியக் குறிகளாக்கினான் டானியல்.

"பாயுற மாட்டுக்கு முன்னாலை நின்டு சாத்திரம் சொன்னா விளங்கப்போகுதே?" கேட்டாள் சின்னாச்சி.

இலங்கைக்கு உதவி வழங்குகிற நாடுகள் முன்னைவிட அதிக நிதி உதவி இப்போது வழங்கியதாக அமைச்சர் ஒருவர் சொல்லுறார். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மை என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகினம்.

ஏனென்றால் நிதிதரும் நாடுகளின் கூட்டம் முடிந்து சில நாள் கழித்து, அதுவும் உத்தியோகபூர்வ அறிவிப்பாக இல்லாமல், அமைச்சர் ஒருவர் தனது சொந்தக் கருத்தாக இதைச் சொன்னது ஏனென்று கேட்கப்படுகுதாம்.

இலங்கைக்கு எவ்வளவு நிதி உதவி கிடைத்திருக்கிறதென்று இப்போது கேள்வி எழுப்புவார்கள். அபிவிருத்தித்திட்டங்களை அமுல் செய்யும்போது அதனை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று ஒரு அமைச்சரும்—

எவ்வளவு நிதி பெறுகிறோம் என்பதைவிட, எமது நிலையை அங்கு தெளிவுபடுத்துவதே முக்கியமென்று பாரிஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சரும் கூறியுள்ளார்.

"தாராளமாக நிதியுதவி கிடைத்திருந்தால், அதனைக் கூறுவதை விட்டு இப்படிச் சமாளிப்பார்களா? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கினமாம்" நீண்ட உரைக்குப் பிறகு மூச்சு வாங்கினார் பரமலிங்கம் மாஸ்டர்.

"அதானே பார்த்தனான். கலியாண வீட்டிலேயே கப்பைக் கட்டிப்பிடிச்சு அழுறவை, செத்த வீடுகிடைச்சா சும்மாயிருப்பினமே. நிதி கிடைச்சிருந்தா பெரிய விளம்பரம் பண்ணியிருப்பினம். ஒண்டுமில்லாம அமுசடக்கமா இருக்கினம் எண்டு யோசிச்சனான்" —மாஸ்டரின் தகவல் தந்த பூரிப்பில் கூறினாள் சின்னாச்சி.

போன முறை சின்னாச்சி சீறிவிழுந்த அனுபவத்தால், அவள் மகிழ்ச்சியுடன் இருந்த போது, யாழ். பல்கலைக்கழகக் கதையை மெல்ல அவிழ்த்தான் லோகன்.

"ராக்கிங்கில் ஈடுபட்டதற்காக சிலதுகளை யாழ். பல்கலைக்கழகத்திலை இருந்து இடை நிறுத்தினது தெரியும்தானே.

இதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து (அ)ஞ்ஞான மரங்கள் வகுப்புக்களை பகிஷ்கரிச்சதுகளாம். அப்ப ராக்கிங்கை எதிர்க்கும் மாணவர் ஒருவர், "நான் படிக்க வந்தனான். எனக்கு படிப்பு முக்கியம்" என்று கூறி வகுப்பறையில் போய் அமர்ந்தாராம்.

ஆனால் வகுப்பெடுக்க சுதுமலையிலை இருந்து காலுக்கு குழாயை மாட்டிக் கொண்டு மினைக்கெட்டு வந்தவர், தன்னாலை படிப்பிக்க ஏலாது என்று சொல்லிப்போட்டு, ஜொன்னுவிடப் போட்டாராம்.

பல்கலைக்கழக உயர்தலைமை ராக்கிங்கில் ஈடுபட்டதுகளுக்கு எதிராக ஒருமாதிரி நடவடிக்கை எடுத்துப் போட்டுது" ஆறுதல் பட்டார் விநாசியர்.

"அட, நீங்கள் வேறை, அப்பிடிப் புத்தி ஒழுங்கா இருந்தால் எவ்வளவு நல்லது. உயர் தலைமை நடவடிக்கை எடுத்ததுக்கு, யாழ்ப்பாணத்தில் கடைசி மன்னர் பெயரிலை கடிதம் போனதாம்.

உயர்தலைமைக்கு மட்டுமல்லாமல் மாணவர்களைத் தூண்டிவிடுறவை, மாணவர்கள் என்பதற்கே அர்த்தமில்லாமல் நடக்கிறவையென்று வேற சிலருக்கும் மன்னர் பெயரிலை கடிதம் போனதாலை தான் அடிச்சுப்பிடிச்சு இடைநிறுத்தம் அது இது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்" விஷயத்தைப் போட்டுடைத்தான் லோகன்.

ஆனாலும் இதுவும் வெறும் கண்துடைப்பு நாடகம் போலத்தான் இருக்கு என்ற செக்கியூரிட்டி டானியல் காரணத்தை விளக்கினான்.

பல்கலைக்கழகத்திலை இருந்து மாணவர்களை இடைநிறுத்தினால், அவர்களது புகைப் படங்கள், பெயர்கள் ஆகியவற்றை காவல் பணியில் ஈடுபட்டிருப்பவர்களிடம் கொடுத்து, அந்த மாணவர்களை வளாகத்துக்குள் அனுமதிக்க வேண்டாம் என்று உத்தரவிடுவது, இலங்கையில் உள்ள மற்ற எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் வழக்கமான நடைமுறையாம்.

ஆனால், கடந்த 20ஆம் திகதி மாணவர்கள் சிலர் இடைநிறுத்தப்பட்டிருப்பதை யாழ். பல்கலைக்கழகக் காவல் ஊழியர்கள் பத்திரிகை மூலம் தான் தெரிந்து கொண்டார்களாம்.

இதுவரை இடைநிறுத்தப்பட்டவர்களின் பெயர்கள் கூட காவல் ஊழியர்களுக்கு உயர் தலைமையால் தரப்படவில்லையாம். இதனால் இடைநிறுத்தப்பட்டவர்கள் மற்ற மாணவர்களைத் தூண்டிவிட்டுப் போராட்டம் நடத்துவதைத் தடுக்க முடியவில்லையாம்.

"வித்தையடி மாமி, விக்குதடி பலகாரம்" என்டு ஏதோ கெட்டித்தனமா காலத்தை ஓட்டுகினம் போலை என்றாள் சின்னாச்சி.

"கவலைப்படாதை சின்னாச்சி, அறைக்குக் கூட்டிச் சென்று தாக்கப்பட்ட மாணவன் உடல் ரீதியாக பாதிப்பை அடைந்துள்ளாராம். இதனால் நீதி தேவதையின் பார்வை தாக்கிய மாணவன் மீது பலமாக விழுந்துள்ளதாம்" என்று கூறியபடி எழுந்தார் மாஸ்டர்.

அவரைப் பின்பற்றினார்கள் மற்றவர்கள்.

—கண்ணன்

# அரசியல்வாதிகளின் சவாரிச் சாகசங்கள்!

நாடாளு மன்றத்திற்குச் சில எதிர்க்கட்சி எம்.பிக்கள் மாட்டு வண்டிகளிலும் சைக்கிள் வண்டிகளிலும் சென்று போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகளின் இந்தச் சவாரிச் சாகசங்கள் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

டீசல் விலை அதிகரிப்பு,



மாட்டு வண்டியில் எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக் சவாரி

விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்தும் யாழ்ப்பாண விமான சேவைக் கட்டணத்தைக் குறைக்கும் படியும், வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மாட்டுவண்டிப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த மாதம் முற்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண எம்.பி. ரி.மகேஸ்வரன் தலைமையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு மாட்டு வண்டிகளில் சென்றார்கள். சுரணிமலே ராஜபக்ஷ, எம்.ஏ.எம்.மஹ்ரூப், டாக்டர் ஜெய்லத் ஜெயவர்த்தன, எப்.ஜீ.பி.நெல்சன் முதலான ஐ.தே.க.எம்.பிக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கடந்த வாரம் 12 ஐ.தே.க. எம்.பிக்கள் சைக்கிள் வண்டிகளில் நாடாளுமன்றத்திற்கு சென்று மற்றொரு போராட்டத்தை நடத்தினர். டீசல் விலை அதிகரிப்பு விலைவாசி உயர்வு ஆகியவற்றை எதிர்த்தே இவர்களும் இந்தப் போராட்டத்தை நடத்தினர். இவர்களின் மெய்பாதுகாவலர்கள் சைக்கிள்களைப்பின் தொடர்ந்து கால்கடுக்க ஓடி வந்தனர்.

நாடாளு மன்றத்திற்கு ஊர்வலமாகச் சென்று கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வேறு சம்பவங்களும் இலங்கையில் நடைபெற்றிருக்கின்றன.

முன்னாள் பிரதமர்களில் ஒருவரான டபிள்யூ .தஹநாயக்க கோவணம் தரித்து நாடாளுமன்றம் சென்ற சம்பவம் ஒரு காலத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இந்தியாவிலும் இத்தகைய போராட்டங்கள் காலத்துக்குக் காலம் நிகழ்ந்திருக்கின்றன.

இந்திய நாடாளு மன்றத்துக்கு காங்கிரஸ் பெண் எம்.பி. ரேணுகா சவுத்திரி அண்மையில் உழவு இயந்திர வண்டியை ஓட்டி வந்தார். அவரைப் பொலிசார் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.ரேணுகா சவுத்திரி மத்திய அரசின் விவசாயக் கொள்கைக்கும் டீசல் விலை உயர்வுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், டிராக்டரை ஓட்டி வந்ததாகத் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் "இது போன்ற பிரச்சினைகளைக் கிளப்புவது சரி அல்ல. நாளை இவரோ அல்லது வேறு ஒரு உறுப்பினரோ பீரங்கி வண்டியை நாடாளுமன்றத்திற்கு ஓட்டி வந்தால் அனுமதிக்க முடியாமா?." என்று கேட்டார்.

அப்போது காங்கிரஸ் உறுப்பினர் பி.ஆர்.தாஸ் முன்சி எழுந்து. "ரேணுகா டிராக்டரை ஓட்டி வந்ததில் எந்தத் தவறும் இல்லை. வாஜ்பாய் பிரதமர் ஆவதற்கு முன்பு ஒரு முறை நாடாளுமன்றத்துக்கு மாட்டு வண்டியை ஓட்டி வந்தார். அவரைப் பின்பற்றித்தான் ரேணுகாவும் வந்து இருக்கிறார்" என்று நியாயப்படுத்தினார்.

உடனே பாரதீய ஜனதா உறுப்பினர் மதன்லால் குரானா எழுந்து. "ஒரு முறை இந்திராகாந்தி நாடாளுமன்றத்துகது குதிரை வண்டியில் வந்தார்" என்று பதிலுக்கு ஒரு தகவலைத் தெரிவித்தார்.

சபாநாயகர் பாலயோகி அப்போது குறுக்கிட்டு, "எந்த வாகனமாக இருந்தாலும் நாடாளுமன்றச் செயலாளரின் அனுமதிச் சீட்டு பெறாமல், வளாகத்துக்குள் அனுமதிக்கக்கூடாது." என்று கூறி அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இதேவேளை தமிழகம் ஆவடி நகரசபைக் கூட்டத்திற்கு "பாடை"யில் தூக்கி வரப்பட்ட த.மா.கா. உறுப்பினர் 3 மாதங்களுக்கு சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாது எனத் தடுத்து நிறுத்தப்பட்டார்.

ஆவடி நகரசபைக் கூட்டம் தலைவர் சாந்திலால் தலைமையில் நடந்தது.

அப்போது நகரசபைக் கட்டடத்திற்கு வெளியே திடீரென்று தாரை– தப்பட்டை முழங்கும் சத்தம் கேட்டது அந்த ஊர்வலத்தில் தூக்கி வரப்பட்ட "பாடை" யில் ஒருவர் படுத்திருந்தார்.

"பாடை" ஊர்வலத்தினர் நகரசபைக் கூட்டம் நடந்த இடத்திற்கு வந்தனர். உள்ளே நுழைந்து "பாடை"யை நகரசபைத் தலைவர் முன்பாக இறக்கினார்கள். "பாடை"யில் படுத்திருந்தவர் எழுந்தார்.

அவர் த.மா.கா. உறுப்பினர் அமீத் பாபு ஆவார்.

காந்தி நகர் பகுதியில் சுடுகாடு கட்ட நீண்ட நாட்களுக்கு முன்பே நிதி ஒதுக்கீடு செய்தும், இதுவரை அதற்கான பணி நடக்காததைக் கண்டித்து அவர் இந்த நூதன கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அமீத்பாபுவை 3 மாதம் கூட்டத்தில் இருந்து "இடை நிறுத்தம்" செய்து தலைவர் சாந்திலால் உத்தரவிட்டார்.



நாடாளுமன்றத்துக்கு எம்.பி.க்களின் சைக்கிள் சவாரி

# பிரதமர் வாஜ்பாயின் நிறைவேறாத ஆசை!



வாஜ்பாய்

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சிறுவர், சிறுமியருக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தன்னுடைய பாடசாலை அனுபவங்கள் பற்றி ருசிகர தகவல்களைத் தெரிவித்தார்.

சர்வதேச குழந்தைகள் ஒலிபரப்பு தினத்தையொட்டி அகில இந்திய வானொலி சார்பில் இந்தச் சிறப்புப் பேட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

உடல் ஊனமுற்ற 15 குழந்தைகள் உட்பட ஏராளமான குழந்தைகள் வாஜ்பாயிடம் துருவித் துருவிக் கேள்வி கேட்டனர். எல்லாக் கேள்விகளுக்கும் அவர் சளைக்காமல் பதில் அளித்தார்.

"பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது டீச்சரிடம் பிரம்படி வாங்கிய அனுபவம் எப்படி?" – என்று ஒரு சிறுமி, பிரதமரை மடக்கினாள். வாஜ்பாயை இந்தக் கேள்வி சற்று திகைக்க வைத்தது. ஆனாலும் பழைய சம்பவங்களைக் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்வதில் அவருக்கு ஏகப்பட்ட குஷி ஏற்பட்டது.

"நான் பிரம்படியெல்லாம் வாங்கியது கிடையாது. சில நேரங்களில் வாத்தியார் என் காதைப் பிடித்துத் திருகுவார். பெஞ்ச் மேல் நிற்கச் சொல்லுவார். அவ்வளவுதான் எனக்கு கிடைத்த தண்டனைகள். ஆனாலும் ஒரே ஒரு முறை டீச்சர் என்னைப் பிரம்பால் அடித்தபோது, தவறுதலாகக் கன்னத்தில் பட்டு வீங்கிவிட்டது. அப்போது வகுப்பில் பரபரப்பு ஏற்பட்டது இன்று கூட ஞாபகம் இருக்கிறது.

நான் அதிகமாகக் குறும்பு செய்யமாட்டேன். வகுப்பில் நல்ல பையனாக அமைதியாக இருப்பேன். அதற்காக எப்போதுமே படித்துக்கொண்டே இருப்பேன் என்று தப்பாக நினைத்து விடாதீர்கள். நான் புத்தகப் புழு அல்லன். எனக்கு விளையாடுவதில்தான் ஆர்வம் அதிகம்.

நீங்கள் எல்லாம் அதிஷ்டசாலிகள். இப்போது பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைப் பிரம்பால் அடிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது.

இவ்வாறு வாஜ்பாய் பதில் அளித்தார்.

"உங்களுக்கு கடினமான பாடம் எது?" – என்று ஒரு மாணவன் கேட்டபோது, "கணக்குப் பாடம் என்றாலே எனக்கு ஒரே பயம்தான். கணக்குப் பரீட்சையின் போது அல்ஜிப்ரா கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிப்பேன். மற்றக் கேள்விகளை விட்டு விடுவேன்" என்று வாஜ்பாய் சிரித்துக் கொண்டே கூறினார்.

பிரதமர் பதவிதான் உங்கள் லட்சியமாக இருந்ததா? என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கும்போது, "நான் பத்திரிகையாளராக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் பிரதமராக ஆகிவிட்டேன். இப்போது கூடக் காலம் கடந்து விடவில்லை. இன்று பதவி போனால் கூடப் பத்திரிகையாளராக ஆகிவிடுவேன்" என்றார்.

"அரசியல் வாதியாக இல்லாமல் ஒரு பத்திரிகையாளராகவோ, எழுத்தாளராகவோ பெயர் பெற வேண்டும் என்பதுதான் என் விருப்பம்." என்று தனது ஆசையை மனம் திறந்து வெளியிட்டார் வாஜ்பாய். சுவாமி விவேகானந்தரைத் தனது வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கருதுவதாயும் அவர் கூறினார்.

## விருந்துபசாரத்தில் புரிந்துணர்வு

விருந்தாளிகள் வரும் போது வீடு பார்வையாக இருக்க வேண்டும் என்று ஒரு உணர்ச்சி எம்முள் இருக்கும்.

அதேபோல் வரும் விருந்தாளியை எப்படி உபசரிப்பது என்பதிலும் அதிக கவனம் தேவை.

நீங்கள் அதிக ஆர்வம் எடுத்துச் செய்த உணவுகளை விருந்தினர் சாப்பிட முடியாமல் இருக்கும். ஏனென்றால் இன்று நீரிழிவு நோய், இருதய நோய் என்று நோய்கள் அதிகம்.

வீட்டிற்கு வந்த விருந்தாளியிடம் சகஜமாகப் பேசி அவரது தேவைகளை அறிந்து கொள்ளுங்கள். தகவல் பரிமாற்றம் என்பது நிறுவனங்களில் மட்டும் அல்ல வீடுகளிலும் இருப்பது அவசியம்.

இதற்கு உங்களை மாற்றிக் கொள்வது மிக இலகுவான காரியம். அதற்கு உங்கள் உணர்வு நிலைகளைச் சரியாக அமைத்துக் கொண்டால் எளிதில் மாறிவிடலாம்.

சிலர் நான் நினைத்ததை மட்டும் செய்வேன் என்ற உணர்வு உள்ளவர்கள். வீட்டில் தினமும் காலை உணவு பாண் என்றால், அதனை விருந்தினருக்காக இடியப்பமாக மாற்ற விரும்பாத மனோபாவம்.

வந்த விருந்தினர் தனது விருப்பத்தைக் கூறினாலும் அவர் விருப்பத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பார்கள். இது முரண்டு பிடிக்கும் குணம்.

உங்கள் விருப்பத்திற்கு எதையும் செய்து விட்டாலும் அதை நிறுத்திக்கொள்ளும் மனோபாவம் இருக்க வேண்டும். விருந்தினர் விரும்பாத உணவைச் சமைத்து விட்டால், மன்னியுங்கள், தெரியாமல் செய்து விட்டேன். அடுத்த முறை நீங்கள் விரும்பிய உணவைத் தயார் செய்கிறேன் என்று கூறுங்கள்.

இந்தக் கடைசிப் பண்புதான் சிறந்தது. அதனால் வந்த விருந்தாளியும் மகிழ்வார். உங்களுக்கும் திருப்தி இருக்கும்.

புரிந்துணர்வு, திறன்படத் தகவல் பரிமாறுதல், வளைந்து கொடுக்கும் தன்மை என்பன விருந்துபசாரத்தில் மட்டுமல்ல, உங்கள் எல்லாக் காரியங்களையும் வெற்றியடையச் செய்ய இவை உதவும். பாராட்டும் பெறுவீர்கள்.



## நாட்டுக்குப் போலவ் வீட்டுக்கும் பட்ஜெட்



"குடும்பத்தின் வரவையும் செலவையும் கணக்கு எழுதிப்பார்க்க வேண்டும்" என்று எப்போதாவது நினைத்துள்ளீர்களா?

எமக்கு வரும் சிறிய வருமானத்திற்குக் கணக்கு எழுதி வருமான வரியா கட்டப் போகிறோம் என நீங்கள் நினைக்கக் கூடும்.

வரவு செலவை எழுதி வந்தால் தான் உங்கள் குடும்ப பட்ஜெட் சமப்படும்.

* தினமும் இரவு தூங்குவதற்கு முன்பு ஒன்றும் விடாமல் வரவு செலவு இரண்டையும் எழுதி விடுங்கள்.
* பலசரக்குப் பொருட்களின் விலையுடன் அவற்றை வாங்கிய கடையின் பெயரையும் எழுதுங்கள், இதனால் பொருட்களின் விலையை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.
* தனித்தனித் தலைப்புக்களில் செலவுகளை எழுதுங்கள். ஒவ்வொரு விடயத்திற்கும் செய்யும் செலவுகளை நெறிப்படுத்த அது உதவும்.
* கொடுத்த கடனை வசூலிக்கவும் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்கவும் கணக்கு எழுதுவது வசதியாக இருக்கும்.
* வரவு செலவை எழுதும் போது பத்துசதவீத சேமிப்பை நடைமுறைச் செலவாக வைத்துக்கொள்ளுங்கள்.

இப்பழக்கத்தினால், செலவுகளைக் குறைப்பதும் வருமானத்தை அதிகரிப்பதும் எப்படி என்று சிந்திக்க வழி கிடைக்கும்.

என்ன வீட்டு நிதியமைச்சர்களே பட்ஜெட் போடத் தயாராகிவிட்டீர்களா?



## குழந்தை எதற்கும் அழுது அடம் பிடிக்கிறதா?

என் மகள் யாருக்கும் எதுவும் கொடுக்க மாட்டாள், எப்போதும் அழுது அடம் பிடிப்பாள். இந்தச் சுபாவங்களை எப்படி மாற்றுவது?

இவ்வாறு பல தாய்மார் புலம்புவது உண்டு.

ஒரு குழந்தையின் மனநிலை வளர்ச்சிக்கு உங்கள் செயற்பாடுகள் அடித்தளம் அமைக்கின்றன.

* வீட்டிற்கு விருந்தினர் வந்தால் வரவேற்கக் குழந்தைக்குக் கற்றுக்கொடுங்கள்.
* யாருக்காவது ஏதாவது கொடுக்க விரும்பினால் அதனை உங்கள் குழந்தை மூலம் கொடுங்கள்.
* பாடசாலைக்குக் கொண்டு செல்ல உணவு கொடுக்கும் போது எதையாவது அதிகமாக வைத்து அதனை நண்பிக்கும் கொடுத்துச் சாப்பிடும் படி கூறுங்கள்.
* பக்கத்து வீட்டுப் பிள்ளையுடன் தன் பொம்மையைப் பகிர்ந்து விளையாட குழந்தைக்குப் பழக்குங்கள்.
* வேறொருவரின் பொருளைக் குழந்தை எடுத்து வந்தால் அதை உரியவரிடம் கொடுத்து விடுங்கள், உங்களுக்கு வேறொன்று வாங்கித் தருகிறேன் என்றுகூறுங்கள்.
* உங்களுடைய ஒவ்வொரு செயலையும் குழந்தை பின்பற்றும் என்ற எண்ணத்துடன் எப்போதும் செயலாற்றுங்கள்.



## குழந்தை பெற்ற பின்னர் பெண்ணுக்கு அழகு தேவையா?



பிரதீபா – பசீனா

திருமணத்திற்கு முன் ஒவ்வொரு ஆணுக்கும் தனக்கு வரப்போகும் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருக்கும்.

முன்னைய காலத்தில் என்றால் கணவன் தனக்கு வரப்போகும் மனைவி வீட்டில் இருந்து தன்னைக் கவனித்துக் கொண்டாலே போதும் என்று நினைப்பான். விலைவாசி ஏற்றமில்லாத, பொருளாதார நெருக்கடிகள் இல்லாத அன்றைய சமூகத்தில் இது சாதாரண விடயமாகவே இருந்தது.

ஆனால் இன்று 90% ஆண்கள் பொருளாதாரச் சிக்கலைச் சமாளிப்பதற்காக வேலைக்குச் செல்லும் மனைவியையே அதிகம் விரும்புகின்றனர்.

சில ஆண்கள் அதை மட்டும் பிரதான தகுதியாக எண்ணாமல் குடும்பப் பின்னணி, குணம் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு மணம் முடித்தாலும் ஆரம்ப நாட்கள் அவர்களுக்கு இனிமையாகத்தான் இருக்கும்.

மனைவியின் எல்லாத் தேவைகளையும் சலிப்பின்றிப் பூர்த்திசெய்யும் கணவனுக்குத் திடீரென அவள் மீது சலிப்புத் தட்டிவிடும்.

சில சமயங்களில் இந்தச் சின்ன விடயத்திற்குக் கூடவா என்னை எதிர்பார்க்க வேண்டும் எனக் கணவன், மனைவியிடம் கேட்டுவிட்டால் அது இருவருக்குமிடையில் பாரிய விரிசலை ஏற்படுத்திவிடும்.

சின்னச் சின்னத் தேவைகளுக்குக் கூடக் கணவனின் கையை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம், என்ற மனநிலை மனைவியைச் சோர்வடைய வைக்கிறது.

இந்த நிலைமை பல பெண்களுக்கு ஏற்படுகின்றது. வீட்டில் இருக்கும் சில பெண்கள் சோம்பேறித்தனமாய் செயற்பட்டுக் கொண்டு ரி.வி. யே கதி என்று இருப்பார்கள். இது அவர்களுக்குள் ஒரு அவநம்பிக் கையைத் தோற்றுவிக்கும்.

பெண்கள் வீட்டில் இருக்கிறார்களா அல்லது வேலைக்குப் போகிறார்களா என்பதை விட எந்தளவிற்குத் தன்னம்பிக்கையுடன் இருக்கிறார்கள் என்பது தான் முக்கியம்.

பொருளாதாரச் சுதந்திரம் தான் ஒருவரின் தன்னம்பிக்கைக்கு முக்கிய காரணம். தன்னை விடத் திறமையுள்ள பெண்களைக் கண்டால் விலகிச் செல்லும் பெண்கள் தான் எம்மத்தியில் அதிகம்.

இந்த நிலை மாற வேண்டும். உங்களுக்கு உள்ள தாழ்வு மனப்பான்மையைத் தூரவிலக்கி விட்டுச் சாதாரணமாக எல்லோருடனும் நட்புப் பாராட்டுங்கள்.

முன்னேறியவர்களுடன் நாம் கொள்ளும் நட்பு நம்மை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும்.

சில பெண்கள் திருமணம் ஆகிக் குழந்தைகள் பெற்றுக்கொண்டவுடன் நாம் இன்னும் யாருக்காக அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் ஏற்பட்டு விடும். இது முற்றிலும் தவறான விடயம்.

எப்போதும் குளித்துச் சுத்தமான ஆடைகளை அணிந்து, உள்ளத்தில் நல்ல எண்ணங்களை வளர்த்து, இனிய மொழிகளைப் பேசி முகத்தில் புன்னகையுடன் வாழ்க்கை நடத்தினால் நீங்கள் 90% நம்பிக்கையுடன் தான் இருப்பீர்கள்.

இதனால் மற்றவர்கள் மத்தியில் ஒரு மதிப்பு நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும். எனவே, "வயது" இது போன்ற விடயங்களில் உங்களைக் கட்டிப் போடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

வாசிப்புப் பழக்கத்தையும், நாலு விஷயங்களைத் அறிந்து கொள்வதையும் நிறுத்திவிடாதீர்கள். எவ்வளவுக்கு எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்களோ அவ்வளவிற்கு அவ்வளவு நம்பிக்கையாக நீங்கள் இருக்கலாம்.

தேவைகளை நிறைவேற்றுவதோடு, வீட்டை மட்டும் கவனிக்கத் தெரிந்த மனைவியை விட அறிவு பூர்வமாகத் தன்னுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் மனைவியைத்தான் கணவன் அதிகம் விரும்புவான்.

"என்னால் எதுவும் செய்ய முடியும்" என்ற மனோதிடத்தை மனதில் உறுதியுடன் வளர்த்துக்கொள்ளுங்கள்.

ஏனெனில் தன்னம்பிக்கைதான் வாழ்க்கையின் மிகச் சிறந்த அத்திபாரம்.



## பதற்றம் வேண்டாம் நிதானம் தேவை


வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடுவது இல்லத்தரசிகள் பலருக்குப் பழக்கம்.

இதனால் வாணலியில் நெருப்பெடுப்பது உண்டு. இப்போது என்ன செய்வது என்று பதற வேண்டாம்.

* முதலில் அடுப்பை அணையுங்கள்.
* வாணலியைத் தொடவோ அசைக்கவோ வேண்டாம்.
* தண்ணீர் ஊற்றினால் வாணலி வெடித்துவிடும்.
* வாணலியின் வாயை விடப் பெரிய தட்டால் அல்லது. நனைந்த போர்வையால் மூடி விடுங்கள்.
* தீ முழுமையாக அணைந்த பின்பும் அரை மணி நேரத்திற்கு வாணலியை மூடியே வைத்திருங்கள்.

இவற்றைச் செய்தும் தீ அணையாவிட்டால் உடனே தீ அணைப்பு நிலையத்திற்கு போன் செய்யுங்கள்.

# செவ்வாய்க்கிரக சகதிப் படிவுகள்




செவ்வாய்க் கிரகம் பற்றி ஆராய்வதற்கு அனுப்பப்பட்ட விண்கலம் சில தெளிவான புகைப்படங்களுடன் புதிய தகவல்களையும் தந்திருக்கிறது. செவ்வாய்க்கிரகத்தில் மேற்குப் பகுதியில் பெருமளவு நிலப்பரப்பு சகதிப்படிவுகளைக் கொண்டிருக்கிறது. இதன்மூலம் செவ்வாய்க்கிரகம் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஏரிகள் நிறைந்த கோளாக இருந்திருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள்.



## அமிதாப் பச்சன் மெழுகு பொம்மை

ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சனுக்கு ஒரு தம்பி இருக்கிறாரா? இல்லை, லண்டனில் துஸாத் காட்சிச் சாலையில் அமிதாப்பின் மெழுகு பொம்மை ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. தனது பொம்மைக்கருகில் நின்று அமிதாப் (வலப்புறம்) படம் பிடித்துக் கொண்டார். உலகத் தலைவர்களின் மெழுகுப் பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் துஸாத் காட்சிச் சாலையில் ஒரு இந்திய நடிகரின் மெழுகு பொம்மை உருவாக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். தனது பொம்மையை அமிதாப்பே அண்மையில் திறந்து வைத்தார். இவரது மெழுகு பொம்மை நிறுவ 37 இலட்சம் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது.



## நீச்சல் குளத்திலே விமானம் இறங்கியதா?

மேலை நாட்டவர்கள் நீச்சல் குளத்திலே நீராடுவதைத் தமது முக்கிய பணியாகக் கொண்டிருக்கின்றார்கள். குழந்தை குட்டிகளுடன் சென்று முழுக்குடும்பமும் நீச்சல் அடித்து மகிழும். உடல் ஆரோக்கியமும் மனத்தெளிவும் அதன் மூலம் ஏற்படும். நீச்சலின் பெருமையை உணர்ந்ததனால் ஒரு விமானத்திலேயே வந்து இறக்கிவிட்டார்களா இவர்கள்? இல்லை நீச்சல் குளத்திலே குழந்தைகள் குதூகலமடைய இப்படி ஒரு ஏற்பாடு.


# மில்லேனியம் றெஸ்ரோறன்ற்




## 1 ஆவது ஆண்டு நிறைவும் புத்தாண்டு வாழ்த்துக்களும்

கடந்து விட்ட மிலேனியம் ஆண்டு கணக்கற்றோர் நெஞ்சத்தில் நிறைந்து விட்டது, காரணம் என்ன? நந்தவனத்தில் அமர்ந்தவர்கள் சிந்தை மகிழ்ந்து யாழ் நகரில் இப்படி ஒரு பிரமாண்டமான இடம் சிங்கப்பூரில் இருப்பது போன்றல்லவா தோன்றுகிறது என மகிழவைக்கும் சூழ்நிலையை உருவாக்குகிறது.

**மில்லேனியம் றெஸ்ரோறன்ற்**

நந்தவனத்தின் நடுவே உங்கள் கொண்டாட்ட விருந்துபசாரம் குதூகலிக்க சமையற் கலையின் ஆசான்களின் கைவண்ணத்தில்

✱ (B) புரியாணி ✱ (F) பிறைற்றைஸ் ✱ நூடில்ஸ் ✱ சகல சூப் வகைகள் ✱ மட்டன் டெவல் ✱ சிக்கன் டெவல் அனைத்துக்கும்

**மில்லேனியம் றெஸ்ரோறன்ற்**

உரிமையாளர்:- **S.சுகுமாரன்**

பண்டிகை நெருங்குவதால் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

இல, 76/60, இராமநாதன் வீதி,
பல்கலைக்கழக வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.


## கூட்டுக் குடும்பமாக வாழ்வதில் இன்பம்

கூட்டுக்குடும்பமாக வாழ்வது நல்லதா? தனிக்குடித்தனம் நடத்துவது நல்லதா? இந்தத் தலைப்பில் அடிக்கடி விவாத மேடைகளில் கருத்து மோதல்கள் நடத்துவது மனிதர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. ஆனால், மிருகங்களுக்கு கூட்டுக் குடும்பம் தான் மிகவும் பிடித்தமான வாழ்க்கை முறை. புள்ளிமான்களுடன் மரை இனமும் சேர்ந்து நீர் நிலையின் அருகே கூடிவாழும் இந்தக் காட்சி மனமகிழ்ச்சியைத் தரவில்லையா?





## ஒளிந்திருக்கும் முகம் எது?


டிசம்பர் 17 சுடர் ஒளிமசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஐஸ்வரியா ராயினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி சுடர் ஒளிக்கு அனுப்பி வைத்தவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு :

1. பா.கோபி கிருஷ்ணா - பசறை
2. பாமிஸ் மஜீத் - அனுராதபுரம்
3. ரா.சேகர், கம்பளை

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய அனைவரையும் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகள் மூவருக்கும் எமது வாழ்த்துக்கள்

கடந்த வாரம் (24-12-2000) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் பெயர், விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்தவாரம் பிரசுரமாயிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது ? குஷ்பாலாகத் திருமணம் செய்து ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டார். இந்த நடிகைக்கு கோயில் கட்டிய ரசிகர்களும் இருக்கிறார்கள்.



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரை தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

"சுடர் ஒளி"
36/2, பிரட்ரிகா வீதி
கொழும்பு -06.

# அடகு வைத்த நகைகளுடன் கடைக்காரர்கள் ஓட்டம்

## செய்வதறியாது தோட்டத்தொழிலாளர்கள் தவிப்பு

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்தை அடுத்து மலையகத்தில் நடந்த வன் செயல்களின் போது அடகு நகைக் கடைக்காரர்கள் பலரும் அடகு வைக்கப்பட்ட நகைகளைச் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டார்கள்.

பல வழிகளில் பாதிக்கப்பட்ட ஏழைத் தொழிலாளர்கள் தங்களிடமிருந்த அற்ப சொற்ப நகைகளையும் திரும்பப் பெற முடியாத நிலையில் தவிக்கிறார்கள்.

"எங்கிருந்தோ வந்தவன் தலையில் அடித்துவிட்டுப் போய் விட்டான். ஆனால் உடன் இருந்தவனோ வயிற்றிலே அடித்து விட்டானே!. எரிந்த வீட்டில் பிடுங்கியது இலாபம் என்று அடகு நகைகளை ஏப்பம் விட்டு விட்டனரே இந்த அடகு கடைக்காரர்கள்!"

இப்படி ஹட்டன், கினிகத்தன முதலான பகுதிகளில் வாழும் அப்பாவித் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

தமது கடும் உழைப்பால் அரசுக்குப் பணம் சம்பாதித்துத்தரும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு தகுந்த சம்பளம் வழங்காமல் பட்டினி போட்டு வருகிறது.

தினக்கூலிக்கு வேலை செய்யும் இவர்கள் தமது உணவு, உடை, மருந்து, பிள்ளைகளின் படிப்புச் செலவுகளுக்குப் பணம் இல்லாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர்.

தமது செலவுகளைச் சமாளிக்கக் காதிலும், கழுத்திலும் கிடக்கும் ஒரு சில தங்க நகைகளை அற்ப சொற்பத் தொகைக்கு ஈட்டுக் கடைகளில் அடகு வைத்துப் பணம் பெறுகின்றனர்.

வங்கிகளில் குறைந்த வட்டிக்கு நகைகளை அடவு வைக்கும் வாய்ப்பு இருந்தும் அடையாள அட்டை இல்லை என்பதாலும், அவசரத்திற்கு எந்த நேரத்திலும் பணம் எடுக்கலாம் என்பதாலும் கூடிய வட்டியைப் பொருட்படுத்தாமல் தனியார் ஈட்டுக் கடைகளையே நாடுகின்றனர்.

மலையகத்தில் எப்போதுமே நஷ்டம் போகாத வியாபாரங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று மதுபான விற்பனைத் தொழில் மற்றது ஈட்டுக் கடைகள் நடத்துதல்.

இவை இரண்டுமே தொழிலாளர்களை மேலே எழும்ப விடாமல் அழுக்கி வைக்கும் இருபெரும் சக்திகள்.

இது தெரிந்தும் தவிர்க்க முடியாத தேவை காரணமாக தலவாக்கலை, கினிகத்தன பகுதிகளில் வாழும் மக்கள் தனியார் ஈட்டுக் கடைகளில் தமது தங்க நகைகளை அடகு வைத்தனர்.

அண்மையில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது இவ்விருநகரங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் பல கொள்ளையடிக் கப்பட்டன. மற்றும் சில கடைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அடகு கடைக்காரர்கள் முக்கிய தஸ்தா வேஜுகளையும் கையில் கிடைத்த தங்க நகைகளையும் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டனர்.

இப்பொழுது எரிக்கப்பட்ட கடைகளுக்கும், இடிக்கப்பட்ட வீடுகளுக்கும் அரசினால் நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. காப்புறுதி செய்திருந்த கடைக்காரர்களுக்கு இன்சூரன்ஸ் நிறுவனங்கள் நஷ்ட ஈடு வழங்க மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இவர்களுக்கு நிச்சயமாக இரண்டு பக்கத்தாலும் இழப்பீடுகள் கிடைக்கும். ஆனால் இவர்களிடம் தங்க நகைகளை ஈடு வைத்தவர் களுக்குத்தான் பேரிடி.

நகைகளை அடகு வைத்தவர்கள் அடகுத் துண்டுகளுடன் (ரசீது) போய் முதலாளிமார்களிடம் கேட்கும் போது "நான் என்ன செய்வது, பாவிகள் எல்லாவற்றையும் கொளுத்தி விட்டார்களே, இப்ப நானும் கூட உங்களைப் போல் ரோட்டுக்கு வந்து விட்டேன்" என்று கையை விரித்து விடுகின்றனர்.

பெறுமதியான நகைகளை அற்ப சொற்பத் தொகைகளுக்கு அடகு வைத்த தொழிலாளர்கள் இப்போது செய்வதறியாது தவிக்கின்றனர்.

நகைகளை அடகு வைத்தவர் களிடம் நகைகளின் எடை, பெறுமதி, வாங்கிய பணத் தொகை என்பனவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்ட ரசீதுகள் இருக்கின்றன.

அரசிடம் நஷ்டஈடு பெறுப வர்களும், இழப்பீடு இன்சூரன்ஸ் செய்தவர்களும் தமக்கு ஏற்பட்ட இழப்புகளின் விவரங்களைப் பட்டியல் போட்டு உறுதிப் படுத்தியே சமர்ப்பிக்க வேண்டும்.

இன்சூரன்ஸ் இழப்பீடு அடகுக் கடை முதலாளி மார்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

அடகுக்கடை இழப்பீட்டை இந்த முதலாளிமார்கள் தம்மை நம்பி அடகு வைத்த தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்களா? அதுதான் இல்லை.

எதுவுமே இல்லை என்று அவர்கள் தான் கையை விரித்து விட்டார்களே!

— இரா. புத்திரசிகாமணி

மலையகக் கண்ணோட்டம்

# கொழும்பில் இ.தொ.கா தலைமையகம் கைமாறுமா ?

தோட்டத் தொழிற்சங்கத் துறைக்கே பெருமை தரும் விதத்தில் கொழும்பில் பெரிய மாளிகை போன்று வனப்புடன் வான்நோக்கி நிற்கும் இ.தொ.கா தலைமை அலுவலகம் கைமாறிவிடுமோ என்ற அச்சம் பலருக்கு எழுந்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தையும் அன்பர்களின் நன்கொடை களையும் மூலதனமாகக் கொண்டு தலைவர் அமரர் எஸ்.தொண்டமான் கட்டி எழுப்பிய மாளிகை இது.

சில வருடங்களுக்கு முன்னர் தவிர்க்க முடியாத நிலையில் இ.தொ.கா தலைமை அலுவலகக் கட்டிடத்தை வங்கி ஒன்றுக்கு அடமானம் வைத்து பெருந்தொகைப் பணம் கடனாகப் பெறப்பட்டது.

பெற்ற கடனைத் திருப்பிச்செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. வட்டி வேறு வளர்ந்து விட்டது. வங்கி சும்மா இருக்குமா? வட்டி யையும் முதலையும் அறவிடுவதற்கு அடமா ணம் வைக்கப்பட்ட கட்டடத்தை ஏலம் விடும் முயற்சியில் வங்கி இறங்குவது நடைமுறை.

அதற்கு முன்னர் கட்டடத்தின் ஒரு பகுதி யை பெரிய வாடகைக்கு விட்டுப் பணம் சேர்ப்ப தற்கு ஒரு சிலர் மேற்கொண்ட நடவடிக் கைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

பெரிய வர்த்தக நிறுவனம் ஒன்று கட்ட டத்தின் பேரில் பணம் கொடுத்து உதவ முன் வந்தது என்று கூறப்படுகிறது. ஆயினும் அந்த நிறுவனம் அந்தக் கட்டடத்தில் இருந்து செயற் பட உரிமை கோரி விதித்த கடுமையான நிபந் தனை காரணமாகக் காரியம் கைகூடவில்லை.

தலைமை அலுவலகத்தில் இருந்து இயங்கி வந்த பல இ.தொ.கா பிரிவுகள் மலையகத்திற்கு ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டன.


மலையகத்தின் பல நகரங்களில் இ.தொ.காவுக்குச் சொந்தமாக இருந்த பல கட்டடங்கள் இப்போது கைமாறிவிட்டன என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.


இ.தொ.கா வில் பணி புரியும் பல ஊழியர்களின் சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் ஆகியவை நீண்டகாலமாகச் செலுத்தப்படவில்லை என்று தொழில் திணைக்களம் ஒரு புறத்தில் தொல்லைகொடுத்து வருகிறது.

மறு புறத்தில் இ.தொ.கா வுக்கு முன்னர் போல் இப்போது தொழிலாளர்களின் சந்தாப் பணம் பெருந்தொகையில் கிடைப் பதில்லை என்று கூறப்படுகிறது.

வருமானம் குறைவு, தலைக்குமேல் செலவுகள் என்றால் சிக்கல்தானே! எப்படி இ.தொ.கா எல்லாவற்றையும் சமாளிக்கப் போகிறது என்று அதனோடு நெருங்கியவர்கள் கலங்குகிறார்கள்!.

# மத்திய மாகாண சபையில் இராதாகிருஷ்ண விவாதம்


வீ. இராதா கிருஸ்ணன்


எஸ். இராஜரத்தினம்

மத்திய மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதம் இராதாகிருஷ்ண விவாதமாக மாறியது.

இ.தொ.காவின் உந்து சக்தியாக விளங்கும் அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணனிடமே கைத் தொழில், வர்த்தக வாணிபம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கால் நடை அபிவிருத்தி இந்து கலாசாரம், தமிழ்க் கல்வி, சமூக சேவைகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவர் சுறு சுறுப்பாக இயங்கிச் சிறந்த சேவை செய்பவர் என்று பொதுவாக மத்திய மாகாண சபையின் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு இரண்டினாலும் பெரிதும் மதிக்கப்படுபவர்.

காய்த்த மரம்தானே கல்லெறிபடும்! அமைச்சர் இராதா கிருஷ்ணன் மீது இ.தொ.காவிலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர்கள் ஐவரில் ஒருவரும் முன்னாள் எம்.பி.யும், இன்றைய மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவருமான எஸ். இராஜரத்தினம் பல குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்.

அவரை ஆதரித்தும் எதிர்த்தும் வேறு பலரும் பேசினார்கள். கூட்டத்துக்கு தலைவர் மகிந்த அடிடக்கோனும் பிரதித்தலைவர் துரைமதிமுகராஜாவும் மாறி மாறித் தலைமை தாங்கினர்.

நிதி ஒதுக்கீடு போதாது. நிதி செலவிடப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. கொட்டகலை தொழிற் பயிற்சிக் கூடம் ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்கத்தின் வளர்ச்சிக்காகத் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. தமிழ் ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவுகிறது. இந்து ஆலயக் குருமார்கள் அவதிப்படுகிறார்கள். தோட்டப்புறங்களில் நிலவும் வசதிக் குறைவுகள், இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்றெல்லாம் விஸ்தாரமாகப் பேசினார்.

தமிழ் ஆசிரியர்களை நியமிக்க உலக வங்கி கொடுத்த பணத்தில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இராஜரத்தினம் புகார் கூறினார்.

ஒரு கட்டத்தில் இந்தியா மீதும் இராஜரத்தினம் குற்றம் சாட்டினார்.

புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமாதானத்துக்காக அரசினருக்கு நேசக்கரம் நீட்டியிருக்கிறார். இது நல்லதொரு சமிக்ஞை. இந்நிலையில் பிரபாகரனை நாடு கடத்தும் படி இந்தியா கோருவது இலங்கையில் அமைதி ஏற்படுவதைத் தடுப்பதற்கா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

1971 இல் ஜே.வி.பி கிளர்ச்சி. 1983 தொடக்கம் புலிகளின் போராட்டம். மலையகத்தில் இப்படி ஒரு போராட்டத்தில் இறங்க வேண்டிய சூழ்நிலையை இளைஞர்களுக்கு ஏற்படுத்தாதீர்கள் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் இராதாகிருஷ்ணன் சில சமயங்களில் குறுக்கிட்டு இது நீங்கள் முன்பு இருந்த நாடாளுமன்றம் அல்ல, மாகாண சபை என்று இராஜரத்தினத்துக்கு நினைவு படுத்தினார்.

கொட்டகலை தொழிற் பயிற்சி நிலையம் சம்பந்தமாகச் சில விஷயங்களை இராஜரத்தினம் சுட்டிக் காட்டியபோது அப்போது நீங்களும் தானே அதில் சம்பந்தம் உடையவராக இருந்தீர்கள என்று அமைச்சர் இராதா கிருஷ்ணன் எடுத்துக்காட்டினார்.

இராஜரத்தினத்துக்கு ஆதரவாகச் சில உறுப்பினர்களும், அமைச்சர் இராதா கிருஷ்ணனின் சேவைகளையும் அவரது திறமைகளையும் பாராட்டி வேறு சில உறுப்பினர்களும் பேசினார்கள்.

அமைச்சர் இராதா கிருஷ்ணன் பதில் அளித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

மூன்று மாதங்களுக்குள் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். பால் ஒரு போத்தல் 11 ரூபாவாக விற்கப்படும் போது ஒரு போத்தல் தண்ணீர் 20 ரூபாவுக்கு விலை போகிறது. பால் உற்பத்தியாளர்கள் பயனடைவதற்கான வழிவகைகள் செய்யப்படும். இந்து ஆலய குருமார்கள் கைது செய்யப்படுவது பற்றி உரியவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம். நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம். என்னால் இயன்றவரை எதுவித பாரபட்சமு மின்றி மலையக மக்களின் நலனுக்காக உழைத்து வருகிறேன். உங்களின் ஆலோசனைகளை நான் பெரிதாக மதிக்கிறேன். இப்படி அமைச்சர் இராதா கிருஷ்ணன் கூறினார்.

— கண்டியூர்க்காவலன்

# தமிழ்க் கட்சிகள்கூறும் மாறுபட்ட கருத்துக்கள் *(3ஆம்பக்கத் தொடர்ச்சி)*

**அடைக்கலநாதன்**

அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடந்த பின்னர் தான் புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்களா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நாம் ஜனநாயக வழிக்கு வந்து விட்டாலும் தமிழீழக் கோரிக்கையைக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. சமாதான வழியில் தீர்வு காணமுடியாவிட்டால் புலிகளைப் போல நாமும் அதே கோரிக்கைக்குப் போக வேண்டியிருக்கும். தமிழினத்துக்கு விடுதலை வேண்டும்.

**(சித்தார்த்தன்)**

தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் அரசுக்குச் சரியான அழுத்தம் கொடுக்க முடியாத நிலைஉள்ளது. அதனால்த்தான் பிரச்சினைக்குத் தீர்வு - சமாதானம் பின்தள்ளப்படுவதாகக் கூறுவது தவறு. அப்படியானால் 1977 காலகட்டத்தில் வடக்குகிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே தெரிவாகி இருந்தபோது என்ன நடந்தது. அந்தக் கட்சியின் குரலுக்குக்கூட சிங்களத் தலைமைகள் செவிசாய்க்கவில்லையே! அப்போது பிரச்சினைகள் மேலும் சிக்கலாகின.

இது ஒரு விதண்டாவாதம். சந்தர்ப்பவாத விமர்சனம் என்றும் கூறலாம். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் அரசுடன் புலிகள் ஏற்படுத்தும் தீர்வு நாம் ஏற்படுத்தும் எந்தத் தீர்வையும்விட நிச்சயமாகக் குறைந்ததாக இருக்காது. எனவே அந்தத் தீர்வை எதிர்க்க வேண்டிய தேவை இருக்காது.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் வந்த பின்னர் தனித் தமிழ் ஈழம் அமைப்பதற்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டோம். ஆனால் புலிகள் அதை நம்பவும் இல்லை, ஏற்கவும் இல்லை.

பிரபாகரனின் போராட்டம் தேவையற்றது என்று நான் கூறவரவில்லை. பிரபாகரன் தனது இராணுவ பலத்தை ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகாண உபயோகப் படுத்தலாம். வேறு வழியில் அவர் போராடுவதால் தமிழ் மக்களுக்கு அவலங்கள் ஏற்படுகின்றன. பெரும் அழிவுகளை சந்திக்கிறார்கள்.

இன்றுள்ள உலக அபிப்பிராயப் படி தனிநாட்டுக் கொள்கை சாத்தியப் படுமா என்ற கேள்வி எழுகிறது. எனவே பிரபாகரன் அரசுடன் பேசித் தீர்வு காணவேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்து, இடைக்கால ஏற்பாடாகப் புலிகளிடம் அதிகாரம் வழங்கப்படுமானால் அதற்கு நாம் தடையாக இருக்கமாட்டோம். ஏற்றுக்கொள்வோம். பின்பு தமது பிரதிநிதி யார் என்பதைத் தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்வார்கள்.

**டக்ளஸ் தேவானந்தா**

ஜனநாயகநடைமுறைகளில் நம்பிக்கை இல்லை. யாழ்ப்பாணத் தேர்தலைக் குழப்ப முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை.

முன்னர் இல்லாத மாதிரி இம்முறை, வடக்கு கிழக்கிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.க. ஆகிய கட்சிகளிலிருந்து 15பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருக் கிறார்கள். பிரபாகரன் மீதும் அவருடைய செயற்பாடுகள் மீதும் மக்கள் கொண்ட அதிருப்தியை இது காட்டுகிறது. அத்துடன் இது பிரபாகரனுக்குத் தமிழ் மக்கள் வழங்கிய தெளிவான செய்தியுமாகும்.

முழு உலகம் இன்று பிரபாகரனுக்கு அஞ்சுகிறது. ஆனால் பிரபாகரன் இன்னொருவருக்கு அஞ்சுகிறார். யார் அவர்? தனது மாவீரர் தின உரையில் பிரபாகரன் பெயரைக் கூறாமல் ஈ.பி.டி.பியைக் குறிப்பிடுகிறார். பெயரைக் கூறினால் ஈ.பி.டி.பி பலம் பெற்றுவிடும் என்று எண்ணித்தான் அவர் பெயரைக் கூறவில்லை.

பிரபாகரனின் இன்றைய உடனடிப் பிரச்சினை இராணுவ நடவடிக்கை அல்ல, மாற்றுத் தலைமைதான். தன்னுடைய இராணுவ பலத்தால் தாமே தமிழர்களின் தலைவர் என்று பிரபாகரன் உரிமை கோருகிறார்.

ஆனால் நாங்கள் மக்கள் மூலம் வந்தவர்கள். மக்கள் தான் தமது தலைவர் யார் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

பிரபாகரனை நம்ப முடியாது. பிரபாகரனை நன்றாக விளங்கிக் கொண்டதிலிருந்தும் அவரிடம் கசப்பான பாடம் கற்றுக் கொண்டதிலிருந்தும் இதைக் கூறுகிறேன். எனினும் யாராவது பிரபாகரனை ஜனநாயக நீரோட்டத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்தால் அதற்கு நாம் குறுக்கே நிற்கப் போவதில்லை.

அவர் ஜனநாயக நீரோட்டத்துக்கு வரத் தயார் என்றால் அதை அவர் நடைமுறையில் காட்ட வேண்டும். வன்னி ஊடான யாழ்ப்பாணப் பாதையைத் திறக்க அனுமதிக்க வேண்டும். போக்குவரத்துச் சாதனங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. அவருடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளவர்களும் ராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ளவர்களும் பரஸ்பரம் இரண்டு இடங்களுக்கும் சுதந்திரமாகச் சென்றுவர அனுமதிக்க வேண்டும்.

**வரதராஜப்பெருமாள்**

பேசத்தயார் என்று கூறினர்.

அதன் விளைவாகவே இந்திய அரசாங்கம் எல்லாத் தமிழ் இயக்கங்களையும் புறக்கணித்துவிட்டு புலிகளை மட்டும் தூக்கிப் பிடித்தது. பிரபாகரனைப் பெங்களூருக்கு அழைத்துச் சென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன வுடன் பேச்சுவார்த்தை நடத்த வைத்தது.

பிந்திய காலத்தில் ஏனைய தமிழ் இயக்கங்களின் ஒற்றுமையின்மை காரணமாக அவற்றைப் பிரபாகரன் தடைசெய்து விட்டு தனித்து நின்று செயற்பட முனைந்தார்.

புலிகளால் தனித்து நின்று செயற்பட முடியாது என்பது அரசாங்கம் மேற்கொண்ட வடமராட்சித் தாக்குதலின்போது நிதர்சனம் தெரிய வந்துவிட்டது.

இந்தக் காரணங்களாலேயே தமிழீழக் கோரிக்கையை நாம் கைவிட்டோம். தமிழீழப் போராட்டம் என்பது எப்போதோ முடிந்து விட்ட கதை.

இன்றுள்ள சூழ்நிலையும் மற்றும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி விரிவான அதிகாரகளைக் கொண்ட மாநில அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடிய வழிமுறைகளையே நாம் பார்க்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். ஆயினும் அதற்காக அல்ல, எமது பாதுகாப்புக்காகவே ஆயுதங்களை வைத்திருக்கிறோம்.

நாங்கள் எப்பொழுதுமே சந்திரிகாவின் ஆதரவாளர்கள் அல்லர். அவருடன் ஓர் செயற்பாட்டு இணக்கத்துக்கு வந்திருக்கிறோம் அவ்வளவுதான். சந்திரிகாவிடம் நாம் கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. ஆனால் அவருடன் சேர்ந்து பணியாற்றி எங்கள் மக்களுடைய இலட்சியங்களை அடைய முயற்சி செய்கிறோம்.

மற்றப்படி நான் வங்கிக்கடன் பெறும் விஷயத்திலோ அல்லது அதைத் திருப்பித்தராத விஷயத்திலோ சந்திரிகா தலையிடவில்லை. லெயாட்ஸ் வீதியில் உள்ள எனது சொத்தை மூன்றரைக் கோடி ருபாவுக்கு வங்கியில் அடமானம் வைத்தேன். கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதனால் வங்கியுடன் ஓர் ஒழுங்கு செய்துள்ளேன். கடனைத் திருப்பிச் செலுத்துவேன்.

எங்களுடைய ஈ.பி.டி.பிக்கு மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த எல்லாத் தமிழ் கட்சிகளுக்கும் அரசாங்கம் பணம் கொடுக்கிறது. எவ்வளவு என்று சொல்ல மாட்டேன்.

(சுடர்ஒளி நிருபருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரண்டு மூன்று தடவைகளில் நேரம் ஒதுக்கித்தந்தும் கடைசியில் அவரால் அந்த நேரங்களில் சுடர்ஒளி நிருபருடன் பேச முடியாமல் போய்விட்டது. எனவே வீக் என்ட் எக்ஸ்பிரஸ், சன்டே லீடர் பத்திரிகைகள் சமீபத்தில் அமைச்சர் தேவானந்தா கூறிய கருத்துகள் என்று பிரசுரித்தவற்றின் சாரத்தையே இங்கே தந்திருக்கிறோம்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | சன் டிவி நிகழ்ச்சி |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்டினி | சக்தி வீக்கென்ட் மெட்டினி |
| 13.30-14.00 | அக்கா | அக்கா | அக்கா | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | சக்தி மெட்டினி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | வசந்த நிலா |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | சன் டிவி நிகழ்ச்சிகள் | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாஸி | கிருஷ்ண தாஸி | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகன் | அரட்டை அரங்கம் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | இசைக் கோலம் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | புன்னகை |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்.... | யன்னல் |

# பல்கலை மாணவர்களுக்கு சங்கிலியன் படை கடிதம்

யாழ்ப்பாணத்தில் தேர்தல் சமயத்தில் தமிழ் அரசியல் பிரமுகர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் கிலியை ஏற்படுத்திய 'சங்கிலியன் படை' தற்போது அதன் கவனத்தை யாழ். பல்கலைக்கழகத்தின் பக்கம் திருப்பி இருப்பதாய் தெரிகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோசமான 'ராக்கிங்' சம்பவங்களும் அவை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் காட்டிவரும் மெத்தனப் போக்குமே சங்கிலியன் படையின் கவனத்தை ஈர்த்திருப்பதாய் தெரிகிறது.

''யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு சங்கிலியன் படையினரின் வேண்டுகோள்'' என்ற தலைப்பில் கடந்த வாரம் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியாகியிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் உள்ளூர் பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் சிலவற்றுக்கும் இந்தத் துண்டுப் பிரசுரம் தபாலில் கிடைத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய மாணவர்களுக்கு!

கடந்த சில மாதங்களாகப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளினதும் அவர்களினது கைக்கூலிகளான தமிழ்க் குழுக்களினதும் ஆக்கிரமிப்பு, அத்துமீறல்களுக்கு எதிராகக் குரல் எழுப்பி, தமிழ் மக்களின் உரிமைக் குரலாக சமுதாயத்தில் திகழ்ந்து வருகின்ற இவ் வேளையில் உங்களின் உணர்வுகளுக்கும் உன்னத பணிகளுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் சிங்களப் படைகளினாலும், தமிழ் விரோதக் குழுக்களினாலும் விலைபேசி வாங்கப்பட்ட ஒரு சிலர் செயற்பட்டு வருகின்றனர். அவர்களின் செயற்பாடுகளில் பின்வருவன எம்மால் இனம் காணப்பட்டுள்ளன.

- திட்டமிட்டுப் பீடங்களுக்கு இடையிலும், தனிப்பட்ட மாணவர் குழுக்களுக்கு இடையிலும் முரண்பாடுகளை உருவாக்க முயற்சித்தல்.
- சிரேஷ்ட மாணவர்கள் என்ற நிலையில் இருந்து உணர்வுள்ள கீழ்ப்பிரிவு மாணவர்களை அதிகாரம் மூலம் அடக்க முற்படல்.
- பொறுப்பில் உள்ள தலைவர்கள் மாணவர்களின் உணர்வுகளை உதாசீனம் செய்தல்.
- பொதுக்கூட்டங்களில் மேடைகளில் ஏறி மாணவர்களின் உணர்ச்சிகளை மழுங்கடிக்கும் வகையில் வசனங்களை முழங்குதல்.
- புதுமுக மாணவிகளை அறைகளுக்கு அழைத்துச் சென்று தகாதமுறையில் அவர்களுடன் நடந்து கொள்ளுதல்.
- வளாகத்தின் முன் உள்ள வர்த்தக நிலையமொன்றில் மாலை நேரங்களில் மது போதையில் நின்று வீதியால் செல்லும் மாணவிகள் மீது துஷண வார்த்தைகள் பிரயோகித்தல்.
- நலிவடையச் செய்யப்பட்டவர்களுக்குக் கைகொடுக்க முற்படும்போது இடையூறு விளைவித்தல்.
- பொது விடயங்களில் முன்னின்று உழைக்கும் மாணவர்களைத் தனிப்பட்ட முறைகளில் விமர்சனம் செய்தல், தாக்கமுற்படல்.

இவை போன்ற பல விடயங்களில் விலைபேசி வாங்கப்பட்ட சக்திகள் செயற்பட்டு வருகின்றமை எம்மால் நன்கு இனம் காணப்பட்டுள்ளது. இவர்கள் தமது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாதவிடத்து எமது கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது சங்கிலியன் படையணி.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்காக பல்கலைக் கழக மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களில் குதித்துவருகிறார்கள். அதேவேளை பல்கலைக்கழகத்தில் 'ராக்கிங்' என்ற போர்வையில் புதுமுக மாணவர்கள் மீது கடுமையான இம்சைகள் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றன.

அத்துடன் மாணவர்கள் குழுக்களாக மோதல்களில் ஈடுபடுவது பீடங்களுக்கு இடையே பிளவுகள் எனத் தகாத சம்பவங்களும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

புலிகளின் 'றப்பர் ஸ்டாம்பு' அமைப்பு எனக் கருதப்படும் சங்கிலியன் படையணியின் எச்சரிக்கை நோட்டீஸ் வெளியான கையோடு மோசமான 'ராக்கிங்' சம்பவங்களில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தீவிரப்படுத்தி இருப்பதும் தெரிகிறது.

மோசமான 'ராக்கிங்' குற்றச் சாட்டுகளுக்கு இலக்கான 13 மாணவர்கள் கடந்த வாரம் நிர்வாகத்தால் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை பல்கலைக்கழகத்துக்குள் ராக்கிங்குக்கு எதிரான மாணவர் அணி ஒன்று உருவாகி வருகிறது. ராக்கிங்குக்கு எதிரான மாணவர் ஒன்றியம் ஒன்றை(Anti Raggers Students Union) உருவாக்குவதற்கான முற்போக்கு முயற்சியிலும் இக்குழுவினர் தீவிரமாக இறங்கி இருப்பதாகத் தகவல். இது வரவேற்கத்தக்க விடயம்.

## குமாரதுங்க சிலை

பிரபல நடிகரும், அரசியல்வாதியுமான விஜய குமாரதுங்காவின் 10 அடி உயரமான - ஒன்றரைத் தொன் எடையுள்ள வெண்கல உருவச்சிலை யாழ். நகரில் ஆரியகுளம் சந்திப் பகுதியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி நிறுவப்பட உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இதனை அறிவித்தார்.

அத்துடன் மறைந்த முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு கோப்பாய்ப் பகுதியில் சிலை நிறுவப்படும் என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

விஜயகுமாரதுங்க தமிழ் மக்களால் மதிக்கப்பட்ட ஒரு தலைவர். ஸ்ரீமாவோ நாட்டின் பிரதமராக நீண்டகாலம் பதவியில் இருந்தவர். அத்துடன் உலகின் முதலாவது பெண் பிரதமரும் கூட. இருவரது சிலைகளையும் யாழ்ப்பாணத்தில் நிறுவுவது வரவேற்க வேண்டிய விடயமே.

ஆனால் சிதைவுண்டு கிடக்கும் யாழ்ப்பாணத்தில் இந்தச் சிலைகளை நிறுவுவதில் காட்டப்பட்ட அக்கறையையும் அவசரத்தையும் அரசு ஏனைய விடயங்களில் காட்டாமல் இருப்பது ஏன்?

யாழ்ப்பாண மக்களின் விலை மதிக்க முடியாத சொத்தான யாழ். பொது நூலகத்தை புனரமைக்கப் போவதாகக் கூறிப் பதவிக்கு வந்தவர் சந்திரிகா குமாரதுங்க. அவரது அரசின் இரண்டாவது ஆட்சிக்காலம் இது. நூலகத்தைப் புனரமைக்கும் பணி நத்தை வேகத்தில் தானும் நகர்வதாய்த் தெரியவில்லை.

இந்த நூலகப் புனரமைப்புக்கென பெருமளவு நிதி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து தினமும் வந்து குவிந்தவண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அது எங்கே போகின்றது எனத் தெரியவில்லை.

யாழ். மாநகரின் அடுத்த மேயராக வரவிருக்கும்




தற்போதைய பிரதி மேயர் என். ரவிராஜ் இந்த நூலகப் புனரமைப்பில் அரசு அக்கறையின்றி இருப்பதாகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

யாழ். நூலகத்தைக் கட்டியெழுப்பவென தெற்கில் செங்கட்டிகளும், புத்தகங்களும், சேகரிக்கும் இயக்கம் ஒன்று பெரும் ஆரவாரப் பிரசாரங்களுடன் தொடங்கப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட செங்கட்டிகளுக்கும், புத்தகங்களுக்கும் என்ன நடந்தது என்பது கூடத் தெரியவில்லை.

யாழ். நூலகத்தைக் கட்டி நிமிர்த்தி விட்டு அதற்கு அருகே தலைவர் விஜயகுமாரதுங்கவின் சிலையை நிறுவியிருந்தால் யாழ்ப்பாணத்து மக்கள் அதை வரவேற்றிருப்பார்கள். தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்பதை விளங்கி வைத்திருந்த தலைவரான விஜய குமாரதுங்கவின் ஆத்மா கூட அதனையே விரும்பியிருக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் போராளி தியாகி பொன். சிவகுமாரனுக்கு உரும்பிராயில் சிலையை நிறுவ பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்காதது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம்.

நாட்டில் ஆட்சியமைப்பவர்களுடன் பேரம் பேசும் நிலைக்கு வளர்ந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஈ.பி.டி.பி. கட்சியின் பிரதேச சபை நிர்வாகம் உரும்பிராயில் இந்தச் சிலையை நிறுவ முடியாத அதிகாரங்களுடன் செயற்பட்டு வருகிறது.

## நிவாரணத்தில் வெட்டு

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கான நிவாரண உணவு விநியோகத்தில் இடம்பெறும் மோசடிகள் குறித்து கடந்தவாரம் இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அது தொடர்பான ஆரவாரங்கள் அடங்குவதற்கு முன் பொதுமக்களின் நிவாரணத்தில் சத்தம் சந்தடி இன்றிக் கைவைத்திருக்கின்றது அரச நிர்வாகம்.

வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவியை இரந்து பெற்றுக்கொள்ளுவதற்காக ஜனாதிபதி ஐரோப்பாவில் தங்கி இருந்த வேளை யாழ்ப்பாணத்தில் நிவாரண வெட்டு ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றது அரசு.

கொழும்பில் இருந்து வந்த உத்தரவை அடுத்து பொது மக்களின் நிவாரணத்தை வெட்டுவதற்கான வேலைகள் முழு வீச்சில் தொடங்கி விட்டன.

நிவாரணம் பெறும் குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. கிராம அலுவலர்கள் சமுர்த்தி மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நிவாரணம் வழங்கப்பட வேண்டிய குடும்பங்கள் எவை என்பதைச் சிபார்சு செய்யும் என்று உள்ளூர் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் [illegible] சனத்தொகையில் 90 சதவீதமானோர் நிவாரணம் பெறுகின்றனர். வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுவோர் மற்றும் வர்த்தகத்துறைகளில் ஈடுபடுவோர் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்வோர் என அனைவருமே நிவாரணம் பெறுகின்றனர்.

எனவேதான் நிவாரண விநியோகத்தை மீளாய்வு செய்யவேண்டி இருப்பதாகத் தங்கள் நடவடிக்கைக்கு நியாயம் கற்பிக்கின்றனர் அரச அதிகாரிகள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் குடும்பங்கள் தற்போது வசிக்கின்றன. ஒரு லட்சத்து 15 ஆயிரம் குடும்பங்கள் நிவாரணம் பெறுகின்றன என்று புள்ளி விவரங்களுடன் விளக்கினார் ஓர் அதிகாரி.

நிவாரணம் பெறத்தகுதியான குடும்பங்களின் மாத வருமானத்தினை 1500 ரூபாவிலிருந்து 750 ரூபாவாகக் குறைத்தே தற்போதைய மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதைவிட நிவாரணம் நிறுத்தப்படவுள்ள குடும்பங்களின் தகைமைப்பட்டியல் ஒன்று வெளியாகி உள்ளது.

அதில் உள்ள அம்சங்கள் மேலும் வியப்பூட்டுவனவாய் உள்ளன.

ஓட்டோ அல்லது கார் ஒன்றைச் சொந்தமாக வைத்திருக்கும் குடும்பத்துக்கு இனி நிவாரணம் கிடைக்க மாட்டாது.

தொலைத் தொடர்பு நிலையங்களைச் சொந்தமாக நடத்துவோர், வீடுகளை வாடகைக்கு விட்டிருப்போரும் கூட நிவாரணம் பெறும் தகுதியை இழக்கின்றனர்.

இந்த மீளாய்வுப் பணியின் மூலம் சுமார் 25 சதவீதமான குடும்பங்களின் நிவாரணமே வெட்டப்படும் என்று முதலில் தகவல் வெளியானது. பிறகு அது 65 சத வீதமாக உயர்ந்தது. எனினும் இந்த நிவாரண வெட்டுத் தொடர்பாக எந்த விவரத்தையும் உத்தியோகபூர்வமாக வெளியிட யாழ். செயலக அதிகாரிகள் தயங்குகின்றனர் போல் தெரிகின்றது.

மீளாய்வு வேலைகள் ஆரம்பித்து இரு வாரங்கள் கழிந்து விட்ட நிலையிலும் கூட (இதனை எழுதும்வரை) யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளோ அன்றி யாழ். மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களோ இது விடயத்தில் மூச்சும் காட்டவில்லை. அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் இவ்வாறு நடந்து கொள்வது நிவாரணத்தை நிறுத்தி அதற்குச் செலவாகும் நிதியை வேறு தேவைக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கும் அரசின் கபட நோக்கத்துக்கு துணை போவதாய்ப்படுகின்றது.

போர் தீவிரமடைந்துள்ள குடாநாட்டில் எந்த வேளையிலும் எந்தப் பகுதியில் இருந்தும் மக்கள் பெருமெடுப்பில் வெளியேறும் நிலை காணப்படுகிறது. விவசாயம் மற்றும் தொழில் வசதிகளில் நிச்சயமற்ற நிலையே நீடிக்கின்றன. இந்நிலையில் மக்களின் நிவாரணத்தில் கைவைக்கும் செயலை ஏற்கமுடியாது என்கின்றன இங்குள்ள தொண்டு நிறுவனங்கள்.

போருக்காக கோடிக்கணக்கில் பணத்தைத் திரட்டும் அரசு நிவாரணத்தை மட்டும் நிறுத்த முயற்சிப்பது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஒரு வருடத்துக்கு முன்னரும் இதேபோன்று நிவாரண வெட்டு ஒன்றை அமுலுக்குக் கொண்டுவர அரச முயன்றது. அச்சமயம் யாழ்ப்பாணத்தில் அதற்கு எதிராக உருவான வெகுஜன எழுச்சி காரணமாக அது பின்னர் கைவிடப்பட்டது.

இந்தத் தடவையும் நிவாரண வெட்டுக்கு எதிராக வெகுஜனப் போராட்டம் வெடிக்கும் என்று யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் எச்சரித்திருக்கிறது. இந்த நிவாரண வெட்டை நிறுத்துவதற்கு இம்மாதம் 31 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதன் பின் யாழ்ப்பாணத்தில் வெகுஜனப் போராட்டங்கள் முடுக்கிவிடப்படவுள்ளன.

## பாதுகாப்பால் பாதிப்பு

யாழ் நகரில் ஆரியகுளம் மற்றும் ஸ்ரான்லி வீதிப் பகுதிகளைச் சேர்ந்த ஒரு தொகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நத்தார் பண்டிகைக் காலத்தில் தங்கள் வியாபார நடவடிக்கைகள் முடங்கிப்போனதாக முறையிட்டிருக்கின்றனர்.

இதற்குக் காரணம் அப்பகுதியில் கடந்த ஒருவாரத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டிருந்த கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள்தான்.

பண்டிகைக் காலத்தில் ஏன் இந்தப் பாதுகாப்பு?

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா யாழ். நகரில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமையகத்தில் தங்கியிருந்ததே இத்தனை பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கும் காரணம். ஈ.பி.டி.பியின் தலைமையகம் ஸ்ரான்லி வீதியில் முன்னர் ஸ்ரீதர் தியேட்டர் இயங்கிய கட்டடத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்தி முதல் ஆரியகுளம் சோதனைச்சாவடி வரையான வீதிப்பகுதி முதலில் ஓரிரு நாட்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. பின்னர் அது குறித்து முறைப்பாடுகள் எழுந்ததை அடுத்து ஆரியகுளம் சோதனை நிலையப் பகுதி ஊடாக மட்டும் கடும் சோதனையின் பின் மக்கள் உள்ளே சென்று வர அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் 110 வர்த்தக நிலையங்களில் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ். வணிகர் கழகத்துக்கு முறையிடப்பட்டிருக்கிறது. இது விடயத்தை வணிகர் கழகம் அமைச்சர் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

**வலிகாமத்தான்**

# ராசி பலன்



**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

இராசிநாதன் இன்பத்தானமான ஏழாம் வீட்டில் இருப்பது சிறப்பு இருப்பினும் இராசியில் சனி இருப்பது பின்னடைவே. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சுற்றத்தார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனதில் தெய்வீக எண்ணமும் பக்தியும் வளரும். அத்துடன் உலகியல் ஆசையும் இருக்கும். எதிரிகள் தங்களுக்குள் மோதி அழிந்து போவர். குடும்பத்தினரைப் பொறுத்த மட்டில் பகலில் சண்டை இருந்தாலும் இரவில் அமைதி இருக்கும். காதலர் வாழ்வில் வசந்தம் வீசும் தொழில் துறையில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள் தொழிலில் மதிப்பும் பதவி உயர்வும் இருக்கும். சயன, போசன, சுகம் உண்டு.



**இடபம் : கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

இராசிநாதன் சுக்கிரன் முயற்சித்தானமான பத்தாம் வீட்டில் இருப்பது யோகம் இருந்தாலும் இராசியில் குரு இருப்பது சற்று தாமதத்தைத் தரலாம். கல்வியில் மட்டுப்படுத்தப்பட்ட ஊக்கம் இருக்கும். பணத்தடை வரலாம். சகோதர உதவி இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படும். உறவினர் வேண்டா வெறுப்பாக நடப்பார்கள். மனம் பூரண அமைதியாய் இருக்கும். நல்ல ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் உங்களைக் கண்டு அஞ்சுவார்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவுக்கு இடமுண்டு. ஒரு பெரியவர் சமாதானமாக உதவுவார். காதலர் வாழ்வில் புயல் வீசலாம். தொழில் அமைதி உண்டு.



**மிதுனம்: மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இராசிநாதன் புதன் எட்டாம் வீட்டில் இருப்பதும் இராசியில் ராகு இருப்பதும் நல்லதல்ல. இருந்தாலும் குருவின் பார்வையும் அரவணைப்பும் ஆறுதல் தரும். கையில் காசு இருக்கும். சகோதர உதவி உண்டு. வீடு, வாகனங்களால் ஆறுதல் உண்டு. உறவினர் தாமரை இலைத்தண்ணீர் போல் இருப்பர். மனம் அதி தீவிரமாக இயங்கிக் களைப்பை உண்டாக்கும். சில சமயம் நோயை உண்டாக்க வழி கோலும். எதிரிகள் தீங்கு செய்ய முற்படுவர். குடும்ப விசுவாசம் குறையலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் செய்யும் இடத்தில் குறைகாண முயலுவர். பதவி பறி போகாது.



**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

இராசி நாதன் சந்திரன் எட்டாம் வீடு முதல் பதினொராம் வீடு வரை சஞ்சாரம் செய்வது நலம். சுக்கிர பார்வை இராசிக்குக் கிடைப்பது விசேஷம். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டாலும் வரவு ஏதோ வழியில் வரும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர் அன்பாக இருப்பார்கள். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும், வாகனம் செலுத்துவதில் கவனம் தேவை. மின்சாரம் நெருப்பு ஆகியவற்றால் ஆபத்துண்டு. உறவுகளில் பகை வர இடம் உண்டு. மனம் கானல் நீரை நம்பும் கற்பனையில் சுகம் காண முற்படும். எதிரிகள் பகையை மறந்து நண்பர் ஆகலாம். குடும்ப சுகம் உண்டு. காதல் பூவாகி காயாகி கனியலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் அமைதி இல்லை.



**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

இராசி நாதன் சூரியன் பூர்வ புண்ணியஸ் தானமான ஐந்தாம் வீட்டில் இருப்பதும் இராசிக்கு சுக்கிர பார்வை கிடைப்பதும் நல்லதே. பொருளாதாரம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுக் கிடையே சிறு சச்சரவுக்கு இடமுண்டு. வீடு, வாகனங்களால் சமசுகம். உறவினர் சுற்றத்தார் நீங்கள் நடந்து கொள்ளும் விதத்துக் கேற்ப நடப்பார்கள். நீங்கள் கண்ட கனவு பலிக்கலாம். மனதில் ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றி நிதானமாக முடிவு எடுக்கலாம். எதிரிகளால் தொல்லை இல்லை பலம் குறைந்து போவார்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப சுகம் உண்டு. காதல் வாழ்வில் தென்றல் வீசும். தொழிலில் அமைதி உண்டு.



**கன்னி : உத்தரம், 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

இராசிக்கும் இராசி நாதனுக்கும் குருவின் பார்வை கிடைப்பது யோகமே. பணப்பற்றாக் குறை நிலவும் சில சமயம். கடன்பட நேரிடலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரர்களுக் கிடையில் மனஸ்தாபத்திற்கு இடம் உண்டு. வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனத்தில் எண்ணங்கள் அலைமோதும் மன அமைதி ஏற்படுவது கஷ்டம். எதிரிகளின் பலம் குறையும் பெண்பாலாரோடு பகை கொள்ள வேண்டாம். குடும்பத்தில் அமைதி நிலவும் விசுவாசம் இருக்கும். குடும்ப இரகசியம் பாதுகாக்கப்படும். காதலர் வாழ்வில் தென்றல் வீசும். உடல் ஆரோக்கியம் சில சமயம் பாதிக்கலாம் சமிபாட்டில் சிக்கல் இருக்கும். தொழில் அமைதி உண்டு.



**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

இராசியில் செவ்வாய் இருப்பதும் சனி பார்ப்பதும் பதற்றமே. இருந்தாலும் இராசி நாதன் சுக்கிரன் ஐந்தாம் வீட்டில் இருப்பதால் ஆறுதல் உண்டு. பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்களுள் சண்டையும் சமாதானமும் என்ற நிலை. வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். உறவினர் விசுவாசமாக இருப்பார்கள். மனதில் மன்மதனின் ஞாபகம் வரும் இன்பத்தை நாடும். எதிரிகளால் தொல்லை இல்லை. குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய அமைதி நிலவும். காதலர் வாழ்விலும் கலக்கம் இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும் தொழில் துறையில் ஆதரவும் மதிப்பும் இருக்கும்.



**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

இராசிநாதன் செவ்வாய்க்கு சனியின் பார்வையும் இராசிக்கு குருவின் பார்வையும் கிடைப்பது சம சுகமான பலனே. கையில் உள்ள பணம் கரைய வாய்ப்புண்டு. கல்வியில் ஆர்வம் உண்டு. சகோதர உதவி இருக்கும், உற்றார், உறவினர் விலகியே இருப்பர். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படும் பிரயாணம் அமையும். மனம் யதார்த்தமாக சிந்திக்கும். நடை முறை சாத்தியமான செயலில் இறங்கும். எதிரிகள் செயல் அற்றுப் போவர் சில சமயம் தூர தேசம் போவர். குடும்பவாழ்வில் இளமை திரும்பும். காதலர் வாழ்வில் கிளி மொழியில் சிந்து பாடுவர். தொழில் துறையில் அமைதி நிலவும்.



**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1**

இராசிநாதனோ பகை வீட்டில். இராசியிலோ ராகு, கேதுவின் தொடர்பு இருந்தாலும் சூரியன் இராசியில் இருப்பது ஓர் அளவுக்கு ஆறுதல் உண்டு. கையில் பணம் இருக்கும் செலவு அதிகரிக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் இருக்கும். உறவினர் விசுவாசமாக இருப்பர். மனச்சஞ்சலம் இருக்கும். மனதில் வீண் பயம் தோன்றும் கற்பனையில் வாழ்வீர்கள். எதிரிகள் நன்மை செய்வார்கள் அல்லது நண்பராவார்கள். குடும்பத்தில் வீண்பிடிவாதம் தோன்றி மறையும். காதலர் வாழ்வில் அச்சுறுத்தல் தோன்றலாம். தொழில் துறையில் அமைதி நிலவும்.



**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

இராசி நாதன் சுபஸ்தானத்தில் இராசியில் புதன் குருவின் பார்வை இவை நல்ல பலன்களைத் தரும். வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்பு பிரகாசமாகும். கையில் பணம் இருக்கும் கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் அன்பாய் இருப்பர். உறவினரிடையே மனக் கசப்பு தோன்றலாம். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். வாகனம் ஓட்டுவதில் கவனம் வேண்டும். மனம் அமைதிப்படும் ஆரோக்கியமான எண்ணங்களும் தெய்வீக பக்தியும் வளரும். எதிரிகள் மறைமுகமாகக் கெடுதி செய்வர் இறுதியில் தோற்பர். குடும்ப வாழ்வில் முன்னைய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வீர்கள். காதலர் வாழ்வு அன்பு மயம். தொழில் துறையில் புதிய சிக்கல் தோன்றலாம்.



**கும்பம்: அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

இராசிநாதன் வீரியஸ்தானத்தில் பலம் குன்றினாலும் சுக்கிரன் இராசியில் புதுப் பலத்துடன் இருப்பதால் அமைதியாய் வாழலாம். கல்வியில் ஆர்வம் தோன்றும். கையில் பணம் இருக்கும். உடல் நலம் நன்றாக இருக்கும் முன்பு இருந்த நோய் விலகும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். இனபந்துக்களுடன் கூடிக் குலாவ சந்தர்ப்பம் வரும். மனதில் எதிர் மாறான எண்ணங்கள் தோன்றும். வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படலாம் நிதானம் வேண்டும். எதிரிகள் உங்களுடன் சேர்ந்து இருப்பர். குடும்பத்தில் அமைதியுண்டு. காதலர் வாழ்வு திருப்தியாய் இருக்கும் தொழில் அமைதியுண்டு.



**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசிநாதன் குரு வீரியஸ்தானத்தில் வக்கிரக கதியில் இருப்பது மத்திம பலனே. பணத்தட்டுப்பாடு நிலவும் சில சமயம் கடன்பட நேரிடலாம். கல்வியில் ஆர்வம் குன்றலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். உறவினர் ஒடும் புளியம்பழமும் போல இருப்பர். மனம் கற்பனையில் இன்பம் காணும். ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும். எதிரிகள் தாங்களாகவே சிக்கலில் மாட்டிக் கொள்வர். குடும்பத்தில் பூரண அமைதி நிலவும். காதலர் வாழ்வில் மந்த மாருதம் வீசும். நண்பர்களின் ஆதரவு இருக்கும். தொழில் துறையில் உங்களின் உத்தி வரவேற்கப்படும்.

**பொ.சந்திரன்**

**31—12—2000 இருந்து 06—01—2001 வரை**

# பெற்ற குழந்தைகளை தாயே கொன்றாளா?

பெற்றெடுத்த தனது இரண்டு ஆண் குழந்தைகளை ஒரு தாயே கொலை செய்தாளா? இவ்விதம் குற்றஞ் சாட்டப்பட்டு அப்பெண்ணுக்கு, ஆயுள் தண்டனையை இங்கிலாந்து செஸ்டர் கிரவுண் நீதி மன்றம் வழங்கியிருக்கிறது.

"நினைக்கவே நெஞ்சம் பதறும் இந்தக் கொடூரக் கொலையை என் மனைவி செய்திருக்க மாட்டாள்" என்று கணவர் ஸ்டீபன் கதறினார். இருந்த போதிலும், சாலி மீதான குற்றச் சாட்டுக்குப் போதிய ஆதாரங்கள் இருந்தன.

பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை ஒரு தாய் கொல்லத்துணிவாளா?.

இங்கிலாந்து மக்கள் மனதில் இந்த நினைவுகள் அசை போட்டுக்கொண்டிருக்கையிலே குற்றம் நிரூபிக்கப்பட்டு சாலி சிறையில் அடைக்கப்பட்டு விட்டாள்.

[illegible]ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட [illegible]—கிளார்க் தம்பதி இருவருமே வழக்கறிஞர்கள். புது மணத்தம்பதியராய் சிறகடித்த இவர்களுக்குத் திருமணமாகி ஆறு வருடங்களின் பின்னர் தான் 1996ஆம் ஆண்டு ஒரு குழந்தை பிறந்தது. அடுத்து இரு ஆண்டுகளின் பின் மற்றொரு குழந்தை பிறந்தது.

கிறிஸ்டோபர், ஹரி என்று பெயர் கொண்ட அந்தக் குழந்தைகளும் பிறந்து சில நாட்களிலேயே இறந்து விட்டனர்.

குழந்தைகளின் மர்ம மரணங்கள் சந்தேகத்துக்கிடமானவையாக இருக்கவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரேத பரிசோதனைகளை நடத்திய டாக்டர்கள் குழந்தைகளின் மரணங்கள் இயற்கையானவை அல்ல. அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மருத்துவ அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தினர்.

விசாரணைகளில் குழந்தைகளின் தாயான சாலி கொலையாளி என 12 ஜூரர்களில் 10 பேர் தீர்ப்புக் கூறினர்.

சிறைச்சாலை அலுவலர்கள், காவலாளிகள் எல்லோரும் சாலி இந்தக் கொலைகளைச் செய்திருக்க முடியாது. அவள் விடுதலையாகி விடுவாள் என்று எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால், சாலிக்கு ஆயுள் சிறைத் தண்டனை கிடைத்துவிட்டது.

இவ்வழக்குப் பற்றி சாலியின் கணவன் ஸ்டீபன் கூறியதாவது:

"சாலி அன்பானவள், அவள் ஒன்றும் அறியாதவள். அவள் எனது குழந்தைகளைக் கொன்றிருக்க மாட்டாள்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு எங்களுக்கு அதிர்ச்சி அளித்திருக்கிறது. நாங்கள் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்துச் சென்றோம். ஆனால் எங்களது வழக்கறிஞரின் இறுக்கமான முகமே எமக்குப் பாதிப்பான தீர்ப்பைப் பெற்றுத் தந்துவிட்டது" என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

"ஒரு தாய் தனது குழந்தைகளைக் கொலை செய்வாளா? அவ்விதம் கொலை செய்யும் அளவுக்கு அந்தக் குழந்தைகள் செய்த தவறுதான் என்ன?" இந்தக் கேள்விக்குச் சாலிதான் பதில் சொல்ல வேண்டும்.

—ஷர்மிலா

# பொன் விழாக் கண்டு
# பிறந்த மேனியுடன் பணி

## சந்திவெளி வைத்தியசாலையின் அவல நிலை

மிஸ்டர் க்றோ அவசரமாக அலுவலகத்துக்குப் பறந்து வந்து ஐந்து நிமிடம் கூட ஆறவில்லை.

டெலிபோன் அலறியது.

மிஸ்டர் க்றோதான் டெலிபோனை எடுத்தார். "மிஸ்டர் க்றோ பேசுகிறேன்"

மறுமுனையில் "ஹஹ்ஹ... ஹஹ்ஹ... ஹா என்று முதலில் சிரிப்பொலி வந்தது. அடுத்து 'மிஸ்டர் க்றோ! உங்களுக்குத்தான் டெலிபோன் எடுத்தேன் நீங்களே டெலிபோனில் வந்து விட்டீர்கள். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்திருக்கிறது. வெற்றி... வெற்றி...! என்று அந்தக்குரல் தொடர்ந்து ஒலித்தது.

யார் பேசுகிறீர்கள்?" இது மிஸ்டர் க்றோவின் கேள்வி.

"மிஸ்டர் க்றோ, நான் மட்டக்களப்பு சந்திவெளி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பேசுகிறேன்" என்று மறுமுனையில் இருந்து பதில் வந்தது.

"நல்லது என்ன சமாச்சாரம்? இது மிஸ்டர் க்றோவின் அடுத்த கேள்வி.

"எங்கள் பகுதி ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாகவே இல்லை. ஏகப்பட்ட குறைபாடுகள். சுமார் அரை இலட்சம் பேர் அதனால் அவதிப்படுகிறோம். அதைச் "சுடர்ஒளி"யில் சுட்டிக்காட்டி, மிஸ்டர் க்றோ நீங்கள்தான் எங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மறுமுனையில் கெஞ்சல்.

மிஸ்டர் க்றோவுக்கு இப்படியான விடயங்கள் என்றால் "சட்புட்" என்று ஏதாவது செய்தாக வேண்டும்.

"அது சரி விபரம் வேண்டும்" என்று மிஸ்டர் க்றோ சொல்லி முடிக்கு முன்னரே, "இன்று எங்கள் சங்க உறுப்பினர் ஒருவர் கொழும்புக்கு வருகிறார். அவசியம் கொடுத்து அனுப்புகிறேன் என்றார் சந்திவெளி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர்.

விவரங்கள் தாமதமின்றி மிஸ்டர் க்றோவின் கைக்கு வந்தன. படித்துப் பாருங்கள் பரிதாபத்தை.

எமது கிராமத்தில் கொழும்பு – மட்டக்களப்பு பிரதான வீதியில் புராதன அரசினர் வைத்தியசாலையொன்றுள்ளது.




இது 1940 – 1950 ஆம் ஆண்டு வரை ஒரு தனியார் வீட்டில் இயங்கி வந்தது. 1950 ஆம் ஆண்டு முதல் அரசின் கட்டடத்தில் சேவை செய்யத் தொடங்கியது.

இம்மில்லேனிய வருடத்தில் பொன்விழாவையும் கண்ட இவ் வைத்தியசாலை இன்று வரை மாற்று ஆடையில்லாமல் பிறந்த மேனியுடனேயே சேவை செய்து வருகிறது. இக்குறையை நாம் எடுத்துக் கூறாத அரசியல் பிரமுகர்களோ, அதிகாரிகளோ இல்லை.

நமது ஜனாதிபதி கூட அறிந்த விடயம் இது.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று பழமொழி தான் உண்டு. ஆனால், அதன்படி ஒழுகியவர்கள்தான் இல்லை.

இவ்வைத்தியசாலை முன்னாள் எம்.பி.க்கள், தற்போதைய எம்.பிக்கள் அரசியல் பிரமுகர்கள், சுகாதார திணைக்கள அதிகாரிகள் என்போருக்கு உப்பிட்டுள்ளது. ஆனால், அவர்கள் அதனைக் கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை.

இவ்வைத்தியசாலையை நாடி நிற்கும் மக்கள் தொகை சுமார் அரை லட்சம். இது சம்பந்தமாக பலருக்கு எழுதியதற்குச் செலவிட்ட பணமே போதும் இவ்வைத்திய சாலையைச் சுற்றி மதில் அமைப்பதற்கு.




வைத்தியசாலை வாசலால் தொலைபேசிக் கம்பிகள் செல்கின்றன. ஆனால் தொலைபேசி இணைக்கும் பெரும்பாக்கியம் இவ்வைத்தியசாலைக்கு இல்லை.

எமது அரசியல் பிரமுகர்கள் தேர்தல் காலத்தில் மட்டும் வருவார்கள். இந்த அவல நிலை பற்றி அறாக் குறையாகப் பேசுவார்கள் அவ்வளவுதான்.

அண்மைத் தேர்தல் காலத்தில் வைத்தியசாலை முகப்பில் வைக்கப்பட்டிருந்த பதாகையின் படம் இத்துடன் இணைக்கப்படுகின்றது. (அருகில் அது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது)

இவ்வைத்தியசாலையை விட்டால் ஏனைய வைத்தியசாலைகள் இப்பிரதேசத்திலிருந்து 7 கி.மீ. அல்லது 16 கி.மீ. தூரத்திலேயே இருக்கின்றன.

பிரசவம், விஷக்கடி, தொற்று நோய்கள், பாரிய காயங்கள் போன்றவற்றுக்கான மருந்து வசதிகள் இவ்வைத்தியசாலையில் இல்லாமையினால், அதிகம் பேர் மரணம் அடைகின்றனர். இப்பிரதேச மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புக்கள் அம்புலன்ஸ் வசதி, தொலைபேசி வசதி, பிரசவ விடுதி வசதியுடன் இவ் வைத்தியசாலையைத் தரமுயர்த்தி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதாகும்.

இப்படி சந்திவெளி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அச்செயலாளர் சொல்வதன்படி பதினெட்டுக் கிராமங்களில் உள்ள 1... ஊர்களில் வசிக்கும் 10,418 குடும்பங்களைச் சேர்ந்த 41,534 பேர் இவ் வைத்தியசாலையை நம்பித்தான் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்போது கேட்பதெல்லாம் குறைந்த பட்சம் போதியளவு மருந்து வசதிகள், அம்புலன்ஸ் வசதி, வைத்தியசாலைத் தரம் உயர்வு அவ்வளவுதான்.

இவை அதிகமா? சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமானத்துடன் இவற்றைக் கவனிப்பார்களா?

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களின் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்

NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte, Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery

நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்தினம் பதித்த அழகிய டிசைன்களின் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte, Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellery




இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2000 டிசம்பர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது